DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் உலகில் ஒலிக்கும் தமிழ் ஏடு
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1349 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 11, 2022

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# எமது நாட்டின் பொருளாதாரத்தையோ, அல்லது நமது ஜனநாயகத்தையோ முடக்க எவருக்கும் உரிமை இல்லை என்கிறார் கனடியப் பிரதமர்

எமது நாட்டின் பொருளாதாரத்தையோ, அல்லது நமது ஜனநாயகத்தையோ அல்லது நமது சக கனடியர்களின் அன்றாட வாழ்க்கையையோ முடக்க எவருக்கும் உரிமை இல்லை என்றும் அது நிறுத்தப்பட வேண்டும் எனவும் கனடியப் பிரதமர் ட்ரூடோ தனது சமூக ஊடகப் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

கனடாவில் அரசாங்கத்தின் கோவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ச்சியாக இடம்பெறும் கனரக வாகன சாரதிகளின் ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவது குறித்து தனது கருத்தைப் பதிவிட்ட போதே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*



RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

# கனடாவின் பிரதான எதிர்க்கட்சியும் ஒட்டாவா ஆர்ப்பாட்டக்காரர்களை வீடுகளுக்கு செல்லுமாறு வேண்டியுள்ளது



கனடிய பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் சார்பில் அதன் இடைக்காலத் தலைவர் கேண்டிஸ் பெர்கன் அவர்கள் கூட தற்போது ஒட்டாவா பாராளுமன்றத்திற்கு அண்மையில் சட்டவிரோதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை வீடுகளுக்கு திரும்பிச் செல்லுமாறு வேண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக கனடியப் பிரதமர் அவருக்கு நன்றி தெரிவித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

*(தொடர்ச்சி உள்ளே 11ம் பக்கத்தில்)*

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Basement for Rent

McCowan and McNicoll

1 Room apartment for rent
Couples or small family preferred.

**Call: 647-459-0097**

### Basement for Rent


Salem / Rossland (Ajax)

Brand new 2 bedroom basement available for rent.

புதிதாக திருத்தப்பட்டுள்ள 2 அறை கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.

**Call: 647-706-4969**

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
(647) 763-0210

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### சாஸ்திரம்

மதுரை மீனாட்சி துணை
கடந்த 40 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை சாஸ்திரம்
பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம் சொன்னால் போதும்
நடக்கப்போவதை மிக துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.
தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம்
437-925-5643

### HOUSE for RENT

மார்க்கம் நகரில் **Markham / Denison** சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீடு, **basement** தவிர்த்து உடனடியாக வாடகைக்கு உண்டு.
4 வாகனங்களுக்கான **parking** உண்டு.
407 பெருந்தெரு, கடைகள் பாடசாலைகள் மற்றும் அனைத்து வசதிகளும் அருகில் உள்ளன.

**விபரங்களுக்கு:**
**(647) 282-0643**
**என்னும் இலக்கத்தை அழைக்கவும்.**

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகையகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள். குறைந்த கட்டணமே அறவிடப்படும் அழையுங்கள்

**சிவா 647 891 7725**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தமிழர்களின் கடல் வளத்தை அபகரிக்க அரச ஆதரவோடு காடைத்தனங்கள் கடற்பரப்பில் அரங்கேறுகின்றனவோ?

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலப்பரப்புக்களும். அரசிற்குச் சொந்தமான நிலங்களும் தமிழர்களுக்கே உரித்துடையன என்பதை மறுக்க முடியாது. இதனை முற்றாக நிராகரித்து தமிழர் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றி தமது இனப் பரவலை விரிவாக்க முயன்று அதில் வெற்றி கண்டுள்ளனர் தென்னிலங்கையில் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த பெரும்பான்மை இன அரசியல் தலைவர்கள்.

இவ்வாறாக தமிழர்களின் நிலப் பிரதேசங்களை அபகரித்து எக்காளமிட்ட அவர்கள் தற்போது வடக்கின் கடற் பரப்பை நோக்கிய தங்கள் கழுகுப் பார்வையை நீட்டி வருகின்றனர். ஆமாம், தமிழர்களாகிய மீனவர்கள் வடக்கில் தங்கள் வாழ்வாதாரமாகத் திகழும் நம்பியிருக்கையில் அந்த கடல் வளத்தை அபகரிக்க அரசின் ஆதரவோடு சிங்களக் காடைத்தனங்கள் கடற்பரப்பில் அரங்கேறுகின்றனவா என்ற கேள்வியே தற்போது வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்கள் நலனைப் பற்றிச் சிந்திக்கும் தரப்புக்களின் முன்னாள் உள்ள கேள்வியாக எழுந்துள்ளது.

இவ்வாறான இக்கட்டான நேரத்தில் வடக்கு கிழக்கு பகுதியை சேராத தென்னிலங்கையை சேர்ந்தவர்களும் இந்தியாவின் தமிழ் நாட்டை சேர்ந்தவர்களும் அடாத்தாக வடக்கு கடலில் புகுந்து சட்டவிரோத மீன்பிடி முறைமைகளை பயன்படுத்தி தமிழ் மீனவர்களையும் அவர்களது உடைமைகளையும் மீன்வளத்தையும் அழித்து வருகின்றனர்.

இவற்றையெல்லாம் தடுக்காது திட்டமிட்ட முறையில் வேண்டுமென்றே இவற்றை அனுமதித்து வருகிறது இலங்கை கடற்படை என்று இலங்கை -நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள்.

–தமிழர்களின் காணிகளை அபகரித்து ஒரு ஆக்கிரமிப்பு படையாக இங்கே இருக்கின்ற இலங்கைக் கடற்படை, தமிழ் மீனவர்கள் மீதான இந்த அத்துமீறல்களை அனுமதிப்பதன் மூலம் வடக்கு கிழக்கு மீனவ சமூகத்தை மேலும் மேலும் வறுமைபடுத்தி அவர்களை இந்த பகுதியில் இருந்து தாமாகவே வெளியேறப்பண்ணும் ஒரு இனப்படுகொலை நிகழ்ச்சிநிரலாகவே நான் இதை பார்க்கிறேன். என்றும் தெரிவித்துள்ளார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள்.

நாம் இவ்வாரத்தின் கதிரோட்டத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று இலங்கை அரசு தனது கடற்படையின் உதவியோடு இந்த கைங்கரியத்தை செயற்படுத்த முனைகின்றது என்பதையும் இந்த விடயங்கள் நிரூபிக்கின்றன.

அவரது பார்வையில் உண்மைகள் நிறைந்து கிடக்கின்றன. இலங்கையின் மீன் பிடி அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா என்னும் தமிழர் பணியாற்றி வருகின்றபோதிலும் கரையோர வடக்குத் தமிழ் மக்களும் மீனவ மக்களும் வாழ்வாதாரத்திற்கு அபாயம் ஏற்பட்டுள்ளதையே நாம் இன்று நேரடியாகப் பார்க்க முடிகின்றது.

உங்கள் அபிமான கனடா உதயன் ஈழத்து படைப்பாளிகளுக்கு களம் கொடுக்கும் மற்றும் மதிப்பளிக்கும் வகையில் 2022 மே மாதத்தில் “ஈழத்துச் சிறப்பிதழை” வெளியிடவுள்ளது.

# யாழ்ப்பாண மாநகர முதல்வர் மணிவண்ணன் – அபி திருமண வைபவம் யாழ் நகரில் சிறப்பாக நடைபெற்றது



யாழ்ப்பாண மாநகரத்தின் முதல்வரும் சட்டத்தரணியுமாகிய மணிவண்ணன் அவர்கள் -வாழ்க்கைத் துணையான அபி அவர்கள் ஆகியோர் திருமண வைபவம் யாழ் நகரில் சிறப்பாக நடைபெற்றது.

பல்வேறு துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் கனடாவிலிருந்து சென்று கலந்து கொண்ட நண்பரும் வர்த்தகப் பிரமுகருமான ஸ்ரீதரன் (வற்ஸ் ஸ்ரீ) அவர்கள் மணமக்களுடனும் குடும்பத்தினருடனும் ஒன்றாக நிற்பதைக் காணலாம்.
மணமகள் அபி அவர்கள் ஸ்ரீ அவர்களின் அன்புச் சகோதரியின் புதல்வி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# “நான் முதன் முதலில் துப்பாக்கியை தூக்கிய தருணம்” போராளியாக மாறிய மியன்மார் மாணவியின் கதை

பெப்ரவரி முதலாம் திகதி இராணுவ சதிப்புரட்சிக்கு பின்னர் இராணுவ ஆட்சியை எதிர்ப்பதற்காக மியன்மாரில் இளைஞர்கள் யுவதிகள் தங்கள் உயிர்களை பணயம் வைத்துள்ளனர்.

ஜனநாய கோரும் இயக்கத்திற்கு எதிரான இராணுவத்தின் ஒடுக்குமுறை காரணமாக 295 பேர் உயிரிழந்துள்ளனர்.ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் அரசியல் கைதிகளிற்கான சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆயுதப்பயிற்சிகளை பெறுவதற்காக தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி தலைமறைவாகியுள்ளனர்.

மியன்மாரின் முதலாவது புரட்சிகர குழுவில் இணைந்துகொண்டுள்ள யுவதியொருவருடன் ஆங்கிலப் பத்திரிகையின் செய்தியாளர் உரையாடியபோது பகிரப்பெற்ற விடயங்கள் கீழே காணப்படுகின்றுத.

**இது அவரின் கதை:**



*பெப்ரவரி முதலாம் திகதி நான் கண்விழித்தவேளை தொலைபேசி வலையமைப்பும் இணையசேவைகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. இராணுவசதிப்புரட்சி இடம்பெற்றுள்ளது என மக்கள் தெரிவித்தார்கள் நான் கவலையும் சீற்றமும் அடைந்தேன்.*

*பின்னர் மீண்டும் இணையச்சேவைகள் இயங்கதொடங்கியவேளை சதிப்புரட்சி குறித்த செய்திகள் எனது கையடக்கதொலைபேசியில் நிரம்பிவழிந்தன.*

*அதற்கு ஒரு வாரத்தின் பின்னர் நான் மத்திய மியன்மாரில் உள்ள எனது கிராமத்தில் இடம்பெற்ற சதிப்புரட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பெற்றோருடன் கலந்துகொண்டேன்.*

*இராணுவத்தினர் கைதுசெய்வது தாக்குவது போன்ற நடவடிக்கைகள் மூலம் ஒடுக்குமுறையில் ஈடுபட்டாலும் கிராமத்தை சேர்ந்த அனைவரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.*

*மார்ச்மாதமளவில் பொலிஸாரும் இராணுவத்தினரும் தொடர்ச்சியாக பொதுமக்களை சுட்டுக்கொல்ல தொடங்கினார்கள்.*

*இதனால் நான் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டேன்.*

*பாடசாலைக்கல்வியை பூர்த்தி செய்த பின்னர் வர்த்தகத்தில் ஈடுபட்டு சாதிக்கவேண்டும் என்ற எனது கனவு சிதறடிக்கப்பட்டது.*

*ஜுன் மாதம் நான் புரட்சிகர குழுவில் இணைந்துகொள்ளப்போகின்றேன் என்பதை எனது பெற்றோருக்கு தெரிவித்தேன்.*

*எனது பெற்றோர்கள் மிகவும் கவலையடைந்தனர் – குறிப்பாக எனது அப்பா- எனினும் பின்னர் அவர்கள் புரட்சிக குழுவில் இணைந்துகொள்வதற்கு எனக்கு அனுமதி வழங்கினார்கள்.*

*எனது தாயார் எனது ஆடைகளை அடுக்கிவைத்தார்- மீண்டும் பார்க்கமாட்டோம் என்பதை உணர்ந்திருந்த நிலையில் நாங்கள் பிரிந்தோம்.*

*மைஆங் என்னும் இடத்தில் உள்ள பயிற்சி முகாமிற்கு நான் சென்றேன்- இது பெண் போராளிகளிற்கான முகாம்.இது மியன்மாரின் முற்றிலும் பெண்களை கொண்ட புரட்சிகர குழு.நான் எனது பயிற்சியை ஆரம்பித்தேன்.*

*நான் முதல்தடவை துப்பாக்கியை தொட்டது அன்றுதான்,சாப்பாடு நான் வீட்டில் சாப்பிடும் உணவிற்கு மாறானதாக காணப்பட்டது.*

*பயிற்சிகள் கடுமையானவையாகவும் தீவிரமானவையாகவும் காணப்பட்டன – சிலவேளைகளில் நான் மயக்கமடைந்தேன்.*

*சிலவேளைகளில் பயிற்சிகள் மிகவும் கடினமாக காணப்பட்டவேளை நான் மனச்சோர்வடைந்தேன் – வீட்டை பற்றி எண்ணினேன்.*

*மனச்சோர்வு ஏற்படும் போதெல்லாம் நான் ஏன் ஆயுதப்புரட்சிக்குழுவில் இணைந்துகொண்டேன் என்பதை நினைத்துபார்ப்பேன் – மீண்டும் உத்வேகம் வரும் - நான் மீண்டும் வலிமை மிக்கவளாக மாறுவேன்.*
*எங்களிற்கு வெற்றிகிடைக்கும்வரை நான் திரும்பப்போவதில்லை.*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பள்ளமடு-விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு - விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் திங்கட்கிழமை (7) காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான கே.பாஸ்கரன் (வயது-33) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் தனது வீட்டில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (6) விடத்தல் தீவு கிராமத்திற்குச் சென்று விட்டு மீண்டும் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்த நிலையிலே குறித்த குடும்பஸ்தர் திங்கட்கிழமை (7) காலை குறித்த பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்திற்கு அருகில் இருந்து அவர் பயணித்த மோட்டார் சைக்கிலும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸார் விபத்தா அல்லது கொலையா? என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கை மலையகத்தில் வத்தேகம கிராமத்தில் மண்சரிவில் சிக்கி மூவர் பலி ஒருவர் படுகாயம்



வத்தேகம, மடவளை பிரதேசத்தில் வீடொன்றின் பின்னால் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் மற்றுமொருவர் காயமடைந்து கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டின் பின்புறம் நிர்மாணப் பணிக்காக அடித்தள குழி தோண்டும் போது அருகில் இருந்த 12 அடி உயர மேடு சரிந்து அந்த இடத்தில் நின்றிருந்த 4 தொழிலாளர்கள் மீது விழுந்ததாகத் தெரிய வருகிறது.

# தமிழக மீனவர்கள் கைது தொடர்பாக மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



இலங்கை அரசால் கைது செய்யபட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழக மீனவர்கள் 29 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்ததற்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் மோடிக்கு முன்பு கடிதம் அனுப்பியிருந்த நிலையில் தற்போது மீண்டும் கைதான மீனவர்களை விரைந்து விடுவிக்கவும் மீனவர்களின் 79 படகுகளை மீட்கவும் பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும், அக்கடிதத்தில் அப்பாவி மீனவர்களைக் கைது செய்வது தமிழக மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. தமிழக மீனவர்கள் அடிக்கடி துன்புறுத்தப்படுவது மீன்பிடிக்கும் பாரம்பரிய உரிமையைப் பறிப்பதாகும் என முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# காணமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கி ஜெனீவா பிரச்சினையை தீர்க்க முடியாது என்கிறார் சாணக்கியன் எம்.பி

இலங்கையின் நீதி அமைச்சர் வடக்கிற்கு சென்று காணமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்குவதாக தெரிவித்துள்ளார். தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என தாய்மார் கேட்கின்றனர். ஒரு இலட்சம் ரூபா வழங்கி ஜெனீவா பிரச்சினையை தீர்க்க முடியாது.

இவ்வாறு இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள். அவர் பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்கிழமை உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, “எந்த தவறும் செய்யாத தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் சிறையில் உள்ளனர். ஆனால். பயங்கரவாத தடைச்சட்டதின் கீழ் கைதான ஹிஜாஜ் ஹிஸ்புல்லா விடுவிக்கப்பட்டுள்ளார். இது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றோம். பயங்காரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக எமது கட்சி நாடுபூராவும் சென்று மக்களை அறிவூட்ட இருக்கிறோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தனிநாடு கோரவில்லை. எமது மக்களின் பிரச்சினைகளுக்கு நியாமான தீர்வு வழங்குமாறே கோருகிறோம் இலங்கை அரசின் வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு காணப்படுகிறது. தோட்டப்பகுதி மக்களுக்கு கோதுமை மா வழங்குவதாக அரசு அறிவித்திருந்தது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் கோதுமை மா இன்றி கஷ்டப்படுகின்றனர்.



தடைசெய்யப்பட்ட டோலர் படகுகளை தடுக்குமாறு வடபகுதி மீனவர்கள் கோருகின்றனர். வெளிநாட்டு மீனவர்கள் 300 கிலோமீற்றர் தொலைவில் மீன்பிடிக்கின்றனர். ஆனால் அரசு அதனை தடுக்கவில்லை. எமது பிரதேசங்களில் வனஜீவராசிகள் திணைக்களம் மேற்கொள்ளும் அநியாயங்களை நிறுத்த வேண்டும். 30-, 40 வருடங்கள் பயிரிட்ட காணிகளை பலாத்காரமாக பெற்றுள்ளளனர். தொல்பெருள் பிரதேசங்களை பாதுகாக்க வேண்டும். ஆனால் மட்டக்களப்பில் கோயிலுக்கு சொந்தமான காணியில் நிர்மாணம் செய்ய தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக அரசின் செயற்பாடுகளில் நிறையவே முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் குறுந்தூர்மலையில் பாரிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களம் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதமாக செயற்படுகின்றன. நாம் தனிநாடு கோரவில்லை. நாட்டை துண்டாட கோரவில்லை. எங்கள் நோக்கம் அதுவல்ல” என்றார்.

# அமையப்போகின்ற எங்கள் அரசாங்கம் "அச்சாறு" போன்று இருக்காது என்கிறார் சஜித் பிரேமதாச



நாடு எந்த திசையில் செல்கிறது என்பது எவருக்கும் தெரியாது. சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதம் எழுதியுள்ளதாக கூறுகின்றனர். அப்படியான கடிதம் கிடைக்கவில்லை என்று நாணய நிதியம் கூறுகிறது. இது என்ன ஒரு கேலிக்கூத்து, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள கதி. முற்றாக நாடு சீரழிந்துள்ளது. நாங்கள் எதிர்காலத்தில் அமைக்கப்போகின்ற அரசாங்கம் தற்போதையது போன்று “அச்சாறு” அரசாங்கமாக இருக்காது என்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச.

கொழும்பு - கொட்டாவை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், நாடு எந்த திசையை நோக்கி பயணிக்கின்றது என்பது அரசாங்கத்தில் இருக்கும் எவருக்கும் தெரியாமல் உள்ளத. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது குறித்து அரசாங்கத்தில் இருப்போர் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னார் வங்காலையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட மந்திரவாதி உட்பட ஆறு பேர் கைது



- மன்னார் நிருபர் (09-02-2022)

மன்னார் வங்காலை பஸ்திபுரி பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மந்திரவாதி உள்ளடங்களாக 06 பேர் புதன்கிழமை (09) மாலை வங்காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, புதையல் தோண்ட பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், வங்காலை - நானாட்டான் பிரதான வீதி,பஸ்திபுரி பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு பின் பகுதியில் சிலர் புதையல் தோண்டுவதாக வங்காலை பொலிஸாருக்கு வழங்கிய இரகசிய தகவலின் அடிப்படையில் புதன்கிழமை (9) மாலை அப்பகுதிக்கு சென்ற வங்காலை பொலிஸார் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 6 நபர்களை கைது செய்துள்ளனர்.

இவர்களில் கண்டியைச் சேர்ந்த சுமார் 50 வயதுடைய மந்திரவாதி ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர். ஏனைய நான்கு நபர்கள் வாங்காலையைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் ஒருவர் ஆசிரியர் எனவும் தெரியவருகின்றது.

மேலும் புதையல் தோண்ட பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்கள் மற்றும் மந்திரம் மேற்கொள்ள பயன்படுத்தும் ஒரு தொகுதி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் தற்போது வங்காலை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். விசாரணைகளின் பின் குறித்த சந்தேக நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

# ஒட்டாவா ஆர்ப்பாட்ட ஊர்வல விவகாரத்தில் பிரதமர் தனது தலைமைத்துவத்தை தீவிரமாக காட்ட வேண்டும் என்கிறார் என்டிபி தலைவர் ஜக்மீத் சிங்



ஒட்டாவா வாகன ஆர்ப்பாட்ட ஊர்வல விவகாரத்தில் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது தலைமைத்துவத்தை உச்ச நிலை-யில் நின்று தீவிரமாகக் காட்ட வேண்டும் என்று நேற்று கருத்துத் தெரிவித்துள்ளார் கனடாவின் தேசிய என்டிபி கட்சித் தலைவர் ஜக்மீத் சிங்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “நாடு முழுவதும் உள்ள அண்டை மாகாணங்களையும் நகரங்களையும் அச்சுறுத்தி வரும் இந்த வாகன ஆர்ப்பாட்ட ஊர்வல விவகாரத்தில்தனால் ஏற்படடுள்ள நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் திட்டத்தில் பணியாற்ற வேண்டும் என்றும் தனது அழைப்பை மீண்டும் வலியுறுத்துகிறார். ஒட்டாவா நகர் வாழ் மக்கள் இப்போது கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாக முற்றுகைக்கு உட்பட்டுள்ளனர், அரசாங்கத் தலைமை இல்லாததால், உள்ளூர்வாசிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைக்க அல்லது ஆக்கிரமிப்பிலிருந்து தொடர்ச்சியான சத்தத்தை நிறுத்த நீதிமன்றத் தடை உத்தரவுகளுக்கு விண்ணப்பிப்பதைத் தங்கள் பொறுப்பில் எடுத்துள்ளனர். இந்த விடயமானது எதைக் காட்டுகின்றது என்றால் கனடாவின் மத்திய அரசிதலைமையின் வெற்றிடம் உள்ளது என்பதுதான். இவ்வாறிருக்க பாராளுமன்றத்தில் பின்வரிசையில் அமர்ந்திருக்கும் ஒரு லிபரல் எம்.பி. தனது கட்சியின் தலைமையை விமர்சிக்க அல்லது நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான திட்டத்தை விமர்சிக்க ஒருசெய்தியாளர் சந்திப்பை நடத்தியுள்ளார் என்பதும் பிரதமருக்கு அவமரியாதைக்குரிய ஒன்றாகும்” என்றும் ஜக்மிட் சிங் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் “கனடா முழுவதும் உள்ள உள்ளூர் குடிமக்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் முன் வரிசை ஊழியர்கள் சேவையாளர்கள் ஆகியோர் தங்கள் சமூகத்தில் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு தாக்கப்படுகிறார்கள். இன்று ஒரு லிபரல் எம்.பி.யும் முன்னாள் பாராளுமன்ற செயலாளரும் ஒட்டாவா மாநகரில் தோன்றியுள்ள நெருக்கடியை தனது சொந்த அரசாங்கம் கையாள்வதை விமர்சனம் செய்வதைப் பார்த்துள்ளோம். தாக்குவதைக் கேட்கிறோம், “ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கே தங்கள் சொந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது என்றால் மற்றைய கட்சிகளை ஆதரிக்கும் பொதுமக்கள் எப்படி நம்பிக்கை வைப்பார்கள்? இந்த நெருக்கடியின் தொடக்கத்திலிருந்தே, பிரதமர் மற்றும் அவரது குழுவினரின் தலைமையின் குறை-பாடுகள் வெளியே தெரியவந்துள்ளது. கனேடியர்களுக்கு உதவும் தீர்வுகளை விட அவர்கள் செயல்படாமல் இருப்பதற்கான காரணங்களை அரசாங்கத்தின் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகம் தேடுகிறார்கள்.” என்றார்.

இவ்வாறான நிலையில் கனடிய பாராளுமன்றத்தின் ஆளும் லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோவிட்-19 சுகாதாரக் கட்டுப்பாடுகள் தொடர்பாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன்ர முரண்பட்டுக் கொண்டுள்ளார் என்று அறியப்படுகின்றது, ஏனெனில் அரசாங்கம் “சுதந்திர ஊர்வலம்” என்று அழைக்கப்படும் ஆர்ப்பாட்டத்தை எதிர்கொண்டு, கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாக நாட்களையும் ஒட்டாவாவின் வளங்களையும் வீணடித்துள்ளது.

லூயிஸ்-ஹெபர்ட்டின் கியூபெக் நகர தொகுதிக்கான் பாராளுமன்ற உறுப்பினர் ஜோயல் லைட்பவுண்ட் நேற்று செவ்வாயன்று, தொற்றுநோய்க்கான சுகாதார நடவடிக்கைகள் அகற்றப்பட வேண்டும் என்று விரும்பும் மக்களின் கவலைகளை அரசாங்கங்கள் நிராகரிக்கவோ அல்லது முட்டாள்த் தனமாக நிராகரிக்கவோ கூடாது” என்று தெரிவித்துள்ளார்.

“கடந்த தேர்தல் பிரச்சாரத்தின் போது - மற்றும் அதன் போது - எனது அரசாங்கத்தின் தொனியும் கொள்கைகளும் கடுமையாக மாறிவிட்டன என்பதை என்னால் வருத்தத்துடன் கவனிக்கக் கூடியதாக உள்ளது,” என்று ஓட்டாவா மாநகரில் நடத்திய சந்திப்பு ஒன்றில் செய்தியாளர்களிடம் லூயிஸ்-ஹெபர்ட்டின் கியூபெக் நகர தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

தொற்றுநோய்க்கான சுகாதாரக் கட்டுப்பாடுகள் குறித்த தமது மத்திய அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து லைட்பவுண்ட் கவலை தெரிவித்தாலும், ஒட்டாவாவில் உள்ள கனரக வாகன ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேறுமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார், மேலும் எதிர்ப்புக்களைக் காட்டும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீவிர வலதுசாரிப் போக்குக் கொண்ட வெறுப்பு மற்றும் இருப்பின் அடையாளங்களைக் கொண்டவர்களாக உள்ளதையும் அவர் கண்டித்தார்.

மேலும் அவர் செய்தியாளர்களோடு பேசுகையில்” ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள சில எதிர்ப்பாளர்கள் குரல் கொடுக்கும் அவர்களது கோரிக்கைகள் மற்றும் கவலைகள் நியாயமானவை என்றும் . குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மீது சமூக தனிமைப்படுத்தலின் மனநல பாதிப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்களை தொடர்ந்தும் பூட்டுதல்களின் பொருளாதார தாக்கங்கள் பற்றிய கவலைகளை அவர் மேற்கோள் காட்டினார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# எமது நாட்டின் பொருளாதாரத்தையோ, அல்லது நமது ஜனநாயகத்தையோ முடக்க எவருக்கும் உரிமை இல்லை என்கிறார் கனடியப் பிரதமர்

எமது நாட்டின் பொருளாதாரத்தையோ, அல்லது நமது ஜனநாயகத்தையோ அல்லது நமது சக கனடியர்களின் அன்றாட வாழ்க்கையையோ முடக்க எவருக்கும் உரிமை இல்லை என்றும் அது நிறுத்தப்பட வேண்டும் எனவும் கனடியப் பிரதமர் ட்ரூடோ தனது சமூக ஊடகப் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

கனடாவில் அரசாங்கத்தின் கோவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ச்சியாக இடம்பெறும் கனரக வாகன சாரதிகளின் ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவது குறித்து தனது கருத்தைப் பதிவிட்ட போதே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கனடாவில் தலைநகர் ஒட்டாவாவில், கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான கட்டுப்பாடுகளை தவிர்க்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து ஓட்டாவா மாநகரத்தில் கனரக டிரக் சாரதிகளும் மற்றுமு் தடுப்பூசி எதிர்ப்பாளர்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, நேற்று, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஒட்டாவாவில் கோவிட் தடுப்பூசி சட்டங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் கனரக வாகனங்களின் போராட்டங்கள் "நிறுத்தப்பட வேண்டும்" என்று கூறினார்.

பொருளாதாரம் மற்றும் உள்ளூர்வாசிகள் மீதான ஆர்ப்பாட்டங்களின் தாக்கத்தை மேற்கோள் காட்டி. அரசாங்கத்துடன் கருத்து வேறுபாடு கொள்ள மக்களுக்கு உரிமை உண்டு, ஆனால் "பொருளாதாரத்தை அல்லது நமது ஜனநாயகத்தை முற்றுகையிடும் உரிமை" இல்லை என்று உறுதியாகத் தெரிவித்தார்.



மேலும், இந்த ஆர்ப்பாட்டம் விரைவில் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறிய அவர், தொடர் இதுவரை, நூற்றுக்கணக்கான ஆர்சிஎம்பி பொலிஸ் அதிகாரிகள் ஒட்டாவா பொலிஸ் சேவைகளுக்கு ஆதரவாக அணிதிரட்டப்பட்டுள்ளனர் என்றும்.

"எங்களின் நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்த மாநகர கூட்டாளர்களுடன் இணைந்து செயல்படுகிறோம், மேலும் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர தேவையான அனைத்து ஆதாரங்களுடனும் நாங்கள் தொடர்ந்து இருப்போம்" என்று கூறினார். மேலும், கனடா வாழ் மக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவும், தங்கள் அரசாங்கத்துடன் உடன்படாமல் இருக்கவும், தங்கள் உரிமைகளைக் கேட்கவும் அதிகாரம் உண்டு. அந்த உரிமையை நாங்கள் எப்போதும் பாதுகாப்போம். என்றும் கனடியப் பிரதமர் தெரிவித்தார்.

## Mayor of Dollard Des Ormeaux - Montreal, had proclaimed January as Tamil Heritage Month, within the Municipality

# மொன்றியால் Dollard Des Ormeaux நகர சபையானது தை மாதத்தை "தமிழர் மரபுரிமை மாதமாக" அங்கீகரித்துள்ளது



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பல மாநகர சபைகளும் மாகாண அரசும். அதற்கு மேலாக கனடாவின் மத்திய அரசும் தை மாதத்தை எமது "தமிழர் மரபுரிமை மாதமாக" அங்கீகரித்துள்ள இந்த வேளையில் இந்த வருடத்தில் மொன்றியால் வாழ் பல தமிழ் அன்பர்களின் வேண்டுகோளையும் அவர்களின் அன்பையும் ஏற்று அங்குள்ள Dollard Des Ormeaux நகர சபையானது தை மாதத்தை "தமிழர் மரபுரிமை மாதமாக" அங்கீகரித்துள்ள நற்செய்தியை இங்கு பதிவு செய்வதிலி மகிழ்ச்சியடைகின்றோம்.

மொன்றியாலிலிருந்து நண்பர் வாகீசன் நடராஜா அவர்கள் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு இந்த நற்செய்தியை தெரிவித்ததன் அடிப்படையில் Dollard Des Ormeaux நகர சபையின் மேயர் அவர்களை கௌரவிக்க தீர்மானிக்கப்பெற்றுள்ளது.

ஏற்கெனவே அவருக்கு மொன்றியால் நகரில் பாராட்டுக்கள் குவிந்து வருகின்ற இந்த வேளையில் ரொறன்ரோ மாநகரிலிருந்து "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" கனடா கிளை இயக்குனர் சபை உறுப்பினர்கள் இவ்வார இறுதியில் மொன்றியால் நகருக்குச் சென்று அங்குள்ள தமிழ் பேசும் அன்பர்கள் சகிதம் Dollard Des Ormeaux நகர சபையின் மேயர் அவர்களை கௌரவிக்க தீர்மானிக்கப்பெற்றுள்ளது.

பின்வரும் வாசகங்கள் அடங்கிய பாராட்டுக் கேடயம் அன்றைய தினம் Dollard Des Ormeaux நகர சபையின் மேயர் அவர்களுக்கு வழங்கப்பெறும்.

**செய்தி: சத்தியன்**

**International Movement for Tamil Culture -Canada**
Proudly presents this
Award of Appreciation to
**His Worship Alex Bottausci**
**Mayor of Dollard Des Ormeaux**
For his dedication and commitment in proclaiming January as Tamil Heritage Month, within the Municipality.

President and Board of Directors
**International Movement for Tamil Culture - Canada**
13-02-2022

# ஆளில்லா கமராக்களால் ஆபத்தை எதிர்கொள்ளும் பறவைகள்



மன்னாரில் உள்ள அதிக உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் வலயத்தை கண்காணிப்பதற்காக கொழும்பில் இருந்து வரும் விசேட சலுகைகளைப் பெற்ற சிறு குழுக்கள், பறவைகளை ஆய்வு செய்ய ஆளில்லா கமராக்களை பயன்படுத்துவதால் அழகிய பறவை இனங்கள் இலங்கைக்கு மீண்டும் திரும்பாத அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் குழு எச்சரித்துள்ளது.

தலைநகரில் இருந்து பறவை கண்காணிப்பாளர்கள் என அழைக்கப்படுபவர்கள் மன்னாருக்கு ஆளில்லா கமராக்களை கொண்டு வருவதை அறிந்து ஆழ்ந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்துள்ள வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம், இந்த தனித்துவமான, அரிய மற்றும் அழகான பறவை இனங்கள் இந்த தனித்துவமான இடத்தில் தொடர்ந்து தங்கியிருப்பதும் அவற்றின் எதிர்கால வருகையும் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பல பறவைகள் புலம்பெயர் பறவைகள் என்பது குறிப்பிடத்தக்கது. சில உணவு மற்றும் இனப்பெருக்கத்திற்காக மன்னார் சரணாலயத்திற்கு ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்வதோடு, இவற்றில் பிளமிங்கோக்கள் மிக முக்கியமானவையாகும்.

புலம்பெயர் பறவைகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக உப்பு நீர் கடல்வாழ் உயிரினங்களை நம்பியிருப்பதாக வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் மேலும் சுட்டிக்காட்டுகிறது.

மேலும் பல பறவை இனங்கள் இப்பகுதிக்கு வருகைத் தருவதோடு, ஒவ்வொரு வருடமும் புதிய இனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இது உள்ளூர் பறவையியல் நிபுணர்களுக்கு மாத்திரமல்ல, வெளிநாட்டிலிருந்து முக்கிய அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் வெளிநாட்டு பறவையியல் நிபுணர்களுக்கும் இது அற்புதமான இடமாகும்.

இப்பகுதி உயர் பாதுகாப்பு வலையமாக கருதப்படுவதோடு, ரேடாரில் சிக்காமல் இருக்க ஆளில்லா கமராக்களை கீழே பறக்க விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையை தாம் அறிந்து கொண்டுள்ளதாக வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் கூறியுள்ளது.

ஆளில்லா கமராக்கள் உணவும் தேடும் பறவைகளுக்கு அதிக தொல்லை தருவதாக வலியுறுத்தியுள்ள அந்த சங்கம், ஆளில்லா கமராக்கள் எழுப்பும் அதிக சத்தத்தாலும், உணவுத் தேடும் பறவைகளை ஒத்த அவற்றின் வடிவத்தாலும், அவை பறவை இனங்களுக்கு பெரும் தொல்லையாக மாறியுள்ளது என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலைமையால், பறவை இனங்கள் நாட்டை விட்டு வெளியேறினால், அவை மீளத்திரும்பாது எனவும், கொழும்பில் உள்ள சிலருக்கு சலுகைகளை அனுமதித்தமைக்காக முழு நாடும் விலை கொடுக்க நேரிடலாம் எனவும் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் எச்சரித்துள்ளது.

"இந்த அழிவுகரமான செயன்முறையை உடனடியாக நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் நல்ல மனம்படைத்த ஆளில்லா கமராக்களை இயக்குபவர்களையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்".

புலம்பெயர் பறவைகள் மனித செயல்பாடுகள் காரணமாக எப்படி தங்கள் முந்தைய வாழ்விடத்தை விட்டு வெளியேறின என்பதை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் நினைவுபடுத்தியுள்ளது.

"லுணுகம்வெஹெரவில் இருந்து பூந்தல தேசிய பூங்காவிற்கு தண்ணீர் திருப்பி விடப்பட்டதன் மூலம், பூங்காவில் உள்ள மிகவும் பிரபலமான பறவைக் கூட்டங்கள் நீர் குறைப்பு அல்லது நீர்த்துப்போதல் காரணமாக வடக்கே இடம்பெயர்ந்தன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பறவைகள், வடக்கே நகரும், பின்னர் தீவை விட்டு வெளியேறும்," என வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் எச்சரித்துள்ளது.

கனடிய செய்திகள்
Canadian News

# நோர்த் யோர்க்கில் 19 வயதான மலாச்சி என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக 16, 16, 15 வயதுடைய மூவர் ஒசாவா நகரில் கைது



கடந்த மாதம் நோர்த் யோர்க் நகரின் மெக்டொனால்ட் உணவகத்திற்கு வெளியே 19 வயதான மலாச்சி எலிஜா பெயின்பிரிட்ஜ் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக இரண்டு ஆண்கள் ஒரு பெண் என 16, 16 மற்றும் 15 வயதுடைய மூவர் ஒசாவா நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என ரொரன்ரோ பெரும்பாக பொலிசார் அறிவித்துள்ளனர்.

ஒசாவா நகரத்தைச் சேர்ந்த பதின்வயதினராகிய, இரண்டு சிறுவர்கள் மற்றும் ஒரு பெண், திங்களன்று ரொறன்ரோ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர் என்ற செய்தியும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் ஒரு சிறுவன், முதல் நிலை கொலைக் குறறச்சாட்டில் பலத்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

16 வயது சிறுவன் மற்றும் 15 வயது சிறுமி ஒவ்வொருவருக்கும் கொலைக்குப் பிறகு துணைக்கருவி மற்றும் துப்பாக்கி மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன என்றும் மூன்று பதின்ம வயதினரும் நேற்று செவ்வாய்க் கிழமை காலை ரொறன்ரோவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர் என்றும் எனினும் மேலதிக விசாரணைகள் ஒரு வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையின் படி, ஜனவரி 22ம் திகதியன்று அன்று அதிகாலை 1 மணிக்கு முன்னதாக கீலே வீதி மற்றும் இன்கிராம் டிரைவிற்கு அருகிலுள்ள மெக்டொனால்ட் உணவகத்திற்குச் சொந்தமான வாகன நிறுத்துமிடத்தில் கொலை செய்யப்பட்ட பெயின்பிரிட்ஜ் சுடப்பட்டார்என்றும் பொலிஸ் அதிகாரிகள் அவரை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காரில் கண்டதாகவும் ஆனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து சடலமாகக் கிடந்தார் என்றும் தெரிவிக்கபபட்டுள்ளது.

அந்த நேரத்தில் இரண்டு வாகனங்களில் இருந்தவர்கள் ஒருவரையொருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டதாகவும், இரு நபர்கள் கறுத்த நிறக்கார் ஒன்றில் அந்த பகுதியை விட்டு தப்பிச் செல்வதைக் காண இருந்தது என்றும் போலீசார் நீதி மன்றத்தில் தெரிவித்தனர்.

# கனடா — ஸ்காபுறோ நகரில் "சப்த சாகரம்" நண்பர்கள் குழு நடத்திய "பொங்கல் விழா"



எமது தாய் மண்ணிலிருந்து தமிழ் மக்கள் பல்வேறு நெருக்கடிகளால் இடம்பெயர்ந்து கனடா போன்ற நாடுகளில் “புலம்” பெயர்ந்து வாழ்ந்தாலும் “உளம்” பெயர்ந்து வாழவில்லை என்பதற்கு உதாரணமாக பல விடயங்களை நாம் பகிர்ந்துகொள்ளலாம்.

அவற்றில் ஒன்று தான் எமது பாரம்பரிய தமிழர் விழாவாகவும் எமது பண்பாட்டுக் கோலங்களில் ஒன்றாகவும்” எமது இனத்தின் அடையாளமாகவும் விளங்கும் “பொங்கல் விழா” தை மாதத்தில் இந்த “பொங்கல் விழா” இடம்பெறுவதன் காரணமாக கனடாவில் தை மாதமானது “தமிழர் மரபுரிமை மாதம்” என்று அங்கீகரிக்கப்பெற்றுள்ளது.

இது ஒரு சாதாரணமாக அங்கீகாரம் அல்ல. கனடாவின் மத்திய மாகாண உள்ளாட்சி அமைப்புக்களான மாநகர சபைகள் என கனடாவின் 3 வகையான அரசாங்கங்கள் அங்கீகரித்துள்ளன.

இந்த அங்கீகாரத்தை எமது சமூகம் பெற்றுக்கொள்வதற்கு அயராது உழைத்த அனைத்து தமிழ் அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



இந்த வரிசையில் அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பெற்ற இந்த பொங்கல் விழாவும். “தமிழர் மரபுரிமை நாளும்” தமிழர் அமைப்புக்களால் கொண்டாடப்படுவதற்கு “கொரோனா” என்னும் கொடிய நோய் தடையாக அமைந்துவிட்டது.

ஆனாலும் நாம் இங்கு படங்களில் காணும் கனடா-ஸ்காபுறோ “சப்த சாகரம்” நண்பர்கள் குழு நடத்திய “பொங்கல் விழா” கனடாவில் மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற ஒரு விழாவாக கணிக்கப்பெறுகின்றது.

இந்த “சப்த சாகரம்” நண்பர்கள் குழுவில் இங்குள்ள வர்த்தக மற்றும் சமூகம். சமயம் சார்ந்த அமைப்புக்களின் மூலம் நன்கு அறியப்பட்டவர்களாக விளங்கும் திருவாளர்கள் கல்யாணசுந்தரன், ஜெயம் கனகசபை. கிருஸ்ணகோபால் செல்லத்துரை. கேதா நடராசா. கருணா நந்தன். குலசிங்கம், திருமதி பிரியா, திருமதி வசந்த தீபா ஆகியோர் அங்கம் வகிக்கின்றார்கள்.

பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து பொங்கல் விழாவை நடத்த நிதி உதவிகளைப் பெறும் அமைப்புக்கள் கூட. இணையவழி ஊடாக பொங்கல் விழாவை நடத்திய பின்னர் ஓய்ந்திருக்கும் வேளையில் “சப்த சாகரம்” நண்பர்கள் குழு நடத்திய “பொங்கல் விழா” மிகவும் அழகுறவும் எழுச்சியுடனும் நடைபெற்றுள்ளது. கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள “குயின்பெலஸ் விழா மண்டபத்தில்” நடைபெற்ற இந்த விழாவில் “கனடா உதயன்” உட்பட ஊடக நண்பர்கள் சிலரும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

இங்கு காணப்படும் படங்களில் கலந்து கொண்ட அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

*- SATHIYAN*

## Ontario Government's Seniors Community Grant allocated to the Scarborough Frontline Community Centre

# ஸ்காபுறோவில் இயங்கும் Frontline Community Centre. சேவை வழங்கும் அமைப்பிற்கு ஒன்றாரியோ அரசின் நிதி உதவி

கனடா - ஸ்காபுறோவில் நீண்ட காலமாக இயங்கிவரும் Frontline Community Centre சேவை வழங்கும் அமைப்பிற்கு ஒன்றாரியோ அரசின் நிதி உதவித் தொகையை ஒன்றாரியோ மாகாணத்தின் முதியோர் நலன் பேணும் விவகாரங்களுக்கான அமைச்சர் கௌரவ ரேமண்ட் சோ அவர்கள் அண்மையில் நேரடியாக வழங்கினார்.

இதற்கா அறிவிப்பை தமிழ் ஊடகங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அவர் கடந்த வெள்ளிக்கிழமையன்று அறிவித்தார்.

அன்றைய தினம் ஸ்காபுறோவில் Frontline Community Centre சேவை வழங்கும் அமைப்பின் நிறைவேற்று இயக்குனர் திருமதி விஜயா குலா மற்றும் அவர்களது அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் மிகவும் சிறப்பாக முறையில் வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.






அமைச்சர் கௌரவ ரேமண்ட் சோ அவர்ளுடன் தமிழ் பேசும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான லோகன் கணபதி. விஜய் தணிகாசலம் மற்றும் ஆர்மேனியன் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு அரிஸ் பாபிகியன் ஆகியோர் மாகாண அரசின் சார்பில் சமூகமளித்திருந்தனர்.

மாகாண அரசின் பிரதிநிதிகளான அவர்கள் அனைவரும் Frontline Community Centre சேவை வழங்கும் அமைப்பின் சேவைகளையும் அமைப்பின் நிறைவேற்று இயக்குனர் திருமதி விஜயா குலா அவர்களது நிர்வாகத்திறன் தொடர்பாகவும் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

Frontline Community Centre அமைப்பின் சேவைகள் மூலம், தமிழ் பேசும் முதியோர்கள் மாத்திரமல்ல வேற்று இனத்தவர்களும் பயன்பெறுகின்றார்கள் என்றும் குறிப்பாக முதிர்ந்த ஆண்கள் பெண்கள் ஆகியோர்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் அவர்கள் பெற்றுவருகின்றார்கள் என்பதை மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்துவைத்துள்ளார்கள் என்பதை அவர்களது உரைகளிலிருந்து நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

*செய்தி: சத்தியன்*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அதிகாரங்களைத் தன்வசம் கொண்டு துஷ்பிரயோகங்களை மேற்கொண்டிருந்த. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரான இளங்கோவன் இடமாற்றம்

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக திரு இளங்கோவன் கடந்த பல வருடங்களாக கடமையாற்றியிருந்தார். இவரின் மாற்றத்தினால் புதிய நிர்வாக கட்டமைப்பின் கீழ் இனிவரும் காலங்களில் ஆசிரியருக்கு ஒரு விடிவு காலமாக அமையும். இவருடைய நிர்வாகத்தின் கீழ் ஆசிரியர்கள் இடமாற்ற கொள்கைகள் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாகாண கல்விப் பணிப்பாளருக்கு இருக்க வேண்டிய அதிகாரங்களைத் தன்வசம் வைத்துக் கொண்டு இவர் அதிகார து'ப்பிரயோகங்களை மேற்கொண்டிருந்தார்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் இடமாற்றம் வரவேற்கத்தக்கது. இனிவரும் காலங்களில் ஆசிரியர்களுக்கு ஒரு விடிவுகாலம். இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய ரீதியான உபசெயலாளர் புயல்.செ. ஸ்ரீ கந்த நேசன்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் இடமாற்றம் வரவேற்கத்தக்கது. பல வருடங்களாக அவர் கல்வி அமைச்சின் செயலாளராக கடமை புரிந்தும் வடமாகாண கல்வியில் எந்தவித முன்னேற்றமும் இடம்பெறவில்லை. அதிகாரங்களைத் தனதாக்கி வைத்துக்கொண்டு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரங்களை வழங்காது தன்னிச்சையாக செயற்பட்ட கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது. இவ்வாறு தெரிவித்தார் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய ரீதியிலான உப செயலாளரும் வடமாகாண செயலாளருமான புயல் நேசன். அவர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யுமாறு ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் ஆசிரியர்கள் எல்லோரும் ஒன்றுகூடி இலங்கை வரலாற்றில் பாரியளவு போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். அந்தப் போராட்டத்தை நசுக்கும் வகையில் செயலாளர் இளங்கோவன் அவர்கள் அனைத்து ஆசிரியர்களுக்கும் அன்றைய தினம் சம்பளம் இல்லாத விடுமுறையாக அறிவித்து கடிதம் வெளியிட்டிருந்தார். உடனடியாக நாங்கள் இது தொடர்பில் எமது சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜெயசிங்க அவர்களுடன் தொடர்பு கொண்டு நீதிமன்றத்தை நாடியதன் விளைவாக சம்பளம் அற்ற விடுமுறை ரத்து செய்யப்பட்டது.



அத்துடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுதந்திரமாக செயல்பட விடாமல் தன்னுடைய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து கொண்டிருந்தார். அந்த வகையில் இவருடைய செயற்பாட்டுக்கு எதிராக பாரிய அளவிலான போராட்டங்களை மேற்கொள்ள நாங்க தீர்மானித்திருந்த பொழுது இவ்வாறான இடமாற்றம் வழங்கப்பட்டது வரவேற்கத்தக்கது. கல்வியில் இனி வருங்காலங்களில் அவருக்கு உரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு சுயாதீனமாக செயற்பட கூடிய நிலைமை உருவாகும் என நாங்கள் நம்புகின்றோம். அத்துடன் கல்வியமைச்சின் உபசெயலாளர் அஞ்சலி சாந்தசீலன் அவர்களின் இடமாற்றமும் வரவேற்கத்தக்க ஒன்று. இவரும் செயலாளருடன் செயற்பட்டுக் கொண்டு ஆசிரியர்கள் அநீதியினை ஏற்படுத்தி வந்துள்ளார். இவரின் செயற்பாடுகளும் ஒரு பக்க சார்பான செயல்பாடுகளாக அமைந்துள்ளன. புளியங்குளத்தில் ஒரு ஆசிரியருக்கு அநீதி இழைக்கப்பட்ட பொழுது உடனடியாக செயல்பட வேண்டிய இடத்தில், உபசெயலாளர் தன்னிச்சையாக செயல்பட்டு அந்த ஆசிரியருக்கு அநீதியினை இழைத்துள்ளார்.



# எந்தவொரு அரசியல் தீர்வையும் இலங்கையின் சிங்கள பேரினவாதப்பூதம் அழித்துவிடும்: பிரதமர் வி. உருத்திரகுமாரன்!

சிங்கள இனவாதக் கட்டமைப்பாக இறுகிப் போயுள்ள இலங்கையின் அரச கட்டமைப்புக்குள் எந்தவொரு அரசியல்தீர்வுக்கும் சிங்கள இனவாதம் இடம் தரப்போதில்லை என்பதே வரலராற்று உண்மை எனத் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அசராங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், சுனாமி இயற்கை பேரிழிவில் இருந்து மக்களை மீட்பதற்கான மனிதநேய கட்டமைப்பயே கிழித்துப் போட்டவர்களிடத்தில் அரசியல் தீர்வினை எப்படி எதிர்பார்க்க முடியும் என கேள்வியெழுப்புள்ளார்.

13வது திருத்தம் சட்டம் தொடர்பில் சமீபத்தில் இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பபட்ட கடிதம் தொடர்பாக கருத்த தெரிவிக்கையில், திரு உருத்திரகுமாரன் தெரிவித்ததாவது; புத்தாண்டு செய்தியில் நான் கூறியபடி எமக்கான போராட்ட அரங்கினை நாங்களே தீர்மானிக்க வேண்டும். எமக்கான போராட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை நாமே வடிவமைக்க வேண்டும்.

தமிழர் தேசத்தின் உரிமைப் போராட்டம், இலங்கை அரசின் இனவழிப்பில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசொன்றை அமைத்துக் கொள்வதற்கான போராட்டமாக வரலாற்றப்போக்கில் வடிவெடுத்தது. முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின்னர் இனவழிப்புக்கு எதிரான பரிகாரநீதி என்ற வகையில் தனித் தமிழீழ அரசு அமைவதே ஈழத் தமிழர் தேசத்தின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்து நாம் செயற்பட்டு வருகிறோம்.

6ம் திருத்தச் சட்டம் காரணமாகத் தாயகத்தில் உள்ள தலைவர்கள் இந் நிலைப்பாட்டை வெளிப்படையாக முன்வைத்துச் செயற்பட முடியாது என்பதனை நாம் அறிவோம். இருப்பினும், ஈழத்தமிழர் தேசத்துக்கான அரசியல் தீர்வு என்பது சிங்கள இனவாதப்பூதத்தின் இனவழிப்பிலிருந்து தமிழ் மக்களை பாதுகாக்கக்கூடியதொரு வடிவத்தில் அமைய வேண்டும் என்பதில் தாயகத் தலைவர்கள் சமரசம் ஏதுமின்றிச் செயற்பட வேண்டும். அரசியல் தீர்வு தொடர்பான உரையாடல் கூட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கான பரிகாரநீதியினை மையப்படுத்தியே அமையவேண்டும்.

13ம் திருத்தச் சட்டமும் அதன் வழிவந்த மகாணசபை முறையும் ஈழத் தமிழ் மக்களை சிங்களத்தின் இனவழிப்பிலிருந்து எந்த வகையிலும் காப்பாற்றப் போவதில்லை. இதனால் 13 வது திருத்தச் சட்டம் குறித்துப் பேசுவதில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்து அர்த்தம் எதும் இருக்கப் போதில்லை.

மேலும், இன்னுமொரு விடயத்தினை நினைவுபடுத்த விரும்புகின்றேன். இலங்கை அரசு சிங்கள இனவாதக் கட்டமைப்பாக இறுகிப் போயுள்ளது. இதனால்தான் இலங்கை அரச கட்டமைப்புக்குள் தமிழர்களுக்கு அரசியல்தீர்வு என்பது சாத்தியப்படப்போவதில்லை என நாம் கூறி வருகிறோம். எந்தவொரு அரசியல்தீர்வுக்கும் சிங்கள இனவாதம் இடம் தரப்போதில்லை என்பதே வரலர்ற்று உணமை. கடந்த காலங்களில் செய்யப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றவற்றுக்கு நேர்ந்த கதியினையும் வரலாறு அறியும். சிறிலங்கா நாடாளுமன்றில் அதிபர் கோத்தா ஆற்றிய உரையே இதற்கு சமீபத்திய சாட்சி.

சுனாமி பேரழிவின் போது மக்களை அழிவில் இருந்து மீட்டெடுக்க இணைத்தலைமை நாடுகளின் துணையுடன் உருவாக்கப்பட்ட சுனாமி கட்டமைப்பையே சிங்கள பேரினவாதபூதம் தனது நீதிமன்றின் ஊடாக கிழித்தெறிந்தது. இயற்கை பேரிழிவில் இருந்து மக்களை மீட்பதற்கான மனிதநேய கட்டமைப்பயே கிழித்துப் போட்டவர்களிடத்தில் அரசியல் தீர்வினை எப்படி எதிர்பார்க்க முடியும்?

எம்மைப் பொறுத்தவரை, தாம் எந்த அரசியல் ஏற்பாட்டுக்குள் வாழ வேண்டும் என்பதனை மக்களே தீர்மானிக்கின்ற வகையில், ஒரு பொதுவாக்கெடுப்பின் மூலமாகவே அரசியல் தீர்வு காணப்படவேண்டும். பொதுவாக்கெடுப்பை கோருவதற்கு 6ம் திருத்தச் சட்டம் என்பது தடையாக இல்லை. எனவே தாயகத்தில் இருந்து இதற்கான குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்பாகும் என பிரதமர் வி.உருத்திரகுமாரன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மேலும், 13வது ஒரு தொடக்கபுள்ளி என்றும் தற்போது சிறிலங்கா அரச கட்டமைப்புக்களால் நிகழ்த்தப்படும் நிலஅபகரிப்புக்களை தடுத்து நிறுத்த இது உதவும் கூறப்படும் கருத்து, தவறானது என இடித்துரைத்த பிரதமர் வி.உருத்திரகுமாரன், இது பிழையான வாதம் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், 13க்கு கீழ் அரச நிலங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கைகளில்தான் உள்ளது. மாகாணசபையுடன் ஆலோசித்து விட்டு மத்திய அரசாங்கம் காணிகளை எடுத்துக் கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது. காணிகளை மத்திய அரசு எடுப்பதற்கு மாகாணசபையின் அனுமதி தேவையில்லை. மாகாணசபையுடன் நடப்பது கலந்தாலோசனை மட்டுமே. இதற்கு எந்தவொரு சட்டவலுவும் இல்லை என சிறிலங்காவின் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இது தொடர்பில் முன்னராக சொன்ன கூற்றையும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

மேலும். காணிகளை பகிர்வது என்பது தேசிய இனவிகிதத்தின் அடிப்படையில் அன்றி மாகாண இனவீதத்தின் அடிப்படையில் அல்ல என 13இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாணசபைக்குள்ளான எந்தவொரு விடயத்தினையும் தேசிய கொள்கை எனக்கூறி "கொழும்பு" பறித்துக் கொள்ளவும் முடியும். சமீபத்திய நாட்களில் மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக உள்வாங்கிக் கொள்கின்ற கொழும்பின் நடத்தையின் தந்திரத்தை இதில் புரிந்து கொள்ளலாம். இதனால் மாகாணசபைகள் ஊடாக குடியேற்றங்களைத் தடுக்கலாம் என்பது ஏற்படைய கருத்தல்ல என குறிப்பிடுகின்றார்.

13ஐ நடைமுறைப்படுத்தக் கோருவது இந்தியாவை தமிழர் விடயத்தில் தலையிடக் கோருவதே அதன் நோக்கம் என கூறப்படுகின்ற கருத்து தொடர்பில் தனது பார்வையினை வெளிப்படுத்தி பிரதமர் வி.உருத்திரகுமாரன், 13ம் திருத்தச் சட்டம் என்பது ஓர் உள்நாட்டு சட்டம். அதனை நடைமுறைப்படுத்த கோரும் அதிகாரம் எந்தவொரு வெளிநாட்டுக்கும் இல்லை எனக் குறிப்பிடுகின்றார்.

ஆனால், தமிழர்கள் விடயத்தில் இந்தியா தலையிடுவதற்கு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உரிமை உண்டு. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் இலங்கைதீவின் வடக்கு- கிழக்கு தமிழர்களின் தாயகம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்று நடந்தேறும் நிலஅபகரிப்புக்கள், சிங்கள குடியேற்றங்கள், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உறுதிசெய்யப்பட்ட தமிழர் தாயகத்தை அழிக்கின்றது என்ற அடிப்படையில், இந்தியா தலையீடு செய்யலாம். நாமும் இதனையே எதிர்பார்கின்றோம். ஆனால் இதற்கான அரசியல் விருப்பு இந்திய அரசுக்கு இருக்க வேண்டும். சிறிலங்கா அரசைத் திருப்திப்படுத்தி தனது நலன்களை அடைந்து கொள்ளலாம் என்பது நாளடைவில் சாத்தியப்படப் போவதில்லை என்பதனை இந்திய அரசு புரிந்து கொள்ளும் நாள் வரும்போது இது நிகழவும் கூடும். இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பது ஓர் சர்வதேச ஒப்பந்தம். அதனை சிறிலங்கா மீறும் போது அதனை உலக நீதிமன்றத்துக்கு இந்தியா கொண்டு செல்ல முடியும் எனக் கூறுகின்றார்.

மேலும் இவ்விடயத்தில் கருத்த தெரிவித்த பிரதமர் வி.உருத்திரகுமாரன், தமிழர் விடயம் தொடர்பில் தலையீடு செய்வதற்கு 13 தேவையில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தமும் தேவையில்லை. 1983 யூலை இனப்படுகொலையின் போது நரசிம்மராவ், 1983 நொவம்பரில் ஜீ.பார்தசாரதி, 1985 ரொமேஸ் பண்டாரி, 1986ல் சிதம்பரம் என இத்தலையீடுகள், 13 யைக் காட்டியோ அல்லது இலங்கை-இந்திய ஒப்பந்த்தை காட்டியோ நிகழவில்லை. இவை யாவுமே இதற்கு முன்னராக நிகழ்ந்தவை.

அண்மையில் நேபாளத்தில் மதாசி தொடர்பாக இந்தியா அழுத்தம் கொடுத்தமை உள்நாட்டு சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது சர்வதேச ஒப்பந்ததின் அடிப்படையிலோ நிகழ்ந்தது அல்ல.

பங்களாதேஸ் விடயத்தில் இந்தியா தலையிட்டமை உள்நாட்டு சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது சர்வதேச ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ நிகழ்ந்தது அல்ல. மாறாக பரிகாரநீதியின் அடிப்படையிலே தனது தலையீடுகள் அமைந்தன என இந்தியா ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கூறியது. இதுபோல பரிகாரநீதியின் அடிப்படையில் நாமும் எதிர்பார்கின்றோம். மேலும், இலங்கைத்தீவில் ஈழத்தமிழ்ர்கள் வலுவுடன் இருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியமானதும் கூட என்பதனையும் மீளவும் வலியுறுத்துகிறோம் எனக்குறிப்பிடுகின்றார்.

டெல்லியை நாம் தமிழ்நாட்டுடன் இணைந்து கொண்டே அணுகவேண்டும். இனவழிப்புக்கு எதிராக சர்வதேச நீதி கோரியும், அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு கோரியும் தமிழ்நாட்டு சட்டப்பெருமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயற்பூர்வமாக "டெல்லியை" நோக்கிக் கொண்டு செல்வதற்கு நாம் அனைவரும் உழைக்க வேண்டும். மாறாக 13ஐ கோருவது என்பது இத் தீர்மானங்களை வலுவிழக்க செய்வதோடு, தமிழர்களின் போராட்டத்தை பின்னோக்கி கொண்டு செல்கின்றது என்பதனை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் எனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் குறித்துரைத்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தனது புலன் உறுப்புகளால் சாகசம் புரிந்து சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த கிழக்கின் மைந்தன் எம். எஸ். எம். பர்ஸான்

தனது புலன் உறுப்புகளான கண், காது, மூக்கு, வாய் ஆகியவற்றைக் கொண்டு மெய்சிலிர்க்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இலங்கையின் அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருதைச் சேர்ந்த எம். எஸ். எம். பர்ஸான் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளார் என்ற செய்திகள் இலங்கையெங்கும் பரவியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்ததாக உலகின் 26 நாடுகளில் வியாபித்திருக்கும் சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் முன்னிலையில் சாதனை வீரன் எம்.எஸ்.எம். பர்ஸ ானாவின் புலனுறுப்புகளால் சாதனைகள் புரியப்பட்டன.

மேற்படி சாதனைகள் உலக சாதனையாளர்களை பதியும் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெறுவதற்காக கிழக்குமாகாணத்தின் கல்முனை ஸ ாஹிரா தேசிய பாடசாலையில் மருதூர் மெய்வல்லுனர் நட்சத்திர விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டன. பர்ஸானால் சாகச நிகழ்வு எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

கண், காது, மூக்கு, வாய் ஆகிய புலனுறுப்புகளால் அபார சாதனையை மேற்கொண்ட பர்சான் காதினால் பலூனை ஊதி உடைத்தல், கண்களால் இரும்பு கம்பியை வளைத்தல், பல்லால் 5.7 கிலோ கிராம் சுமையை சங்கிலிகளின் உதவியுடன் உயர்த்துதல்,குளிர்பானத்தை மூக்குத்துவாரத்தினூடாக அருந்துதல், மூக்கு துவாரத்தினூடாக வயரை செலுத்தி வாயினூடாக எடுத்து மின்குமிழை எரியச் செய்தல், பல்லால் தேங்காய் உரித்தல் போன்ற செயற்பாடுகளை 12 நிமிடத்தில் மேற்கொண்டு உலக சாதனையை நிலைநாட்டி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினார். இதன்படி தனது பெயரை சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

சர்வதேச சோழன் உலக சாதனை இலங்கைப் பிரதிநிதிகளால் இவருக்கான சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக சான்றிதழ், பதக்கம் என்பன வழங்கப்பட்டதுடன் பொன்னாடை போர்த்தி இதன் போது கௌரவிக்கப்பட்டார்.



20 நிமிடங்களுக்குள் இச்சாதனைமேற்கொள்ளப்படவிருந்த நிலையில் அவர் 12 நிமிடங்களில் இச்சாதனையை நிகழ்த்தினார். இச்சாதனை மூலம் நாட்டுக்கும், கிழக்கு மாகாணத்துக்கும், அம்பாறை மாவட்டத்திற்கும், கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்துக்கும் அவர் பெருமை சேர்ததுள்ளார்.

இந்நிகழ்வில் அவரது சாதனைகளைக் நேரடியாகக் கண்டு களிக்கவும் சாட்சிகளாக விளங்கவும் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். அவர்களில் அனைத்துமத போதகர்கள், சர்வதேச சோழன் சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிக-ளான எம்.தனராஜன், ரீ.இன்பராஜா, எஸ்.நிலக்ஸன், கல்முனை மாநகர முதல்வர் ஏ. எம். ரக்கீப், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ரம்சின் பக்கீர், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவேனேந்திரன், கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை அதிபர் எம். ஐ. ஜாபிர், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே. சனூஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோத்தர்கள், கிழக்கு மாகாண கராட்டி சம்மேளன தலைவர் முஹம்மட் இக்பால, மருதம் கலைக்கூடல் மன்றத்தின் தலைவர் அஸ்வான் சக்காப் மௌலானா, முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும், யூத் அலியன்ஸ் ஸ்ரீலங்கா இளைஞர் அமைப்பின் தலைவருமான இஸட். எம் ஸாஜீத் மற்றும் ஊடகவியாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வெளிவிவகார அமைச்சரின் வாக்குறுதிகளை நம்பி இந்தியா ஏமாந்துவிட கூடாது என்கிறார் சி.வி.விக்கினேஸ்வரன்



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் வாக்குறுதிகளை நம்பி இந்தியா ஏமாந்துவிட கூடாது என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்படும் எனப் பல வாக்குறுதிகள் இந்தியாவிற்கு வழங்கப்பட்ட போதும் இலங்கை அரசாங்கம் இதுவரை எதனையும் நிறைவேற்றவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சரின் இந்திய விஜயம் தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் பேசும் போது, “இந்தியாவை தனது நட்பு நாடென காட்டிக்கொள்ளும் விதமாக, இந்தியாவிற்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி இந்தியாவை ஏமாற்றும் நடவடிக்கையே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் இந்திய விஜயம் என தெரிவித்துள்ளார்.

ஆகவே இனப் படுகொலை குறித்த சர்வதேச விசாரணையை இந்தியா நேரடியாக வலியுறுத்தாமல் விட்டாலும் ஏனைய நாடுகளின் ஊடாக அதனை முன்னெடுப்பதற்குரிய இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மேலும் இந்தியாவினால் எவ்வளவு தூரத்திற்கு இலங்கைத் தமிழர்களின் அதிகாரங்களை பலப்படுத்த முடியுமோ அதுவே இந்தியாவின் பாதுகாப்பிற்கும் கைகொடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.



# திறன் வகுப்பறைத் திறப்பு விழா




யா/ தாவளை சைவத் தமிழ் வித்தியாலய திறன் வகுப்பறை திறப்பு விழா 09.02.2022 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் திருமதி. சி. சுக்திநாதன் தலைமையில் இடம் பெற்றது.

திறன் வகுப்பறைக்கான பெயர்ப் பல-கையினை பிரதம விருந்தினரான வலிகாம கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. ரவிச்சந்திரன் திறந்து வைத்தார். லயன். மு. தவக்குமரன் நாடாவினை வெட்டி திறன் வகுப்பறையினை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

தொடர்ந்து பிரதம விருந்தினர் தனது உரையில் திறன் வகுப்பறையின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டதுடன் திறன் வகுப்பறைக் கற்பித்தல் ஊடாக மாணவர் சேர்வு வீதம், வரவு வீதம் என்பவற்றை அதிகரிக்க முடியும். குறித்த பிரதேச மாணவர்களை பயனுறுதி வாய்ந்த திறன் வகுப்பறைக் கற்பித்தல் மூலம் கவர்ந்து இழுக்க முடியும் என்ற கருத்தினையும் வலியுறுத்தினார்.

மேலும் அதிபர் தன் தலைமை உரையில் திறன் வகுப்பறை பாட-சாலை மாணவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் இதனை நாம் சிறப்பான முறையில் வினைத்திறனாகப் பயன்படுத்தி மாணவரின் கற்றல் பெறுபேற்றில் பாரிய மாற்றத்தினையும் மாணவர்களை கவருகின்ற இடமாக பாடசா-லையினை மாற்ற முடியும் என கூறினார். அத்துடன் இத்திறன் வகுப்பறைக்கான முழுமையான முழு நிதிப்பங்களிப்பினையும் வழங்கிய கலாநிதி நித்தியானந்தம் ஐயா அவர்களுக்கும் ரட்ணம் அறக்கட்டளைக்கும் பாடசாலை சமூகத்தின் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுடைய சேவை தொடர்ந்தும் பாடசாலைக்கு கிடைக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சூ. நோபேட் உதயகுமார், வள்ளுவர் இல்ல செல்வி. கானப்பிரியா கலந்து கொண்டதுடன் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்து இருந்தனர்.

# இலங்கையில் அரசாங்க தாதியருக்கு எதிராக அடக்குமுறையைப் பயன்படுத்தும் கோட்டாபாய தலைமை




இலங்கை அரசாங்க தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவரான சமன் ரத்னப்பிரிய ஆகியோர்க்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இரு தடையுத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அவர்களது தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெப்பதை தடுத்து குறித்த தடையுத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த தடை உத்தரவிற்கு தொழிற்சங்கங்கள் பல எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

குறித்த தொழிற்சங்கம் உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்புக்கு எதிராக, சட்ட மாஅதிபரினால் விடுக்கப்பட்ட தடையுத்தரவு கோரிக்கைக்கு அமைய இவ்வாறு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க இலங்கையில் தாதியர்களின் பணிப் பகிஷ்ரிப்பு நடவடிக்கை காரணமாக வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள அசௌரிய நிலை தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு எடுத்துக் கூறி, அறிக்கை சமர்ப்பித்திருந்தாலும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கை என்றே எதிர்க்கட்சிகள் கருதுகின்றன.

எனினும் சட்ட மா அதிபரின் கோரிக்கையை ஏற்ற கொழும்பு மாவட்ட நீதிமன்றம், தொடர்ந்தும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுத்து, அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவருக்கு எதிராக இவ்வாறு தடையுத்தரவுகளை வழங்கியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல், சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் மற்றும் உதவி வைத்திய சேவைகளில் ஈடுபடும் 18 சு-காதார தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர் என்பதும் இந்த போராட்டத்திற்கு ஏனைய பல தொழிற்சங்கங்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# பயனில்லாத பீரிஸின் பயணம்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**

"**போ**ன மச்சான் திரும்பி வந்தான்" என்கிற கதை தான் ஜி எல் பீரிஸின் இந்தியப் பயணம். அவர் மூன்று நாள் பயணமாக இந்தியா செல்கிறார் என்று ஓரிரு இலங்கை பத்திரிகைகள் கூறின. ஆனால் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ் ஜெயசங்கரை முக்கியமாகச் சந்தித்தை தவிர அவர் புது டில்லியில் என்ன செய்தார் என்பதை யாரும் அறியவில்லை. இந்திய ஊடகங்கள் அவரது விஜயத்தை கண்டுகொண்டதாகக் கூட தெரியவில்லை.

இலங்கை அரசின் துதி பாடிகளாக இருக்கும் ஊடகங்கள் இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட ஊடகச் செய்தியை அப்படியே "வெட்டி-படியெடுத்து-ஒட்டும்" வேலையை மட்டுமே செய்தன. அதாவது வந்த அறிக்கையை அப்படியே வெளியிட்டன. அந்த அறிக்கையை இலங்கை பத்திரிகைகளும் வெளியிட்டன. நானறிந்தவரையில் இலங்கை வெளியுறவு அமைச்சகம் அவரது இந்திய விஜயம் குறித்து அறிக்கை ஏதும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

பேராசிரியர் ஜி எல் பீரிஸ் தற்போதிருக்கும் சூழலில் இந்திய வெளியுறவு அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருடனான கூட்டத்தை காணொளி உரையாடல் மூலமே முடித்திருக்க முடியும். எனினும் நேரில் சென்றார். அவர் இலங்கை ஜனாதிபதியிடமிருந்து மிகவும் முக்கியமானதொரு நேரடிச் செய்தியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோதிக்கு எடுத்துச் சென்றார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் கசிந்துள்ளன.

எனினும் அவரால் இந்தியப் பிரதமரைச் சந்திக்க முடியவில்லை. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுடனான சந்திப்பு பற்றியும் எந்த செய்தியும் வெளியாகவில்லை. அப்படியென்றால் இந்தப் பயணத்தின் நோக்கம் என்ன? என்கிற கேள்வி யதார்த்தமாக எழுகிறது. கடுமையான பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கி தவிக்கும் சூழலில் அவர் இந்தியா வந்துசென்றுள்ளார். பிச்சை பாத்திரத்துடன் அலைந்து கொண்டிருக்கும் இலங்கை அரசு, யார் எப்படியான நிபந்தனையின் கீழ் கடனோ அல்லது நிதியுதவியோ அளித்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது என்பது தான் யதார்த்தமான நிலை.

ஆனால் சிறிதளவு கூட மனசாட்சியே இல்லாமல், "இலங்கையில் பொருளாதார பிரச்சனை என்று ஏதுமில்லை, நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்ய சில வெளிநாட்டு சக்திகள் முயல்கின்றன் அப்படியான வெளிநாட்டு உதவிகள் எமக்குத் தேவையில்லை" என்று மத்திய வங்கியின் ஆளுநர் கூறியுள்ளார். எனினும் அந்த வெளிநாட்டு சக்திகள் யார், அவர்கள் ஏன் அப்படியான நிலைப்பாட்டில் உள்ளதாக அவர் கூறுவதற்கான காரணம் என்ன என்பதை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கபரால் தனது டிவிட்டரில் கூறவில்லை. நாட்டின் பொருளாதார நிலை சரியில்லை என்பது உலகத்திற்கே தெரியும். இந்தியாவை ராஜபக்ச அரசில் இருக்கும் பலர் தொடர்ந்து கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர் என்பதையும் இந்தியா அறிந்துள்ளது.

பசில் ராஜபக்ச அண்மையில் இந்தியாவிற்கு சென்ற போது சுமார் 900 மில்லியன் டாலர் உதவியும், நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவும் மேலதிகமாக 1.5 பில்லியன் டாலர்களும் உதவியும் அளிக்கப்பட்டது. இது ஓரளவிற்கு சறுக்கி விழும் நிலையில் இருந்த மனிதரைச் சற்று தூக்கி நிறுத்தியது போல் அமைந்தது. ஜனவரியில் பசில் ராஜபக்ச சென்று பணத்தோடு வர, பிப்ரவரியில் பீரிஸ் வெறுங்கையோடு திரும்பியுள்ளார் என்பதே யதார்த்தம்.

கடந்த ஆண்டு ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கை சில உத்தரவாதங்களை அளித்தது. அதில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனவர்கள் தொடர்பில் நேர்மையான நியாயமான பதில் மற்றும் விளக்கங்களை அளிப்பது மற்றும் விசாரணைகளை முன்னெடுப்பது போன்ற பல அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. ஐ நா மனித உரிமைகள் ஆணையத்திடமிருந்து காலக்கெடுவைப் பெற்ற இலங்கைக்கு அடுத்த அதிர்ச்சியாக ஐரோப்பிய நாடாளுமன்ற தீர்மானம் வந்தது. அதில் முக்கியமாக இலங்கைக்கு வரிச்சலுகை அளிக்கும் ஜி எஸ் பி + மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று அந்த தீர்மானம் கூறியது. ஆனால் வழக்கம் போல் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற காத்திரமான முயற்சிகளை எடுக்காமல், பொருளாதார நெருக்கடியில் சிக்கி மக்களை அன்றாட வாழ்விற்கு அல்லாடும் நிலைக்கு ஆட்சியாளர்கள் தள்ளியுள்ளது கசப்பான உண்மை.

மீண்டும் இந்தண்டு பிப்ரவரி 28 முதல் ஏப்ரல் 1 ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவாதம் வரவுள்ள நிலையில் இலங்கை அரசு தனது வெளியுறவு அமைச்சரை இந்தியாவிற்கு அனுப்பி ஆதரவு கோரியுள்ளது என்று என்று தெரிய வருகிறது. கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்பட்டு வாக்கெடுப்பு நடைபெற்ற போது, இந்தியா இலங்கைக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ வாக்களிக்காமல், வாக்கெடுப்பில் பங்குபெறாமல் இருந்தது. இம்முறை அவ்வாறு செய்யாமல் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா நிற்க வேண்டும் என்பதே பேராசிரியர் பீரிஸ் புது டில்லிக்கு எடுத்துச் சென்ற சிறப்புச் செய்தி என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




கடந்த முறை இலங்கைக்கு அவகாசம் அளிக்க தயாராக இருந்த நாடுகளும் இப்போது அதற்கு தயாராக இல்லை. உலக அரங்கான ஐ நா மனித உரிமைகள் ஆணையத்திடம் சில வாக்குறுதிகளை அளித்துவிட்டு அதை செயல்படுத்த உள்நாட்டில் நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, இருக்கின்ற நிலையை மேலும் மோசமாக்கியதாக ராஜபக்ச அரசாங்கத்தின் மீது பன்னாட்டுச் சமூகம் மிகவும் எதிர்மறையான உணர்வைக் கொண்டுள்ளன. எனவே இந்தியா மூலம் சில நாடுகளை தமக்குச் சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும்படி இலங்கை தனது வெளியுறவு அமைச்சரின் பயணத்தின் போது வேண்டுகோள் முன்வைத்துள்ளது என்று புதுடில்லி தகவல்கள் கூறுகின்றன. ஆனால் தற்போதுள்ள சூழலில் இந்தியாவால் அப்படியான உத்தரவாதம் எதையும் அளிக்க இயலாது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் பீரிஸ்-கலாநிதி ஜெயசங்கர் சந்திப்பிற்கு பிறகு கூட்டு செய்தியாளர்கள் சந்திப்பும் இடம்பெறவில்லை. இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் சார்பில் ஊடக அறிக்கை ஒன்று அவர்களது இணையதளத்தின் வெளியானது. அதில் இரு அமைச்சர்களும் பரந்துபட்டளவில் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தனர், நெருக்கமான நட்புடன் கூடிய அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்த முடிவெடுக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது. இது மிகவும் வழமையான ஒரு வாசகமாகும். அதாவது அதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்பதாக அதை புரிந்துகொள்ள வேண்டும்.

"அண்டை நாடுகளுக்கு முக்கியத்துவம்" மற்றும் பிராந்திய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்கிற இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியின் கொள்கையின் அடிப்படையில் இந்தியா இலங்கைக்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்றும் கூறும் அந்த அறிக்கை, இருதரப்பிற்கும் பயனுள்ளதாக இருக்கும் திட்டங்களை விரைவாக முன்னெடுத்துச் செல்ல இலங்கையிடம் வலியுறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கிறது. கொழும்பு துறைமுக நகரம் விஷயத்தில் இலங்கை இந்தியாவிற்கு கொடுத்த வாக்குறுதியைக் கடைப்பிடிக்காமல், கிழக்கு முனையத்தை சீனாவிற்கு நீண்டகால அடிப்படையில் அளித்ததை இந்தியா இன்னும் மறக்கவில்லை. அழும் குழந்தைக்கு வாழைப்பழம் கொடுத்துச் சமாதானப்படுத்துவது போல, அதற்கு பதிலாக ஜப்பானுடன் இணைந்து மேற்கு முனையத்தை புதிய நிபந்தனைகளின் அடிப்படையில் கூட்டாக மேம்படுத்த ஒப்பந்தம் செய்து கொண்டது.



இரு நாடுகளும் தமது கடற் பகுதியின் பாதுகாப்பை வலுப்படுத்தவும் உடன்பட்டன என்று இந்தியத் தரப்பு கூறுகிறது. மிகவும் முக்கியமாக இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் இணக்கப்பாட்டை முன்னெடுக்கவும் தமது அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சருக்கு எடுத்துக் கூறியதையும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அதேவேளை இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் மறுவாழ்வு ஆகியவை குறித்தும் தாங்கள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்ததாக இந்திய தரப்பு தெரிவித்துள்ளது.

"ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் சமமாகவும், நியாயமாகவும் நடத்தப்படுவதன் மூலமே நாட்டில் சமாதானமும் தமிழ் மக்களின் கௌரவமும் பாதுகாக்கப்படும் அதற்கு அதிகாரப் பகிர்வு முகவும் முக்கியமானது" என்று இந்திய வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ எல் பீரிஸிடம் வலியுறுத்தியுள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது.

இலங்கையில் பல தமிழ் அரசியல் கட்சிகள் 13 ஆவது சட்டத்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதிகாரப் பகிர்வு விஷயத்தில் அதற்கும் மேலாகச் செல்ல வேண்டுமென்று இந்தியப் பிரதமருக்கு அண்மையில் கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தனர். ஆனால் எவ்வித அதிகாரமும் இல்லாமல் இருக்கும் மாகாண சபை முறைமை ஒழித்துவிட இலங்கை அரசு துடிப்பாகச் செயல்படுவது அனைவரும் அறிந்ததே. புதிய அரசியல் யாப்பு தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டுவரும் ராஜபக்ச அரசு ஒற்றையாட்சி என்பதிலேயே குறியாகவுள்ளது.

13 ஐ ஒழிப்பதற்கு இந்தியா உடன்படாது என்கிற விஷயம் வெளியுறவு அமைச்சர் மூலம் இலங்கை அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று புது டில்லியில் இது விஷயம் தொடர்பில் உரையாடியபோது அறிய முடிந்தது. இந்த பேச்சுவார்த்தையில் இருநாட்டு மீனவர்கள் விஷயம் முக்கியமாக பேசப்பட்டு காத்திரமான ஒரு முன்னெடுப்புச் செய்யப்படும் என்ற எதிர்பார்ப்பும் பொய்த்துப் போனது. மீனவர்கள் பிரச்சனையை மனிதாபிமான நோக்கோடு அணுக வேண்டும், இருதரப்பும் கூட்டுக் குழுவொன்றை அமைத்து பேச வேண்டும் என்கிற ஒற்றை வரியில் அந்த விஷயம் முடிக்கப்பட்டுவிட்டது.

இந்த மாதம் 28 ஆம் திகதி தொடங்கி ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் 49 ஆவது பொதுச்சபை அமர்வில் இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெறும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் சூழல் என்ற தலைப்பில், ஐ நா மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் அறிக்கை ஏ/ எச் ஆர் சி/ 49/9 என்ற தலைப்பில் இடம்பெறுகிறது. இதில் இந்தியா தமக்குப் பக்கபலமாக நிற்க வேண்டும் என்கிற கோரிக்கை தொடர்பில் இலங்கைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

நம்பிக்கையுடன் சென்ற பிரீஸ் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார் என்பதே யதார்த்தம்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் தாய் மற்றும் இரு பிள்ளைகளை முக்கொலை புரிந்தவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படவுள்ளது

கனடாவின் ஏஜெக்ஸ் நகரில் ஒரு தாய் மற்றும் அவரது இரு பிள்ளைகளையும் கொலை செய்த குற்றச்சாட்டில் விசாரணையை நீண்ட காலமாக எதிர்கொண்ட ஒரு நபருக்கு தீர்ப்பு வழங்கப்படும் நாள் மார்ச் மாதம வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் கிழக்கு பகுதியில் நடந்த இந்த கொலை வழக்கில் கைதாகியுள்ள 33 வயது கோர்னி பென் என்பவர் மீதான மூன்று கொலை வழக்குகளும் நிரூபிக்கப்படவில்லை என்றாலும் அரச தரப்பு வழக்கறிஞர்கள் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வாதிட்டனர்.

அரசு தரப்பு முன்வைத்துள்ள வாதத்தில், 2018 மார்ச் மாதம் 14ம் தி-கதி கொலையாளி கோர்னி பென் இந்த மூன்று கொலையையும் செய்துள்ளார் என்றே குறிப்பிட்டுள்ளது. 39 வயதான கிராஸ்மிரா என்னும் பெயர் கொண்ட அந்த தாய் தன்னுடனான உறவை முறித்துக்கொண்ட ஆத்திரத்தில், அவரையும் அவர் பிள்ளைகள் இருவரையும் கோர்னி பென் கொலை செய்துள்ளார்.

குறித்த தாயாரும் மகளும் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டனர். என்றும் 15 வயது சிறுவன் ராய் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் பொலிஸ் விசாரணைகள் மற்றும் வைத்திய அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஆனால், அந்த குடும்பத்தை கொலை செய்யும் அளவுக்கு தமக்கு துணிவு இல்லை என கொலையாளி கோர்னி பென் குறிப்பிட்டுள்ளதை நீதி மன்றம் ஏற்கவில்லை என்றும் அவர் தனக்காக எந்தவொரு சட்டத்தரணியையும் வைத்துக் கொள்ளவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.





இதே வேளை அரசாங்கத்தின் செலவி-ல் நீதிமன்றம் ஏற்பாடு செய்த சட்டத்தரணி இந்த வழக்கு தொடர்பில் முன்னெடுத்த விசாரணையில், அந்த நபரே மூன்று கொலையும் செய்துள்ளதை நிரூபிக்கும் தடயங்கள் பல உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், தமக்கான வாதங்களை அந்த நபரே முன்வைத்து வந்துள்ளார். கொரோனா பரவல் மற்றும் ஊரடங்கு காரணமாக தாமதமாகிவந்த தீர்ப்பு இரண்டாம் நிலை கொலை வழக்கு பதியப்பட்டுள்ளதால் ஆயுள் தண்டனை கிடைக்க வாய்ப்பிருப்பதாகவே கூறப்படுகிறது.



# கனடாவின் பிரதான எதிர்க்கட்சியும் ஒட்டாவா ஆர்ப்பாட்டக்காரர்களை வீடுகளுக்கு செல்லுமாறு வேண்டியுள்ளது

கனடிய பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் சார்பில் அதன் இடைக்காலத் தலைவர் கேண்டிஸ் பெர்கன் அவர்கள் கூட தற்போது ஒட்டாவா பாராளுமன்றத்திற்கு அண்மையில் சட்டவிரோதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை வீடுகளுக்கு திரும்பிச் செல்லுமாறு வேண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக கனடியப் பிரதமர் அவருக்கு நன்றி தெரிவித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

ஒட்டாவா-இடைக்கால கன்சர்வேடிவ் தலைவர் கேண்டிஸ் பெர்கன், பல நாட்களாக ஒட்டாவா நகரத்தில் சாலைகளை அடைத்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை உடன-டியாக அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வீதிகளை விட்டு நீங்கி உடனடியாக வீட்டிற்கு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறார்.

ஆனால் கோவிட்-19 கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பூசி ஆணைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான வேண்டுகோள்கள் தொடர்பாக தானும் தனது கட்சியும் கவனத்தில் தீவிரமாக எடுக்கவுள்ளதாக அவர் உறுதியளிக்கிறார்.

கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் இடைக்காலத் தலைவராக அண்மையில் தெரிவான பெர்கன் அவர்கள் நேற்று வியாழன் அன்று ஒட்டாவா பாராளுமன்றத்தில். கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களோடு நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இதனைத் தெரிவித்தார்.

இம்மாத இறுதிக்குள் கோவிட்-19 நடவடிக்கைகளை நீக்குவதற்கான திட்டத்தை செயல்படுத்த ஆளும் லிபரல் அரசாங்கத்திற்கு பெர்கன் அழுத்தம் கொடுக்க உள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு செய்தியாக வெளியிட்டார்.

கனடாவிலிருந்து அமெரிக்காவிற்கு எல்லை தாண்டி பயணிக்கும் கனரக வாகன சாரதிகளுக்கு கட்டாய தடுப்பூசி தேவைகள் குறித்து ஆத்திரமடைந்த சாரதிகளும் வாகன உரிமையாளர்களும் ஆரம்பித்த அவர்களின் போராட்டங்கள் தொடங்கி இரண்டு வாரங்களுக்கு அதிகமாகச் செல்வதை தானும் தனது கட்சியும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது என்றும் பெர்கன் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேற வேண்டிய நேரம் இது என்பதையும் மிகவும் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர் தொடர்ச்சியாக விடாப்பிடியாக உள்ளதால் அவர்கள் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்குமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

"ஒட்டாவாவில் எம்மை விமர்சித்து கருத்துக்களை தெரிவிக்கும் அரசியல்வாதிகளே. நீங்கள் ஒரு செய்தியைக் கொண்டு வந்தீர்கள். உங்களுக்காகவும், இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப விரும்பும் அனைத்து ஒட்டாவா வாழ் மக்களுக்காகவும் கனடியர்களுக்காகவும் நாங்கள் நிற்போம். ஆனால் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நாங்கள் எங்கள் போராட்டத்தை நிறுத்த மாட்டோம்," என்று ஆர்ப்பாட்டக்காரர்களின் தரப்பில் பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இந்த அறிக்கைக்கு பதிலாக தெரிவித்துள்ள இடைக்கால கன்சர்வேடிவ் தலைவர் கேண்டிஸ் பெர்கன் "இன்றே, முற்றுகைகளை அகற்றுமாறு நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அமைதியாகவும் சட்டப்பூர்வமாகவும் எதிர்ப்புத் தெரிவிக்கலாம், ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை காத்துக்கொள்ளும் வகையில் தடைகளையும் கனரக வாகனங்களையும் லாரிகளையும் அகற்ற வேண்டிய நேரம் இது" என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தடுப்பூசி செலுத்தும் கட்டுப்பாடுகளுக்கு எதிராக போராடச் சென்ற தாயார் மரணத்தை தழுவியதால் ஆர்ப்பாட்டக்காரர்களை எச்சரிக்கும் அவரது மகள்

ரொறன்ரொவில் தடுப்பூசி செலுத்தும் கட்டுப்பாடுகளுக்கு எதிராக ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்திற்கு அருகில் போராடச் சென்ற தாயா-ர் மரணத்தை தழுவியதால் ஆர்ப்பாட்டக்காரர்களை எச்சரிக்கும் வகையில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்ட அவரது மகள் ஒருவரின் செயற்பாடுகள் தேசிய ஊடகங்களை கவர்ந்துள்ளன என அறியப்படுகின்றது.

சனிக்கிழமையன்று டொராண்டோ டிரக்கர் போராட்டத்திற்காக ன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்திற்கு அருகில் கூடியிருந்தவர்களுக்கு ஒரு எச்சரிக்கை என்ற தலைப்பில் அவர் கைகளில் எடுத்துச் சென்ற பதாகைகளும் துண்டுப்பிரசுரங்களும் பகிரங்கமாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

"என் அம்மா கோவிட் நோயால் இறந்துவிட்டார்," "முட்டாள்களே இனியாவதுதடுப்பூசி போடுங்கள்." என்று லெஹ்ரர் என்னும் அந்தப் பெண் தனது பதாகைகளில் தெரிவித்துள்ளார்

சினிமா

# சிவாஜி குடும்பத்துக்கும் லதா மங்கேஷ்கருக்கும் இடையிலான பாசமலர் உறவு

கொரோனா மற்றும் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த பிரபல பாடகி லதா மங்கேஷ்கருக்கு கடந்த சில வாரங்களாக மும்பை பிரீச் கேண்டி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இன்று அவர் சிகிச்சை பலனின்றி காலமானார். இதையொட்டி 2 நாட்களுக்கு நாடு முழுவதும் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. லதா மங்கேஷ்கருக்கும் நடிகர் சிவாஜி கணேசன் குடும்பத்தாருக்கும் நெருக்கமான பாசமலர் உறவு இருந்துள்ளது. லதா மங்கேஷ்கரை விட சிவாஜி கணேசன் ஒரு வயது மூத்தவர். இருவரும் சம காலத்து கலைஞர்கள் என்பதால், சிவாஜி கணேசன், லதா மங்கேஷ்கர் இடையே நல்ல நட்புறவு இருந்துள்ளது.

சிவாஜி கணேசனின் ஒவ்வொரு பிறந்த நாளையொட்டி (அக்டோபர் 1) லதா மங்கேஷ்கர் சமூக வலைதளங்களில் வாழ்த்து சொல்ல தவறியது இல்லை. கடந்த ஆண்டு லதா மங்கேஷ்கர் தனது சமூக வலைதளப் பதிவில், "நேற்று சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள். நான் அவரை அண்ணா என்றுதான் எப்போதும் அழைப்பேன். அவர் இந்திய சினிமாவின் ஈடு இணையற்ற பொக்கிஷம். அவர் என்னை தங்கையாக ஏற்றுக் கொண்டதை நான் பெற்ற பாக்கியமாக கருதுகி-றேன். அவரது மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு, அவர்களது சகோதரிகள் என்மீது மிகுந்த அன்பு வைத்துள்ளனர். அவர்களின் வழியே நான் சிவாஜி அண்ணனும், கமலா அண்ணியும் என்னுடன் இருப்பதை உணர்கிறேன். சிவாஜி கணேசன் என்ற இந்த மாபெரும் கலைஞருக்கு எனது கூப்பிய கரங்களுடன் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்." எனப் பதிவிட்டுள்ளார். இந்த பதிவு தற்போது வைரலாகியுள்ளது. மேலும், சிவாஜி உயிருடன் இருந்த காலம் வரை லதா மங்கேஷ்கர் சென்னை வரும்போதெல்லாம் சிவாஜி வீட்டிற்கு சென்று அவரது குடும்பத்தினரை சந்திப்பதை வழக்கமாக கொண்டுள்ளார்.



இவர்களின் அண்ணன் - தங்கை உறவு அந்த அளவிற்கு பிணைப்புடன் இருந்துள்ளது. இந்நிலையில், லதா மங்கேஷ்கரின் மறைவு குறித்து சிவாஜியின் மூத்த மகன் ராம்குமார் கூறியதாவது: அனைவருக்கும் வருத்தமான நாள். பாரத ரத்னா லதா மங்கேஷ்கர் நம்மை விட்டு போய்விட்டார். இப்போது நடிகர் திலகத்துடன் இருப்பதாக நினைக்கிறேன். அண்ணனும் தங்கையும் ஒன்றாக இருக்கின்றனர் என்றே நினைக்க முடிகிறது. இன்னும் நீண்ட காலத்திற்கு அவர்களின் குரல்கள் நம் மனது மற்றும் நினைவில் இருக்கும். அவரை மறக்கவே முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியாவைக் கையாள்வது?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த ஞாயிற்றுக்கிழமை சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் "நாங்களும் இந்தியாவின் தலையீட்டைக் கோரித்தான் நிற்கிறோம்" என்று கூறுகிறார். அவருடைய கட்சி கிட்டு பூங்காவில் ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்திலும் இந்தியா ஒரு நட்பு சக்தி என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் கிட்டு பூங்கா ஊர்வலத்துக்கு முன்னும் பின்னும் அக்கட்சியின் ஆதரவாளர்களும் பிரதானிகளும் வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் அவர்கள் இந்தியாவை கையாள வேண்டும் அல்லது அணுக வேண்டும் என்ற விருப்பத்தை செயலில் வெளிப்படுத்துவதாகத் தெரியவில்லை.

13ஆவது திருத்தத்தை எதிர்ப்பது என்பது அதன் தர்க்க பூர்வ விளைவாக இந்தியாவுக்கு எதிராகத்தான் அமையும். ஏனென்றால் கடந்த 34 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா 13வது திருத்தத்தை ஒரு வாய்ப்பாடு போல சொல்லி வருகிறது. எனவே தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு தீர்வை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா முன்வைக்கும்போது அதை எதிர்ப்பவர்கள் தவிர்க்கவியலாதபடி இந்தியாவையும் எதிர்க்க வேண்டித்தான் இருக்கும். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் அதற்காக இந்தியா ஒரு பகை நாடா என்பதுதான்.

கிட்டு பூங்கா பிரகடனம் இந்தியாவை ஒரு நட்பு நாடாக சித்தரிக்கிறது. ஆனால். ஈழத் தமிழர்கள் இந்தியாவை நட்பு நாடாக பார்த்து அதை நம்பவும் தேவையில்லை பகை நாடாகப் பார்த்து அதை எதிர்க்கவும் தேவையில்லை. அதை தமது நோக்கு நிலைகளில் இருந்து கையாண்டாலே போதும். அதற்குப் பெயர்தான் ராஜதந்திரம். இந்தியாவை ஒரு நட்பு நாடாக கருதினால் அல்லது நம்பினால் அதன் விளைவாக இந்தியாவின் மீது நம்பிக்கைகளை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். அதுதான் முதலாம் கட்ட ஈழப் போரின்போது நடந்தது. ஆனால் இந்தியா ஒரு பேரரசு. அது ஈழத் தமிழர்களை அதன் பேரரசு நலன்களின் அடிப்படையில்தான் அணுகும். எனவே இது விடயத்தில் நட்பு பகை என்பதெல்லாம் கிடையாது. நலன்சார் பேரம்தான் உண்டு. இந்தியாவை நட்பு பகை என்ற இருமைகளுக்கு அப்பால் கையாளப்பட வேண்டிய ஒரு பிராந்திய பேரரசு என்ற அடிப்படையில் பொருத்தமான ஒரு வியூகத்தை வகுப்பதுதான் சரியாக இருக்கும்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்தியாவை குறித்து ஒரு வித கறுப்பு - வெள்ளை சிந்தனைதான் உண்டு. ஒன்றில் இந்தியாவை நேசிக்கிறார்கள், அல்லது இந்தியாவை வெறுக்கிறார்கள். இரண்டுக்குமிடையே இந்தியாவை புத்திசாலித்தனமாக கையாளவேண்டும் என்ற நோக்குநிலை ஈழத் தமிழர்கள் மத்தியில் மிகவும் பலவீனமாகவே காணப்படுகிறது.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது, பகைவர்களும் கிடையாது. நிரந்தர நலன்கள்தான் உண்டு. ஈழத் தமிழர்கள் இந்தியாவை ஒரு நட்பு நாடாக பார்க்கும் நிலைமை எங்கிருந்து உற்பத்தியாகிறது? அது தமிழகத்தை மையமாக வைத்து சிந்திக்கும் போதுதான் உற்பத்தியாகிறது. கடலால் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழகத்தை மொழியால் இனத்தால் பண்பாட்டால் ஈழத் தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு நிலை உண்டு. எனவே தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் உள்ள இந்த பிணைப்பை - கனெக்டிவிற்றியை - வைத்துக் கொண்டு இந்தியாவை ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள்.

தமிழகம் எனப்படுவது கூட ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு சில சனத்தொகையோ நிலப்பரப்போ அல்ல. அது பல அடுக்குகளைக் கொண்டது. அங்கே ஆளுங்கட்சி உண்டு. ஏனைய கட்சிகள் உண்டு. ஈழ அபிமானிகளாகக் காணப்படும் கட்சிகள் உண்டு. ஈழ உணர்வாளர்கள் உண்டு. இவை தவிர தமிழகத்தின் பொது சனம் உண்டு. இதில் தமிழகத்தின் ஆளும் கட்சி இந்திய சமஸ்டி கட்டமைப்புக்கு கட்டுப்பட்டது. அது இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கையை மீறி ஈழத்தமிழர்களுக்காக முடிவெடுப்பதில் வரையறைகள் இருக்கும். ஏனைய கட்சிகளும் கூட ஈழத்தமிழர்களின் விவகாரத்தை தமது தேர்தல் அரசியல் நோக்கு நிலையிலிருந்தே அணுகும். இதுவும் ஈழத்தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஆனால் ஈழத்தமிழர்களின் நெருங்கிய நண்பர்களாக காணப்படும் கட்சிகளும் அரசியல்வாதிகளும் உணர்வாளர்களும் தேர்தல் மையநோக்கு நிலைகளுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்காக அர்ப்பணிக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இது ஒரு சிறு தொகை. இது தவிர தமிழக பொது சனங்கள் ஈழத்தமிழர்களுக்கு ஏதும் நடந்தால் கொதித்து எழுவார்கள். ஆனால் அக்கொதிப்பை மடைமாற்றவும் திசை திருப்பவும் தலைவர்களால் முடியும். இதுதான் தமிழகம். எனவே தமிழகத்தை தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடாது.

மேலும்தமிழகத்துக்கும்ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான இனமொழி உறவை அடிப்படையாக வைத்து இந்தியா ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் தலையிடுகிறது என்ற ஒரே காரணத்துக்காக ஈழத் தமிழர்களின் விவகாரத்தை இந்தியா தமிழகத்துக்கு ஊடாகத்தான் பார்க்கும் என்றோ, அல்லது இனமான உணர்வுக்கூடாகத்தான் அணுகும் என்றோ எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கையை அவ்வாறு விளங்கிக் கொள்ளவும் கூடாது.

ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கை அதன் அரசியல் பொருளாதார ராணுவ நலன்களின் அடிப்படையில்தான் வடிவமைக்கப்பட்டிருக்கும். அயல் நாடுகளுடனான உறவும் அவ்வாறுதான் அமையும். புதுடில்லிக்கு கொழும்புக்கும் இடையிலான உறவும் அப்படித்தான். எனவே அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார்நலன்சார் உறவுகளின் அடிப்படையில்தான் இந்தியா இலங்கையை அணுகும். அதிலும்கூட கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத்தான் அவ்வாறு அணுகும். கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தின் நலனை பகைத்துக்கொண்டு இந்தியா ஈழத்தமிழர்களை முழுமையாக நெருங்கிவராது. கொழும்பில் இருக்கும் அரசாங்கம் பணிய மறுக்கும்பொழுது ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு அரசாங்கத்தின் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்கும். இவ்வாறு ஈழத் தமிழர்களை ஒரு கருவியாக பயன்படுத்த விளையும் பொழுது அதில் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான இன ரீதியான, மொழி ரீதியான, பண்பாட்டு ரீதியிலான இணைப்புகளை இந்திய மத்திய அரசு தனது புவிசார் அரசியல் நோக்கு நிலையிலிருந்து அணுகும். நிச்சயமாக ஈழத்தமிழர்களின் செண்டிமெண்டலான நோக்கு நிலைகளில் இருந்தோ அல்லது தமிழகத்தின் இன உணர்வு நோக்கி நிலைகளிலிருந்தோ அணுகாது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்திய-ஈழத்தமிழ் உறவை இந்த அடிப்படையில்தான் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால் ஈழத் தமிழர்களில் கணிசமானவர்கள் தமிழகத்துக்கும் தமக்கும் இடையிலான இனம் சார்ந்த,மொழி சார்ந்த, பண்பாடு சார்ந்த நெருக்கத்துக்கூடாக இந்திய மத்திய அரசை விளங்கிக் கொள்ள முற்படுகிறார்கள். இது தவறு. இதுவிடயத்தில் தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் இடையிலான கனெக்ரிவிட்டியை இந்திய நடுவண் அரசு அதன் பேரரசு நோக்கு நிலையிலிருந்து பயன்படுத்துகிறது என்பது ஒரு கொடுமையான யதார்த்தம். அதை ஈழத்தமிழர்கள் சென்ரிமெண்டலாக விளங்கிக்கொள்ள தேவையில்லை. ஏனென்றால் அரசுகள் எப்பொழுதும் அப்படித்தான் நடந்து கொள்ளும். இது மேற்கத்தைய அரசுகளுக்கும் பொருந்தும். சீனாவுக்கும் பொருந்தும். எனவே ஈழத் தமிழர்கள் இந்தியாவை செண்டிமெண்டலாக அணுகும் அந்த நோக்கு நிலையில் இருந்து விடுபட வேண்டும். மாறாக புத்தி பூர்வமாக அணுக வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றால் அது இந்தியாவுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற தர்க்கத்தை பலமாக முன்வைக்கவேண்டும். ஈழத்தமிழர்கள் மிகநீண்ட கடல் எல்லைகளின் சொந்தக்காரர்கள்.தமிழ்க் கடலை கட்டுப்படுத்தும் எந்த ஒரு நாடும் இந்தியாவின் தெற்கு மூலையை கட்டுப்படுத்தும். எனவே தமிழ்க் கடலை இழந்தால் இந்தியா தனது தெற்கு வாசலின் பாதுகாப்பையும் இழக்க நேரிடும். இந்த தர்க்கத்தை ஈழத்தமிழர்கள் முன்வைக்கலாம். இந்தியாவை நோக்கி ஈழத்தமிழர்கள் முன்வைக்கக்கூடிய கோரிக்கைகளும் அந்த அடிப்படையில் அமைவது நல்லது.

ஒரு மக்கள் கூட்டம் வெளிநாடுகளை நோக்கி அதன் கோரிக்கைகளை முன்வைக்கும்போது வெளிநாடுகள் ஏற்றுக்கொள்ளும் என்று பார்த்து அந்தக் கோரிக்கைகளை வடிவமைக்கத் தேவையில்லை. மாறாக தங்களுக்கு எது தேவை என்ற அடிப்படையில் உச்சமான கோரிக்கைகளை முன் வைக்கலாம். பின்னர் அதற்காக உழைக்க வேண்டும். இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கும் கட்சிகள் இந்த விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் 13வது திருத்தம் என்ற கோரிக்கையை ஈழத் தமிழர்கள் முன்னிலைப்படுத்த தேவையில்லை. அதேசமயம் 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு இந்தியா தொடர்பான தனது அணுகுமுறைகளில் ஒரு குழப்பமான படத்தை வெளிக்காட்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இதில் ஒரு தெளிவான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அக்கட்சியின் தலைவர்கள் தாங்கள் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு எதிர் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் 13ஐ அவர்கள் எதிர்க்கும் விதம் அக்கட்சியிடம் இந்தியாவை என்கேஜ் பண்ணுவதற்குரிய பொருத்தமான வெளியுறவுத் தரிசனம் ஏதும் உண்டா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இந்தியா ஒரு பிராந்திய பேரரசு ஈழத்தமிழர்கள் அரசற்ற ஓரினம். இனப்படுகொலை, புலப்பெயர்ச்சி போன்றவற்றால் மெலிந்து போய் இருக்கும் ஒரு மக்கள் கூட்டம். ஈழத்தமிழர்கள் மத்தியில் மகப்பேற்று விகிதமும் கவலை தரும் வகையில் குறைந்துவருகிறது. சில ஆண்டுகளில் ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவின் இரண்டாவது சிறிய தேசிய இனமாக மாறக்கூடிய ஆபத்து உண்டு என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். எனவே ஈழத்தமிழர்கள் குறுகிய காலத்துக்குள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு ஒரு வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும்.

ஓர் அரசற்ற இனத்தைப் பொறுத்தவரை அல்லது சிறிய தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை பக்கத்துப் பேரரசுதான் இறுதியிலும் இறுதியாக தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதனை உலகின் நவீன வரலாறு உணர்த்துகிறது. இப்பொழுது கொதிநிலையில் இருக்கும் உக்ரேன் விவகாரத்திலும் இதுதான் நடக்கிறது. ரஷ்யா கிரிமியாவை ஆக்கிரமித்தது இந்த அடிப்படையில்தான். தீபெத்தில், பலுசிஸ்தானில், காஷ்மீரில் போராடும் மக்களுக்கு மீட்சி கிடைக்காமல் இருப்பதும் அந்த அடிப்படையில்தான். பங்களாதேஷ் தனிநாடு ஆகியதும் அந்த அடிப்படையில்தான். பின்லாந்து மிக நுட்பமான ஒரு வெளியுறவுக்கொள்கையை வடிவமைக்க வேண்டி வந்ததும் அந்த அடிப்படையில்தான். கிழக்குத் திமோரில் பொதுமக்கள் வாக்கெடுப்பின் முடிவுகளை இறுதியிலும் இறுதியாக நடைமுறைப்படுத்தியது பக்கத்தில் இருக்கும் பலமான அரசாகிய ஆஸ்திரேலியாதான். எனவே சிறிய தேசிய இனங்களின் போராட்டங்களைப் பொறுத்தவரை இறுதி முடிவை தீர்மானிப்பது பக்கத்து பேரரசுகள்தான். அல்லது பிராந்திய பேரரசுகள்தான் என்பதே உலகளாவிய அனுபவம் ஆகும்.

இந்த அடிப்படையில்தான் ஈழத் தமிழர்கள் இந்தியாவை விளங்கிக் கொள்ள வேண்டும். கையாள வேண்டும். பக்கத்து பேரரசை மீறி வெளியில் உள்ள பேரரசுகள் தலையிட முடியாது என்பதற்கு ஆகப் பிந்திய உதாரணம் கிரிமியா ஆகும். ஈழத் தமிழர்களின் விடயத்திலும் அதுதான் மெய்நிலை. எனவே ஈழத்தமிழர்கள் இந்தியாவை விஞ்ஞானபூர்வமாக விளங்கிக்கொள்ள வேண்டும். விஞ்ஞான பூர்வமாக அணுக வேண்டும். சென்ரிமென்டலாக அல்ல.

# கஜேந்திரகுமார் புதரில் இருக்கும் இரண்டு பறவைகளைப் (இணைப்பாட்சி) பிடிக்கும் ஆசையில் கையில் உள்ள ஒரு பறவையைப் (13 ஏ) பறக்க விடச் சொல்கிறார்!

*- கனடா நக்கீரன்*

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

13 ஆவது திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் உண்டென்பதை மறுப்பதற்கில்லை. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் ஆளுநர் கையில் என்பதும் ஆளுநர் சனாதிபதியின் முகவர் என்பதும் உண்மையே. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் செய்ய முடியாது. செய்வதாக இருந்தால் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இதன் காரணமாகவே உயர்நீதி மன்ற நீதியரசர் **K.A.P.** இரணசிங்கி ஒற்றையாட்சி முறைமையை மீறும் சரத்துக்களை நீக்கினால் தான் 13 சட்ட திருத்த அரிசயலமைப்பு வரைவுக்குத் தான் ஒப்புதல் தர அணியமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால் மாகாண சபைக்கு ஓர் அமைச்சர் வாரி-யம் இருக்கிறது. அமைச்சர்களது நியமனம் முதலமைச்சரின் ஆலோசனைப்படியே நடக்கிறது. அமைச்சரவை மட்டுமல்ல ஏனைய விடயங்களிலும் முதலமைச்சரரின் ஆலோசனைப் படியே ஆளுநர் நடந்து கொள்ள வேண்டும். 2013-2018 வரை இயங்கிய வட மாகாண சபையில் முதலமைச்சரின் ஆட்சிக்கு ஆளுநர்கள் முட்டுக் கட்டையாகவோ தடையாகவோ இருந்ததில்லை. 13ஏ திருத்தச் சட்டத்தில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட காணி அதிகாரங்கள், பொலீஸ் மற்றும் சட்டம் ஒழுங்கு அதிகாரங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டால் மாகாண முறைமையில் இணைப்பாட்சிக்கு உரிய பல அம்சங்கள்அதில் இருக்கும்.

எனவேதான் முன்னர் கூறியவாறு இனச் சிக்கலைத் தீர்த்து வைக்க இணைப்பாட்சி சரியான தீர்வாக இருந்தாலும் அது கிடைக்கும் வரை குறைபாடுடைய 13 ஆவது சட்ட திருத்தத்தை ஒரு தொடக்கப் புள்ளியாக வைத்துக் கொள்வதே அரசியல் சாணக்கியமாகும்.

இது தொடர்பாக மனித உரிமை சட்டத்தரணியும் சட்ட பேராசிரியருமான கலாநிதி நிர்மலா சந்திரகாசன் அவர்கள் 13 ஆவது சட்ட திருத்தத்தத்தை ஆதரித்து ஆங்கிலத்தில் **The Island** நாளேட்டில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் கிழே கொடுக்கப்பட்டுள்ளது.

<u>மாகாண சபை முறையை ஆதரிக்கும் சந்திரஹாசன்</u>

மாகாண சபைகள், *Miguel de Cervantes* என்ற இசுப்பானிய எழுத்தாளர் எழுதிய ஒரு நாவலில் வரும் **Don Quixote** பாத்திரம்



காற்றாலைகளை இராட்சதகர்கள் எனக் கற்பனை செய்துகொண்டு அவற்றோடு மோதுவதைப் போல மாகாண சபைகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் சில விமர்சனங்களுக்கு இந்தக் கட்டுரையில் பதிலளிக்க விரும்புகிறேன். ஆனால் நான் அவ்வாறு செய்வதற்கு முன்னர், அதற்கான கள நிலவரங்கள் அநுகூலமானதும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் (மகிந்த இராசபக்ச) அறிவித்துள்ளார் என்பதைக் கவனத்தில் கொள்கின்றேன். பிரதமர் ஒரு அனுபவமிக்க மற்றும் முழுமையான அரசியல்வாதியாக நாட்டின் அரசியல் சூழலை அறிந்து அதற்கேற்ப செயல்படுவார் என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

மாகாண சபைகள் இந்திய அரசால் இலங்கை அரசின் மீது திணிக்கப்பட்டது என்பது அடிக்கடி சொல்லப்படும் விமர்சனங்களில் ஒன்றாகும். நாட்டின் தமிழ்க் குடிமக்களுக்கு எதிரான யூலை 1983 படுகொலை (கலவரம்) மற்றும் இலங்கையில் உள்நாட்டு அமைதியின்மை வெடித்ததைத் தொடர்ந்து, நிகழ்வுகளின் வரிசையை மறுபரிசீலனை செய்ய, அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஒரு தூதரை அனுப்பினார். இது நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான வழிகளைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட இராசதந்திர முயற்சியாகும்.

தமிழ்க் கட்சிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் பாத்திரத்தை இந்தியா வகித்தது. இடம் பெறும் தமிழ்த் தீவிரவாதிகளின் கிளர்ச்சிக்கும் மற்றும் இனச் சிக்கலுக்கும் ஒரு தீர்வைக் காண இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் பேச்சுவார்த்தை தொடங்கியது. அரசியலமைப்பு முன்மொழிவுகள் மூலம் அவற்றைத் தீர்க்கலாம் எனக் கருதப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக இலங்கையில் அமைதி மற்றும் இயல்பு நிலையை நிலைநாட்டுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதாவது. 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை, மற்றும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் நவம்பர் 1987 இன் மாகாண சபைகள் சட்டம் எண்: 42. என இந்த இரண்டு சட்டங்களின் அடிப்படையில், மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. மாகாண சபைகளின் எதிர்ப்பாளர்கள் இது உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நிறுவனமல்ல, வெளிநாட்டு சக்தியால் திணிக்கப்பட்ட ஒன்று என்று வாதிடுகின்றனர்.

இது தொடர்பாக, பேராசிரியர் காமினி கீரவெல்ல அவர்கள் 16 செப்தெம்பர் 2020 இன் **Island** செய்தித்தாளில் **"**13 ஆவது திருத்தத்தின் வம்சாவளி மற்றும் 13 ஆவது திருத்தத்தின் ஆதியாகமம்**"** என்ற தலைப்பில் எழுதிய அதிக தகவல் மற்றும் நன்கு ஆய்வு செய்யப்பட்ட கட்டுரையை வாசகர்களுக்கு பரிந்துரைக்கிறேன். 1931 ஆம் ஆண்டு டொனமோர் ஆணைக்குழுவின் பரிந்துரைகள், 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கையின் பிராந்திய சபைகள் மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்ட ஆனால் வரவிருக்கும் அதிகாரப் பகிர்வு முன்மொழிவுகள் - 1974 இல் காங்கேசன்துறை. அதிகாரப்பகிர்வு மற்றும் மாகாணசபை விவகாரம் இந்த நாட்டில் நீண்டகாலமாக அரசியல் சாணக்கியமாக இருந்து வந்துள்ளது என்பதும் அது வெளிநாட்டுத் திணிப்பு அல்ல, உள்நாட்டு விவகாரம் என்பதை எண்பிக்கிறது.

உண்மையில், 13வது திருத்தம் யூலை - ஒகஸ்ட், 1966 காலப்பகுதியில் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசுக்கும் திரு அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையிலான விரிவான விவாதங்களில் ஓய்வுபெற்ற தேர்தல் ஆணையாளர் பீலிக்ஸ் டயஸ் அபேசிங்க செயலாளராக இருந்தார். ஒரு ஆண்டு கழித்து இந்திய - இலங்கை ஒப்பந்தம் யூலை 1987 இல் கையெழுத்தானது. 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் சட்டம் நொவெம்பர் 1987 இல் நிறைவேற்றப்பட்டது. 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கான காரணம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தம் ஆகும் எனக் கூறலாம். 13 ஏ அதிகாரப் பகிர்வை வழங்கியது.

பேச்சுவார்த்தையில், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக இடம்பெற்றவர்கள் தந்திரசாலியும் புத்திசாலியுமான திரு ஜெயவர்த்தனவுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அவர், அவர்களை இலகுவாக உச்சிப்போட்டார். அதன்பிறகுதான் ஜெயவர்த்தனா அவர்களால் தயாரிக்கப்பட்ட மசோதாக்கள் தங்கள் எதிர்பார்ப்புகளுக்குக் குறைவாக இருப்பதை உணர்ந்த கொண்டனர். இதன் காரணமாக நடந்து முடிந்த முறைமையோடு தங்களைத் தூர விலக்கிக் கொண்டனர்.

திரு அமிர்தலிங்கம் 1987 ஒக்டோபரில் திரு இராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில், இரண்டு சட்டமூலங்கள் மீதான தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார். மாகாண சபைகள் தொடர்பான அத்தியாயம் மாகாணங்களுக்கு நம்பகமான சுயாட்சியை வழங்கும் என்ற நம்பிக்கைக்கு மாறாக, தற்போதைய சட்டமூலங்கள் காணப்படுகின்றன. மாகாணத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பொறுத்த மட்டில் கூட நாடாளுமன்றமும் மத்திய அமைச்சரவையும் அவற்றின் அதிகாரத்தை தொடர்ந்து வைத்துக் கொண்டுள்ளன.

எனது பார்வையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பல அதிகாரங்களை மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மறுக்கிறது. மாகாண சபைகள் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வதன் மூலம் இவற்றைச் சரிசெய்யப்படலாம். இது பற்றி பின்னர் கூறுவேன்.

மாகாண சபைகள் மற்றும் அதிகாரப்பகிர்வு முன்மொழிவுகள் நாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் வடக்கு - கிழக்கை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், தற்போது நடைபெற்றுவரும் ஆயுத மோதலைத் தீர்க்கும் நோக்கத்தில் இருந்த போதிலும்,



ஜெயவர்த்தன அரசாங்கம் நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் மாகாண சபை முறையை விரிவுபடுத்தியது.

எனவே தற்போதைய மாகாண சபை முறையானது எந்தவொரு குறிப்பிட்ட பிராந்திய அல்லது இன அளவுகோல்களின் அடிப்படையிலும் இல்லாமல் நாட்டின் அனைத்து மக்களையும் நோக்கியதாக உள்ளது. யாழ்ப்பாணத்திலோ அல்லது மாத்தறையிலோ அவர்களின் சொந்த பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு அதிகாரம் அளிக்க முயல்கிறது. கொழும்பில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளால் மட்டுமன்றி உள்ளூர் மக்களுக்கும் சமூகங்களுக்கும் நெருக்கமாக மாகாணங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்க இந்த அமைப்பு அனுமதிக்கிறது.

பின்னோக்கிப் பார்க்கையில், இது ஒரு நல்ல நடவடிக்கையாகும், ஏனெனில் இது முழுத் தீவுகான அமைப்பாகும். எனவே, இந்தியாவின் தலையீடு நாட்டிற்கும் அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் ஒன்றைக் கொண்டு வந்தது என்று நாம் கூறலாம். இருப்பினும், வெளிநாட்டு தலையீடு எப்போதும் நல்ல பலனைத் தராது

இந்த நிகழ்வில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால், நீங்கள் உங்கள் வீட்டை ஒழுங்காக வைத்திருக்காதபோது, கருத்து வேறுபாடு மற்றும் வெறுப்பு ஏற்படும் போது, அண்டை வீட்டாரும், அருகில் இல்லாத அண்டை வீட்டாரும் நிச்சயமாக உங்கள் விவகாரங்களில் தலையிட விரும்புவார்கள். பொதுவாக அது அவர்களின் சொந்த நலனுக்காகவே இருக்கும்.

ஒரு சிலரின் விருப்பப்படி, அதாவது தீவிர தேசியவாதிகள் மற்றும் எதேச்சாதிகாரம் சார்ந்தவர்கள் தற்போதுள்ள அரசியல் அமைப்பைச் சீர்குலைத்து சிறுபான்மை சமூகங்களைப் பாதுகாப்பற்ற உணர்வையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்துவது மீண்டும் மூன்றாம் தரப்பினர் தலையிடும் சூழ்நிலைக்கு வழிவகுக்கும்.



சில தரப்பினரால் பரிந்துரைக்கப்படுவதைப் போன்று மாகாண சபைகளை இல்லாதொழித்து அரசியல் கட்டமைப்பைச் சீர்குலைக்காமல், குறிப்பாக மோசமான பொருளாதார நிலைமையின் பின்னணியில் கப்பலை மிதக்க வைப்பதே சிறந்த கொள்கையாகும்.

மற்றொரு விமர்சனம் என்னவென்றால், மாகாணம் என்பது அதிகாரப் பகிர்வின் பொருத்தமான அலகு அல்ல என்பதாகும். இதற்குப் பதிலடியாக 2006 ஆம் ஆண்டு சனாதிபதி மகிந்த இராசபக்சவினால் அரசியலமைப்பு மாற்றங்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் பெரும்பான்மை அறிக்கையை குறிப்பிடுவேன். அந்த அறிக்கையிலிருந்து பின்வருமாறு மேற்கோள் காட்டுகிறேன். *(தொடரும்)*

# நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டால் இந்தியில் பதில் அளிப்பதா? இது நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும்: கி.வீரமணி



நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டால் இந்தியில் பதில் அளிப்பதா? என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டால், மத்திய அமைச்சர்கள் இந்தியில் பதில் அளிப்பது வேற்றுமையில் ஒற்றுமையைக் குலைக்கும் ஒருமைப்பாட்டையும் சிதறடிக்கும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இன்று வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: தமிழகத்தைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், ''அமைச்சர் பதில் அளிப்பது ஆங்கிலத்தில் இருந்தால்தான் தமக்குப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்'' என்று கேட்டபொழுது, மூத்த அமைச்சரான பியூஸ் கோயல், பிடிவாதத்துடன், ''தம்மால் இந்தியில்தான் பதிலளிக்க முடியும்; காதில் மாட்டும் ஹெட்போனில் மொழி பெயர்ப்பு வரும், அதைக் கேட்டுப் புரிந்துகொள்ளட்டும் உறுப்பினர்'' என்று பதில் அளித்துள்ளார். இதில் குறுக்கிட்ட பேரவைத் தலைவர் ஓம் பிர்லா அவர்களும், ''அமைச்சரின் பதிலை, மொழி பெயர்ப்பின்மூலம் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றுதான் கூறியுள்ளார்!

உறுப்பினர் ஆங்கிலத்தில் கேட்பதால், அமைச்சர் அந்த மொழியில் கூறிட என்ன தயக்கம் என்று மேலும், பேரவைத் தலைவரிடம் கேட்டபொழுது, அதற்கும் மேற்கண்ட பதிலையே அவர் கூறியுள்ளார்!இதுபோலவே, சில நாள்களுக்கு முன்பு, விமானங்கள் விமான நிலையங்களை தனியாருக்கு விடுவதுபற்றி திமுக உறுப்பினர் தயாநிதிமாறன், விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராவ் சிந்தியாவிடம் கேட்ட கேள்விக்கு, அவர் இந்தி மொழியில் பதிலளித்துள்ளார்; உறுப்பினர், தான் புரிந்துகொள்ள வசதியாக, ஆங்கிலம் தெரிந்தவரானதால், ஆங்கிலத்தில் பதில் அளிக்கலாமே என்று கூறியபோதும்கூட, தான் இந்தியில்தான் பதில் அளிப்பேன்; இந்தியில் பதிலளித்தால் என்ன தவறு? என்று திருப்பிக் கேட்டு, இந்தி பேசாத மாநில உறுப்பினர்களை வருத்தத்திற்கும், வேதனைக்கும் ஆளாக்கியுள்ளார்!

மக்களவைத் தலைவரின் மொழி வெறி மனப்பான்மை: மக்களவைத் தலைவரிடம் முறையிட்டால், அவரோ உறுப்பினர்களின் உணர்வைப் புரிந்து, அனைவரையும் அரவணைத்துச் செல்லாது அமைச்சர் சொன்னதையே உறுதிப்படுத்திக் கூறியுள்ளார். மொழி உணர்வு என்பது எவராலும் அலட்சியம் செய்யப்படக் கூடாத ஒன்று; மேலும் கேள்வி கேட்டு பதிலைப் பெறுவது தகவல்களுக்காகத்தானே. கேட்டவருக்கு, அவருக்குப் புரியும் மொழியில் ஆங்கிலத்தில் பதிலளித்தால் என்ன குடியா முழுகிவிடும்?வேற்றுமையில் ஒற்றுமை என்பது இதுதானா?: மக்களாட்சி நடைபெறும் இந்திய நாட்டின் பன்மொழி கலாச்சாரம் உள்ள நாட்டில், பல பகுதி உறுப்பினர்களையும் திருப்தி செய்து, வேற்றுமையில் ஒற்றுமை என்பதை நாட்டை ஆளும் கட்சி கடைப்பிடித்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இது நம்முடைய ஆட்சி என்கிற உணர்வை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, மாற்று உணர்வை கசப்பு உணர்வை எதிர்ப்புணர்ச்சியை உருவாக்கிடுவது எவ்வகையில் நியாயம்? இதுபோன்ற வெறுப்பு அரசியல் பாஜகவுக்கு உடன் பிறந்த நோயே!

மொழி உணர்வு மக்களின் ரத்தத்தில் உறைந்த உணர்வு.ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே மொழியில் ஏற்பட்ட பகைமை உணர்வு இன்றுவரை: மிக நீண்ட காலமாக அண்டை நாடுகளாக இருந்தபோதும், ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் மொழிப் பிரச்சினையால் ஏற்பட்டுள்ள உணர்வு அடிப்படைக் கசப்பு இன்னும்கூட அந்த மக்களிடம் பெரிதும் மாறவில்லையே! பாரீசில் இங்கிலாந்தின் மொழியான ஆங்கிலத்தில் வழிகேட்டால், பதிலளிக்கவே மாட்டார்கள்

ஆங்கிலம் தெரிந்தவராக இருந்தாலும்கூட. இதை உணர்ந்துதான், ஜனநாயகத்தில் சிறந்த மலர் என்று போற்றப்படும் சுவிட்சர்லாந்து நான்கு மொழிகளை அங்கீகரித்துள்ளது.சிங்கப்பூர் மலேயாவைப் பாரீர்: அவ்வளவுதூரம் போவானேன்? சிங்கப்பூரில் மலாய் மொழி, சீன மொழி, தமிழ், ஆங்கிலம் என நான்கு மொழி மக்களையும் மகிழ்ச்சியோடு வைக்க, காலை தொலைக்காட்சிப் பெட்டியில் வணக்கம் கூறுவதிலிருந்து வணிகப் பொருள்கள் விலைப் பட்டியலிலும் நான்கு மொழிகளிலும் வில்லை (லேபிள்) ஒட்டப்படுகிறதே. மக்களின் உணர்வுக்கு மதிப்பளிப்பதுதான் உண்மையான மக்கள் ஆட்சி. மக்கள் தந்த அதிகாரத்தை, தங்களது மொழி ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டப் பயன்படுத்தினால், அது நாட்டின் ஒருமைப்பாட்டை சிதைக்கத் தூண்டுமே தவிர, மக்களை ஒன்றுபடுத்தாது; ஒற்றுமையில் வேற்றுமையை உருவாக்கிடவே வித்தூன்றும். அதிகார வெறி மக்களாட்சியின் மாண்புக்கு எதிரானதும்கூட. இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

# இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடா? அல்லது மதரீதியாக பிளவுபட்டதா? உயர் நீதிமன்றம் கேள்வி

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடா அல்லது மதரீதியாக பிளவுபட்டதா என கேள்வி எழுப்பிய சென்னை உயர் நீதிமன்றம், நாட்டில் ஹிஜாப் அணிவதற்காகவும், கோயில்களில் வேட்டி கட்டுவதற்காகவும் போராடுவது அதிர்ச்சி அளிப்பதாக கருத்து தெரிவித்துள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தில், திருச்சி, ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜன் நரசிம்மன் தாக்கல் செய்த பொது நல மனுவில், கடந்த 1947ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு ஆலய பிரவேச சட்டத்தில், இந்துக்கள் அல்லாதோர் கோயில்களுக்குள் நுழைய அனுமதியில்லை எனக் கூறப்பட்டுள்ளது.



கடந்த 1970ம் ஆண்டு இந்துக்கள் அல்லாதோரும் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை உயர் நீதிமன்றம், 1972ல் ரத்து செய்த போதும், பிற மதத்தைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டவர்களும் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர்.எந்த சட்டப்பூர்வமான உரிமையும் இல்லாத நிலையில், இந்துக்கள் அல்லாதோர் கோயில்களுக்குள் நுழைய அனுமதியில்லை என்ற விளம்பர பலகைகளை, கோயிலின் நுழைவு வாயில்களில் வைக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும். மேலும் அந்த விளம்பரப் பலகையில் கோயிலுக்கு வரும் போது இது போன்ற ஆடைகள் அணிந்து வரவேண்டும் என்று விளம்பரப் பலகையில் சுட்டிக்காட்ட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு, பொறுப்பு தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் ரங்கராஜன் நரசிம்மன், கோயில்களுக்கு வருபவர்கள் மரபுப்படி உடை அணிந்து வர வேண்டும்.

தஞ்சை, மதுரை போன்ற கோயில்களில் பிற மதத்தவர்கள் லுங்கி, டவுசர் அணிந்து வருகின்றனர். கோயில்களுக்குள் வெளிநாட்டவர்களை அனுமதிக்க கூடாது என்று வாதிட்டார்.அப்போது நீதிபதிகள், பல கோயில்களில் உரிய நடைமுறைகளும் மரபுகளும் பின்பற்றப்படுவதாக சுட்டிக்காட்டினர். நாட்டில் ஹிஜாப் அணிவதற்காகவும், கோயில்களில் வேட்டி கட்டுவதற்காகவும் போராடுவது அதிர்ச்சி அளிக்கிறது. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடா அல்லது மத ரிதியாக பிளவுபட்டதா என கேள்வி எழுப்பினர்?மேலும், அனைத்து கோயில்களிலும் ஒரே மாதிரியான மரபு பின்பற்றப்படுகிறதா? , ஆகம சாஸ்திரத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது ?, குறிப்பிட்ட உடை தான் அணிய வேண்டும் என மரபு உள்ளதா? எந்த கோயிலில் உள்ளது எனவும் கேள்வி எழுப்பினர்.

அநாகரிகமாக உடை அணிந்து வருவதாக புகார்கள் உள்ளதா? , ஆகம சாஸ்திரத்தில் வேட்டி தான் அணிய வேண்டும் என கூறப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளதா? என நீதிபதிகள் சரமாரியான கேள்விகளை எழுப்பினர்.அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முக சுந்தரம், கோயில்களில் ஆடைக் கட்டுப்பாடு விதித்து உயர் நீதிமன்ற தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை இரு நீதிபதிகள் ரத்து செய்ததாகவும், நீதிமன்றத்தில் தெரிவித்தார்.இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், மதச்சார்பற்ற நாட்டில் இதுபோன்ற பிரச்சினைகளை ஏற்படுத்த கூடாது. மனுதாரரின் கோரிக்கை மத ரீதியாக நாட்டை பிளவுபடுத்துவது போன்றதாக உள்ளதாக கருத்து தெரிவித்த நீதிபதிகள் இந்த வழக்கை ஒரு வார காலத்திற்கு ஒத்திவைத்தனர்.

# ஸ்டாலின் தொடங்கிய அனைத்திந்திய சமூக நீதி கூட்டமைப்பிற்கு மதிமுக ஆதரவு : பிரதிநிதி அறிவிப்பு

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிய அனைத்திந்திய சமூக நீதி கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் கூட்டமைப்பிற்கான கட்சி பிரதிநிதியையும் மதிமுக இன்று அறிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் இட ஒதுக்கீடு உள்ளிட்ட நலன்களைப் பாதுகாத்திட, அனைத்திந்திய சமூக நீதி கூட்டமைப்பு தொடங்கப்படும் என்று தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு. க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்த அமைப்பில் இணைந்திட முன்வருமாறு 37 கட்சிகளின் தலைவர்களுக்கு, கடிதம் வாயிலாக அவர் அழைப்பு விடுத்துள்ளார் .

இந்த வரிசையில் கழகப் பொதுச் செயலாளர் வைகோ அவர்களுக்கு அழைப்பு விடுத்து மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.இதை ஏற்று, அனைத்திந்திய சமூக நீதிக் கூட்டமைப்பின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதியாக, கழகத்தின் தேர்தல் பணிச் செயலாளர் வழக்கறிஞர் ஆவடி அந்தரிதாஸ் செயல்படுவார் என அறிவித்து, முதல்வரின் முயற்சிகளுக்கு வரவேற்பையும், வாழ்த்தையும் தெரிவித்து பொதுச்செயலாளர் அவர்கள் முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஆவடி அந்தரிதாஸ் பற்றிய குறிப்புகள்: வழக்கறிஞர் ஆவடி அந்தரிதாஸ், மதிமுகக தேர்தல் பணிச் செயலாளர், மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி மாநிலத் தலைவர், திருவள்ளூர் மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகளில் இடம் பெற்றுள்ளார். தொலைக்காட்சி விவாதங்களில் கழகத்தின் பிரதிநிதியாக கலந்துகொண்டு சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறார். தொழிற்சங்க தேர்தலில் வெற்றி பெற்று, நிர்வாக பொறுப்பில் பணியாற்றி வருகிறார். 1996, 2001, 2016 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தல்களிலும், 1996, 2011 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆவடி நகர்மன்ற தேர்தல்களிலும் கழகத்தின் சார்பில் போட்டியிட்டார். 15க்கும் மேற்பட்ட பொதுநல சங்கங்களில் சட்ட ஆலோசகராகவும் இவர் பொறுப்பு வகிக்கிறார். இவ்வாறு மதிமுக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

# Targeted financial support programs available now

For eligible Canadians or business owners who continue to struggle due to COVID-19:

- Hardest-Hit Business Recovery Program
- Tourism and Hospitality Recovery Program
- Canada Recovery Hiring Program
- Canada Worker Lockdown Benefit




canada.ca/coronavirus

Government of Canada Gouvernement du Canada

Canada



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# விதியென்று எண்ணி விலகிட முடியா இழப்பு



தோற்றம்:

08 - 11 - 1959

மறைவு:

08 - 01 - 2022

# திருமதி. ஷீலா சுகுமார்

**(தகைமை பெற்ற கணக்காளர்)**

**கனடா வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார் அவர்களின் ஆருயிர்த் துணைவியாரும் சஞ்சய், சோபியா ஆகியோரின் அன்புத் தாயாருமான திருமதி ஷீலா சுகுமார் அவர்களின் 31ம் நாள் நினைவு நாளையொட்டிய அஞ்சலிக் கவிதை**

நால்வர் அடங்கிய நல்லதோர் குடும்பம்
நெடியதோர் தலைவனாய் சுகுமார் பெருமகன்
சாலப் பொருந்திய தலைவியாய் தகைசார் ஷீலா
சீரும் சிறப்புமாய் சிறந்த ஒளிர்ந்தது வாழ்வு
காலப் போக்கில் கற்றுத் தேர்ந்த செல்வனும் செல்வியும்
காவியம் படைத்திட ஆவலாய்க் கால்பதிக்க
காலனின் கணக்கின் நாட்கள் நெருங்கிட கவர்ந்தனன்
கணக்கியல் வித்தகி கனிவின் உறைவிடம் அன்னையவளை

அதிபதி ஆயினும் அமைதியின் இருப்பிடம் ஷீலா
ஆர்ப்பாட்டம் இல்லா திறந்த புத்தகம் ஷீலா
மதி நுட்பம் மிகக் கொண்ட மங்கையர் திலகம் ஷீலா
மற்றவர் விரும்பி மதித்த நல் நண்பியாம் ஷீலா
நிதியியல் துறையில் நிரம்பிய அறிவாம் ஷீலா
நிர்மலன் அடியை நிதமும் தொழுதவர் ஷீலா
விதியென்று எண்ணி விலகிட முடியா இழப்பு
விடை கொடுத்தோம் அன்று விழி நிரம்பிய தவிப்பு

குங்குமம் உதித்த நெற்றியும் குழந்தை மனமும்
குடும்பத்தின் விளக்குமாய் திகழ்ந்தவர் அணைந்தார்
பொங்கிய செல்வமும் போற்றுதல் பலவும் பெருமையும்
பெற்று மகிழ்ந்தவர் உடலில் கரும் புள்ளியாய்
தங்கிய தாக்கம் தந்திட்ட வேதனை தாங்கி
தாய்மையயின் உணர்விற்கும் தாரத்தின் உயர்விற்கும்
பங்கம் வராமல் பக்குவம் காத்திட்ட பத்தினியின்
பிரிவதை ஏற்று அவரைப் போற்றியே துதிப்போம்



அன்பர் கணேசன் சுகுமார் அவர்களின் நண்பர்கள்

# முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர். உயர்திரு இராசையா சுப்பிரமணியம்



**யாழ்/வேலணை சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வாழ்ந்து வந்து அமரத்துவமடைந்திட்ட அமரர் உயர்திரு இராசையா சுப்பிரமணியம் அவர்களின் முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்.**

*எங்கள் வாழ்வில் நாமுயர வழிகாட்டிய அப்பா*
*ஏணியென நின்றெமை உயரவைத்த அப்பா*
*செம்மையுறும் வாழ்வினிலே நாமுயர கண்டே*
*செய்பணிகள் யாவையும் சிறப்புடனே செய்தீர்*
*எப்போதும் எம்வாழ்க்கை வளம் காண வேண்டி*
*எழிலான அறிவுரைகள் பற்பலவும் கூறி*
*செம்மையுற வாழ வைத்த தந்தை எம் தெய்வமன்றோ*
*மாதம் ஒன்று ஓடி மறைந்தும் மறப்போமா எம் தந்தையை*

### நன்றி மறப்பது நன்றன்று

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசி எங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்து மறைந்துவிட்ட எங்கள் பாசத்திற்குரிய தந்தை உயர்திரு. இராசையா சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு எங்கள் இல்லத்திற்கு வருகைதந்தும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் மலர்மாலை மலர்வளையங்கள் வைத்தும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டும் அஞ்சலி செலுத்தியோருக்கும், கனடா மற்றும் உலகின் பலபாகங்களில் இருந்தும் தொலைபேசி தொலை அஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு துயரத்தை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், தேவார திருமுறைபாடல்களை ஓதியும் இரங்கலுரை நிகழ்த்தியவர்கள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளை சிறப்புற நடாத்திய அந்தண பெருமக்கள் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்துகொண்டவர்களுக்கும், நினைவு மலரினை அச்சமைப்பு செய்த ஜே ஜே அச்சகத்தினருக்கும் மற்றும் பலவழிகளிலும் உடன் இருந்து உதவிகள் ஒத்தாசை புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக இதயம் நிறைந்த நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்!

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 10-06-1931 | 12-01-2022 |

## 30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

### ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.



பனங்கருப்பட்டி



தேன் நெல்லி

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# கடந்தவையும் கடப்பவையும் (22)

- உமா மோகன் -

முன்னரும் பலமுறை வந்திருந்து போனதுண்டு - ஆனால்
இம்முறை அதிகநாள் நிற்பதற்கு வாய்ப்பில்லை

தந்தை செல்வா கட்டடத்தை புனரமைக்க - எம்
தந்தை அவர் பொறுப்பெடுத்த காரணத்தால் - இனி

வலிகாமம் வடக்கு நோக்கி புறப்பாடு - அதுவரை
பெரியளவில் பழக்கப்படா இடங்கள் அவை - ஆனாலும்

தெரிந்தவள் தான் தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் - இவ்விடத்தைப்
பிரிந்துபோக நினைக்கும் போது இனம்புரியா

பெரும் கலக்கத்தோடு கவலையும் தான்
தெரிந்தவரைப் பிரிவதென்றால் யாருக்கும் இயல்பு தானே

புன்கணீர் பூசல் தர முன் அறியா
அக் கண்ணீரின் காரணமும் தான் அறிந்து

வேறு வழியின்றி போவதற்கு உடன்பட்டு
ஏறுகின்றோம் வாகனத்தில் மெதுவாக

அங்கிருந்து வடக்குநோக்கி இணுவிலுக்கு ஊடாக
காங்கேசன்துறைப் பாதை வழிப் பயணமது,

அமைதிக்காய் வந்தவர்கள் ஆங்காங்கே நின்றபோதும் - போகும்
பாதை கொண்ட ஊர்களின் பெருமைகளைச்

சொல்லாமற் போகலாமோ?

வரலாற்றுப் பெருமையுள்ள ஊர்கள் அவை - நல்ல
பெயருக்குரிய மக்களும் தான் வாழ்ந்துள்ளார்கள் - இங்கு

'சிறைநீக்கிய பதிகத்தைப் பாடியவர் - அவர்
இறை பற்றினையும் ஒருதரம் பார்த்திடுவோம்

ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்தவராம் - இணுவிலூர்
சின்னத்தம்பிப் புலவர் இவர் - நல்லூர்

வில்லவராஜனின் மகன் அல்லர் - தமிழில்
வல்லவர்கள் இருவருக்கும் ஒரே பெயர்தான்

இணுவிலில் பிறந்தவரோ, ஒல்லாந்தர் காலத்து
அரசிலே தோம்பெழுதும் வேலையில் இருந்தபோது

வீம்புக்கு யாரோ புகார் கொடுக்க
அப்பாவியாகச் சிறைப்பட்ட அவரும்

முறையிட்டாராம் சிவகாமி அம்மனிடம் - பாடினாராம்
சிறையில் இருந்தே பதிகம் ஒன்று

ஆடிப்போனாராம் சிறை அதிகாரி- அங்கு
ஓடிப்போனாராம் சிறைக்கதவு திறந்திடவே - பின்

சிறைப்பட்டானாம் வீண்புகார் கொடுத்தவனும், இறைப்பற்றுள்ள இணுவிலூர்ப்
புலரிவர்

பஞ்சவன்னத்தூது, சிவகாமி அம்மை பிள்ளைத்தமிழ் - என்னும்
சிற்றிலக்கியங்களோடு இளந்தாரி புராணம் - மற்றும்

நொண்டி நாடகம், வேலன் நாடகம் என்பவற்றை
அன்று அவர் பாடினார் என்பதையும் பெருமையுடன் கூறி

அவர் பிறந்த ஊரான இணுவிலையும் பெருமையோடு பார்த்தவாறு அடுத்த
ஊருக்குள்...

(தொடரும்)


TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


# தமிழக மீனவர்களுக்கும், ஈழ மீனவர்களுக்குமிடையே பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும்!




**தமிழக மீனவர்களுக்கும், ஈழ மீனவர்களுக்குமிடையே பகைமையை உருவாக்கி, சொந்த இரத்தங்களுக்குள்ளே யுத்தத்தை நிகழ்த்தத் துடிக்கும் சிங்கள இனவாத அரசின் பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும்!**
**- சீமான் வலியுறுத்தல் | நாம் தமிழர் கட்சி**

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழகத்து மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர்களுக்குமிடையே பகைமையை ஏற்படுத்தி, ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளான தமிழ்த்தேசிய இன மக்களைத் தங்களுக்குள்ளேயே மோதிச்சண்டையிட வழிவகை செய்திடும் சிங்கள இனவாத அரசின் கொடுங்கோல் செயல்பாடுகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன. ஈழப்பெருநிலத்தில் இரண்டு இலட்சம் தமிழர்களைக் கொன்றொழித்து, ஒரு பாரிய இனப்படுகொலையை நிகழ்த்தி, 800க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை நடுக்கடலிலே படுகொலை செய்தும் இன்னும் வன்மம் தீராது தமிழர்களுக்குள்ளேயே பகைமூட்டும் சிங்கள இனவாத ஆட்சியாளர்களின் போக்குகள் கடும் கண்டனத்திற்குரியது.

யாழ்ப்பாணம் மாவட்டம், சுப்பர்மடம் கடற்பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவத்தம்பிகள் தணிகைமாறன், பிரேம்குமார் ஆகியோர் படகு கவிழ்ந்து உயிரிழந்த செய்தியறிந்து பெரும் வேதனையடைந்தேன். தம்பிகளை இழந்து வாடும் அவர்தம் பெற்றோர்களுக்கும், உறவுகளுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து துயரத்தில் பங்கெடுக்கிறேன். தம்பிகளின் இழப்பு எதன்பொருட்டும் ஈடுசெய்யவியலாதது. அம்மரணம் ஏற்படுத்தும் வலியென்பது சொற்களால் விவரிக்க முடியாதது. அதேசமயம், அது விபத்துதானே ஒழிய, திட்டமிடப்பட்டத் தாக்குதல் அல்ல் தமிழக மீனவர்கள் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்துச்சொந்தங்களை ஒருநாளும் பகையாளியாகக் கருதவோ, தாக்குதல் தொடுத்திடவோ மாட்டார்கள் என அறுதியிட்டுக் கூறுகிறேன். அது எதிர்பாராத விதமாக நடந்த ஒரு கோர விபத்து ஏற்கவே முடியாத ஒரு துயரச்சம்பவம். அத்துயரை நானும் பகிர்ந்துகொள்கிறேன் வலியை முழுமையாக உணர்ந்துகொள்கிறேன்.

அதேநேரத்தில், இம்மரணத்தைத் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தி, ஈழத்து மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்குமிடையே சண்டை மூட்டிவிட்டு, வேடிக்கைப் பார்க்கும் சிங்கள அதிகார வர்க்கத்தின் செயல்களுக்குப் பலியாகாது விழிப்போடும், தெளிவோடும் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்து மீனவர்கள்தான் ஈழ மீனவர்களைத் தாக்கிக் கொன்றுவிட்டார்கள் என அந்நிலத்தில் பரப்புரைசெய்வதும், தமிழகத்து மீனவர்களது படகுகளை ஈழத்து மீனவர்களுக்கு ஏலத்தில் விற்று, காழ்ப்புணர்வை தமிழக மீனவர்களிடம் உருவாக்க முயல்வதுமான போக்குகள் சொந்த இரத்தங்களுக்குள்ளே யுத்தத்தை நிகழ்த்த துடிக்கும் பெரும் மோசடித்தனமாகும்.

சிங்கள இனவாத அரசால் இனப்பேரழிவை தமிழர் தாயகம் எதிர்கொண்டபோது, தமிழகத்திலிருந்த 18க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உறவுகளைக் காக்க தங்கள் உயிர்களை இரையாக்கினார்கள் அவர்கள் தங்கள் உள்ளத்திலே கொதித்த நெருப்பை உடலிலே கொட்டி தீக்குளித்து, போராட்ட நெருப்பைப் பற்ற வைத்தார்கள். ஈழத்தாயகம் எப்போதெல்லாம் தாக்குதலுக்கு உள்ளாகிறதோ அப்போதெல்லாம் தமிழகம் கொதித்தெழுந்து தங்கள் உறவுகளைக் காக்க உணர்வோடு வீதிக்கு வந்திருக்கிறது. ஆகவே, தமிழகத்துக்கும், ஈழத்துக்குமான தொப்புள்கொடி உறவை, வரலாற்று வழித்தொடர்பை எவராலும் மறுக்க முடியாது. ஏற்கனவே, தமிழ்த்தேசிய இன மக்களை சாதியும், மதமும் பிளந்து, பிரித்து ஓர்மையைத் தடுத்துக் கெடுக்கும் நிலையில் அரங்கேற்றப்படும் சதிச்செயல்களையும், தமிழகத்து தமிழர்களுக்கும், ஈழத்து தமிழர்களுக்குமான இரத்த உறவை முற்றாக அறுக்கத்துடிக்கும் பெருஞ்சூழ்ச்சிகளையும் புரிந்து கொள்ள வேண்டியது பெருங்கடமையும், பேரவசியமாகிறது. அந்நிலத்தில் தமிழ் மீனவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் சிங்களர்களில் எவரும் மீனவர்கள் இல்லை என்பது போலவும், சிங்கள மீனவர்களது வளங்களை தமிழக மீனவர்கள் சுரண்டுகிறார்கள் என்பது போலவும், தமிழகத்து மீனவர்கள் சிங்கள மீனவர்களைத் தாக்குகிறார்கள் என்பது போலவும் கருத்துருவாக்கம் செய்து, இரு நிலத்து மீனவர்களையும் பகையாளிகளாக மாற்ற முனைவது கொடும் வன்மத்தின் உச்சமாகும்.

ஆகவே, தமிழகத்து மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர்களுக்குமிடையே பிளவையும், பகையையும் உருவாக்கத் துடிக்கும் இனவெறி சிங்கள ஆட்சியாளர்களின் தமிழர் விரோதச்செயல்பாடுகளுக்கு இரையாகாது அவர்களது உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு, தமிழர் ஓர்மையையும், இணக்கப்பாட்டையும் கடைபிடிக்க வேண்டுமென இரு நிலத்தில் வாழும் தமிழர்களையும் உள்ளன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மலச்சிக்கல்
# JOGO டிஜிட்டல் தெரபியுஸீட்டிக்ஸ் சிகிச்சை
# (EMG Biofeedback treatment)

## (மருந்து மாத்திரைகளோ, சத்திர சிகிச்சைகளோ இன்றி உடலுக்கு ஊறு விளைவிக்காத சிகிச்சை முறை)

மருத்துவ வரையறையின் படி ஒரு நபருக்கு வாரத்திற்கு 3 தடவைகளுக்கு குறைவாக மலம் வெளியேறுவது மலச்சிக்கல் எனப்படுகின்றது. இன்று பலரும் வைத்தியரிடம் செல்லக் கூச்சப்பட்டோ அல்லது சாதாரணமானது தானே என அலட்சியமாக இருக்கும் நோய்களில் மலச்சிக்கலும் ஒன்று. காரணம் எதுவாக இருப்பினும் நாட்பட்ட மலச்சிக்கல் பல பின்விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே இதற்கு சிகிச்சைப் பெறுவது மிகவும் அவசியம்.

இப்பதிவில் மலச்சிக்கலுக்கான காரணங்கள், அறிகுறிகள், மாத்திரை அல்லது இதற்கென பரிந்துரைக்கப்படும் உணவு பொருட்கள் ஏதும் உட்கொள்ளாமல் தசைகளுக்கு உடற்பயிற்சி அளிப்பதன் மூலம் இதற்கு எவ்வாறு நிவாரணம் பெற-லாம் என்பதைப் பற்றி பார்க்கலாம்.

**மலச்சிக்கல் எற்படுவதற்கான காரணங்கள்:**

மலத்தில் வெளியேற்றப்பட வேண்டிய தண்ணீரையும் சேர்த்து சில நேரங்களில் பெருங்குடல் உறிஞ்சிக் கொள்வதால், மலம் இறுகி மலச்சிக்கலை உருவாக்கும். இச்செயல்முறை பின்வரும் காரணிகளால் இடம்பெறலாம்.

- தவறான அல்லது மாறும் உணவுப் பழக்கம்.
- துரித, பதனிடப்பட்ட உணவுகளை அதிகம் உட்கொள்ளுதல்.
- நார்ச்சத்துள்ள உணவுகளை தவிர்த்தல் அல்லது குறைவாக எடுத்தல்.
- கீரைவகைகள், காய்கறி போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளாமை.
- குறைந்தளவு நீர் அருந்துதல்.
- மலம் கழிக்கும் உணர்வு வரும் போது அதனை தவிர்த்தல்.
- உடற்பயிற்சிகளை கைவிடுதல் அல்லது குறைத்தல்.
- இளம் யுவதிகளின் பெருங்குடல் சுவரில் ஏற்படும் தளர்ச்சி.
- மசக்கை நேரங்களில் தண்ணீர் குடிக்கும் அளவு வழமையை விட குறைதல்.
- அடிக்கடி பேதி மாத்திரைகளை எடுத்துக் கொள்ளல்.
- பிற நோய்களுக்கு எடுத்துக் கொள்ளும் மாத்திரைகளும் மலச்சிக்கலை ஏற்படுத்தலாம்.
- காய்ச்சல் மற்றும் வாந்தியினால் உடலின் நீரினளவு குறைவது.
- வெயிலில் அதிகம் அலைந்து வேலை பார்க்கும் போது உடலின் நீரினளவு குறைதல்.

**மலச்சிக்கலின் அறிகுறிகள்:**

மலச்சிக்கலினால் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் பின்வரும் அறிகுறிகள் தென்படும்.

- மலம் கழிக்கையில் ஆசனவாயிலில் வலியை உணர்தல்.
- மலம் வெளியேறுவதில் சிக்கல் ஏற்பட்டு வயிற்று வலி வருதல்.
- மலத்துடன் சேர்த்து இரத்தம், சீள் போன்றன வெளிப்படல்.
- 3 வாரங்களுக்கு மேல் மலச்சிக்கல் பிரச்சினை தொடர்தல்.
- காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்படுதல்.
- குமட்டுதல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு.
- வயிற்று உப்புசம் காணப்படல்.
- பசியின்மை.
- சுவாசிக்கையில் துர்வாடை வீசுதல்.

முலநோய், ஆசனவாய் வெடிப்பு, குடல் அடைப்பு, பெருங்குடல் புற்றுநோய் போன்ற பல நோய்களுக்கான அறிகுறியாகவும் மலச்சிக்கல் உருவா-கும் என்பதால், வைத்திய ஆலோசயைப் பெற அறிவுறுத்துகிறோம்.

**இதற்கான சிகிச்சை முறைகள்:**

மலச்சிக்களுக்காக சிகிச்சைகள் மருந்து, மாத்திரைகள் மூலமும் சரி செய்யப்படுகிறது. என்றாலும் காலப்போக்கில் இவை வேறு பல பக்க விளைவுகளை ஏற்படுத்தி விடும். மலச்சிக்கல் மருந்து மாத்திரை மூலமும் சரிசெய்யப்படுகிறது. இருப்பினும் இவை பல்வேறு பக்கவிளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடிய சாத்தியக்கூறுகளுமுண்டு. ஆனால் துழுபுழு டிஜிட்டல் தெரபியூட்டிக்ஸ் (DTx) வாயிலாக சத்திர சிகிச்சையோ அல்லது மாத்திரைகலோ இன்றி Pelvic Floor Muscle Training (PFMT) மூலம் மலச்சிக்கலுக்கு சிறப்பான சிகிச்சை வழங்க முடியும். இது விரைவானது! இலகுவானது! மற்றும் பரிந்துரைக்கப்பட்டது.

JOGO சிகிச்சையானது EMG Biofeedback இன் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட அறிவியலைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இது FDA அங்கீகாரம் பெற்ற சிகிச்சை முறையாகும். ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆய்வுகளில் EMG Biofeedback தசை பயிற்சியானது மலச்சிக்கலுக்கு பயனுள்ளதாக இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த சிகிச்சை முறையானது நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சையைத் தவிர்க்க உதவுகிறது. JOGO EMG Biofeedback மூலம் டெலிமெ-டிசின் வாயிலாக pelvic floor நிபுணர்களால் மலச்சிக்கலுக்கான சிகிச்சைகளை எங்கள் JOGO Health டிஜிட்டல் கிளினிக் வழங்குகிறது.

பக்க விளைவுகளற்ற சரியான தீர்வு JOGO சிகிச்சை - உங்கள் JOGO Health இடமிருந்து. ஆலோசனைகளுக்கு அழையுங்கள் *(416) 723-2000.*

அல்லது JOGO Health, Majestic City Plaza, Unit A9, North West Plaza of Markham Road and McNicoll Avenue intersection in Scarborough. 2900 Markham Rd, Scarborough, Ontario, M1X 1E6 Canada எனும் எமது முகவரிக்கு வருகை தாருங்கள்!

மேலதிக விபரங்களுக்கு www.jogohealth.com எனும் எமது வலைத்தளத்தை பார்வையிடுங்கள். torontoclinic@jogohealth.com

JOGO Health உங்கள் ஆரோக்கியத்தின் நண்பன்!


MAKING MUSCLE AND BRAIN WORK TOGETHER

JOGO



**JOGO சிகிச்சை மூலம் தீர்வு பெறக்கூடிய நோய்கள்:**

- Parkinson's Tremors (பார்கின்சன்ஸ் நோயினால் ஏற்படும் நடுக்குவாதம்)
- Stress Urinary Incontinence (சிறுநீர் கசிவு)
- Voiding Dysfunction (சிறுநீர் கழிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள்)
- Mixed Incontinence (சிறுநீர் கசிவு மற்றும் அடக்கமுடியாமை)
- Pelvic Organ Prolapse (கர்ப்பப்பை இறக்கம்)
- Post Prostatectomy Incontinence (புரோஸ்டேட் சுரப்பி அகற்றப்பட்ட பின்பான சிறுநீர் கசிவு)
- Functional Constipation (மலச்சிக்கல்)
- Chronic Lower Back Pain (நாள்பட்ட முதுகு வலி)
- Defecation Dyssynergia (மலம்கழித்தலின் போது தசைகளின் செயற்பாட்டில் ஏற்படும் பின்னடைவு)
- Chronic Pelvic Pain (இடுப்பு மற்றும் மடி சார்ந்த பகுதிகளில் ஏற்படும் நாள்பட்ட வலி)
- Chronic Constipation (நாள்பட்ட மலச்சிக்கல்)
- Stroke (பக்கவாதம்)
- Spastic Hemiplegia (வலிப்பு)
- Focal Dystonia (தசைநார் கோளாறுகள்)
- Foot Drop (பாதத்தொய்வு)
- Facial Palsy (முகவாதம்)
- Gullian Barre Syndrome (நரம்புகளையும், நோயெதிர்ப்பு சக்தியையும் தாக்கும் நோய்)
- Cerebral Palsy (மூளை வாதம்)
- Chronic Pain (நாள்பட்ட வலி)
- Erectile Dysfunction – (விறைப்புத்தன்மை குறைபாடு)

Phone: +1 (416) 723-2000
Toll Free : +1 (877) 569-8282
Fax: +1 (647) 946-6480
Web: www.jogohealth.com
Email: torontoclinic@jogohealth.com

2900 Markham Rd,
Majestic City Mall, Unit A9,
Scarborough,
Ontario, M1X 1E6
Canada


# கனடா உள்பட 82 நாட்டிலிருந்து இந்தியா வரும் பயணிகளுக்கு பதிய கட்டுப்பாடுகளை இந்தியா அறிவித்துள்ளது



நாட்டில் கோவிட்-19 நிலை-மை தணிந்து வருவதால், சில தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் இருந்து சில சர்வதேச பயணிகள் முழு தடுப்பூசி சான்றிதழை பதிவேற்ற அனுமதிக்கும் வகையில், சர்வதேச பயணிகளுக்கான அதன் ஆலோசனையை மையம் திருத்தியுள்ளது. இந்த நாடுகளில் இருந்து வரும் பயணிகள் எதிர்மறையான கோவிட்-19 RT-PCR அறிக்கையைப் பதிவேற்றலாம், பயணத்திற்கு 72 மணி நேரத்திற்குள் சோதனை நடத்தப்படும் அல்லது அவர்கள் தடுப்பூசி சான்றிதழை பதிவேற்றலாம். சர்வதேச பயண வழிகாட்டுதல்களின் சமீபத்திய திருத்தத்தில், சர்வதேச பயணத்தை இயல்பாக்குவதற்கான முக்கிய படியாக, ஆபத்தில் உள்ள நாடுகளின் பட்டியலையும் நீக்கியுள்ளது.

இந்த அம்சம் அனுமதிக்கப்பட்ட நாடுகளின் முழு பட்டியல் இங்கே: 1 அல்பேனியா, 2 அன்டோரா, 3 அங்கோலா, 4 ஆன்டிகுவா & பார்புடா, 5 ஆஸ்திரேலியா, 6 ஆஸ்திரியா, 7 அஜர்பைஜான், 8 பங்களாதேஷ், 9 பஹ்ரைன், 10 பெலாரஸ், 11 போட்ஸ்வானா, 12 பல்கேரியா, 13 கனடா, 14 கம்போடியா, 15 சிலி, 16 கொலம்பியா, 17 டொமினிகா காமன்வெல்த், 18 கோஸ்டா ரிகா, 19 குரோஷியா, 20 கியூபா, 21 சைப்ரஸ், 22 டென்மார்க், 23 எஸ்டோனியா, 24 பின்லாந்து, 25 ஜார்ஜியா, 26 கிரெனடா, 27 குவாத்தமாலா, 28 கயானா, 29 ஹாங்காங், 30 ஹங்கேரி, 31 ஐஸ்லாந்து, 32 ஈரான், 33 அயர்லாந்து, 34 இஸ்ரேல், 35 கஜகஸ்தான், 36 கிர்கிஸ்தான், 37 லாட்வியா, 38 லெபனான், 39 லிச்சென்ஸ்டீன், 40 மலேசியா, 41 மாலத்தீவுகள், 42 மாலி, 43 மொரிஷியஸ்,44 மெக்சிகோ, 45 மால்டோவா, 46 மங்கோலியா, 47 மியான்மர், 48 நமீபியா, 49 நேபாளம், 50 நியூசிலாந்து, 51 நெதர்லாந்து, 52 நிகரகுவா, 53 வடக்கு மாசிடோனியா, 54 ஓமன், 55 பராகுவே, 56 பனாமா, 57 போர்ச்சுகல், 58 பிலிப்பைன்ஸ், 59 கத்தார், 60 ருமேனியா, 61 செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ், 62 சான் மரினோ, 63 சவுதி அரேபியா, 64 செர்பியா, 65 சியரா லியோன், 66 சிங்கப்பூர், 67 ஸ்லோவாக் குடியரசு, 68 ஸ்லோவேனியா, 69 ஸ்பெயின், 70 இலங்கை, 71 பாலஸ்தீன நாடு, 72 ஸ்வீடன், 73 சுவிட்சர்லாந்து, 74 தாய்லாந்து, 75 ஐக்கிய இராச்சியம், 76 டிரினிடாட் & டொபாகோ, 77 துருக்கி, 78 உக்ரைன், 79 ஐக்கிய அமெரிக்கா, 80 வெனிசுலா, 81 வியட்நாம், 82 ஜிம்பாப்வே

## சிந்தனைக் களம்
### (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

(**Zoom ID:** 867 1081 8177 **Passcode:** 798099)

12 பெப்ரவரி 2022 (சனிக்கிழமை) 8:00pm-11:00pm (கனடா-றொறன்ரோ)

(இலங்கை, இந்தியா - 13 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கழமை 6:30am-9:30am)
(சிட்னி - 13 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை 12:00-3:00pm)

**உரைத்தொடர் - 14**

உரைப் பொருள்
***பண்ணிசை மரபில்***
***பஞ்சபுராணம் பாடும் நெறிமுறைகள்***

உரையாளர்கள் (றொறன்ரோ மாணவர்கள்)

***நிராகுலன் புவனேந்தரா*** ***வித்யா விஜயகுமார்*** ***அனுஜா இந்திரகுமார்***







# உருகுதே காதல் நெஞ்சம்..!

- குரு அரவிந்தன்

**தோளும் அழியும் நாளும் சென்றென,**
**நீள் இடை அத்தம் நோக்கி வாள் அற்றுக்**
**கண்ணும் காட்சி தௌவின, என் நீத்து**
**அறிவும் மயங்கி பிறிது ஆகின்றே,**
**நோயும் பெருகும் மாலையும் வந்தன்று,**
**யாங்கு ஆகுவென் கொல் யானே? ஈங்கோ**
**சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்**
**பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்**
**மறக்குவேன் கொல் என் காதலன் எனவே.**
**- அம்மூவனார்**

"ஏன்டி என்னை இப்படிப் பார்க்கிறாய்?" என்றாள் சுமதி. "இப்படி இளைச்சுப் போயிட்டியே, இந்த வெள்ளைநிற சுடிதாரில ஏஞ்சல் மாதிரியே இருக்கிறாய்..! ஜிம்முக்குப் போறியா..? நானும்தான் மாதக்கணக்காய் முயற்சி பண்ணுறேன், முடியல்லையே" என்றாள் சினேகிதி.

நீண்ட நாட்களின் பின் சந்தித்த சினேகிதியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திண்டாடினாள் சுமதி. சினேகிதி சொன்னது உண்மைதான், மெலிந்து தான் போயிருந்தாள் சுமதி, அதற்குக் காரணம் ஜிம்முக்குப் போனதுதான் என்றும் இவளுக்குத் தெரியும், ஆனால் ஜிம்முக்குப் போனாலும் அங்கே உடற்பயிற்சியில் அவள் அதிகம் கவனம் செலுத்தவில்லை. அவள் மெலிந்ததற்கு அதுவல்லக் காரணம், அவளது கவனம் எல்லாம் வேறெதிலோ இருந்ததுதான். அங்கே அவள் சந்தித்த ஒருவன், நினைவிலும் கனவிலும் இவளைக் கொல்லாமல் கொன்று கொண்டிருந்தது தான் காரணம் என்று தோழியிடம் எப்படிச் சொல்வது.

இவளது தயக்கத்தை அவள் உடனே புரிந்து கொண்டாள். "என்னடி யாரிடமாவது மாட்டிக்கிட்டாயா?" என்றாள். இவள் தேவையில்லாமல் வெட்கப்பட்டாள். "இப்போது தான் புரியுது, பாரதி சொன்ன வரிகளின் அர்த்தம், உணவு செல்லவில்லை, சகியே, உறக்கம் கொள்ளவில்லை அதுதானே?" என்றாள். இவள் மௌனமாகத் தலையசைத்தாள்.

"அப்புறம் என்னாச்சு?" "பாலும் கசந்ததடீ சகியே, படுக்கை நொந்ததடீ!" என்று இவள் சொல்லிச் சோகமாகச் சிரிக்கச் சிநேகிதியும் சேர்ந்து சிரித்தாள். "சங்ககாலத்தில இருந்து காதலர்கள் இதைத்தானே சொல்லிட்டு இருக்கிறார்கள். புதிதாக ஏதாவது இருந்தால் சொல்லேன்" என்றாள்.

"எந்தக் காலமாக இருந்தாலும் காதல் காதல்தானே, இது உடலும், உணர்வும் சம்பந்தமானது, அதனால்தான் ஒன்றையொன்று பாதிக்கின்றது" என்றாள். "உடலும், உணர்வுமா? என்ன சொல்கிறாய்?" என்றாள் தோழி. "ஆமாம், காதல் உணர்வு ஏற்படுவதற்கு ஏதாவது ஒரு வகையில் ஈர்ப்பு ஏற்படவேண்டும், அதைத்தான் சொன்னேன்" என்றாள்.

"அப்படி என்றால் அது காதல் அல்ல, உடலையோ அல்லது அழகையோ பார்த்து மயங்குவது என்றால், காமம் என்றுதானே சொல்ல வேண்டும்" என்றாள் சினேகிதி. "நீ எப்படி வேண்டும் என்றாலும் எடுத்துக்கோ, ஆனால் உண்மை அதுதானே! இந்த ஈர்ப்புத்தான் அதன்பின் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வைக்கிறது. இருவருக்குமிடையே புரிந்துணர்வு இருந்தால்தான் அது உண்மையான காதல், புரியுதா?" என்றாள்.

"எனக்கு இன்னும் புரியலை, நீ என்ன சொல்ல வாறாய்?" "ஒருவருடைய உடம்பிலே, அழகிலே, குரலிலே, எழுத்திலே, இப்படி இன்னும் பல. சுருங்கச் சொன்னால் ஒருவருடைய நடையுடை பாவனையில் மற்றவர் கவரப்படுவது. சில சமயம் அது நல்ல நட்போடும் நின்று விடலாம், இல்லை என்றால் அதையும் தாண்டிக் காதலாக மாறித் திருமணத்திலும் முடியலாம். ஒருதலைக் காதலாக இருந்தால் அது தோல்வியில் முடிந்து விடும். ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள் "சொல்லாத காதல் என்றுமே செல்லாத காதல்தான்!" என்றாள்.

"சபாஷ், காதலுக்கு விளக்கம் எல்லாம் சொல்லுமளவிற்கு முன்னேறிவிட்டாய், வயதுக் கோளாறினால் ஏற்பட்ட மாற்றம்தான் இது. கீப்பிட்ரப்!" என்றாள் தோழி. "இந்த வயதில காதலிக்காமல் வேறு எப்ப காதலிக்கிறதாம், மனசுக்கு மட்டுமல்ல, உடலுக்கும் சில தேவைகள் இயற்கையானதுதானே!" என்றாள் சுமதி. "எங்கே சந்தித்தாய் அவனை, எப்படி இருப்பான்?" என்றாள் சினேகிதி.

ஜிம்முக்குப் போனேனா, அங்கே அவன்தான் பார்சனல் றெயினராய் வந்தான். முதல் நாளே அவனும், அவனுடைய சிரிப்பும் என்னை அப்படியே உறைய வெச்சிட்டுது. அன்று இரவு முழுதும் என்னால் தூங்கவே முடியவில்லையென்றால் பாரேன்" என்றாள் சுமதி.

"உன்னுடைய ஹிரோவை இப்பவே எனக்குப் பார்க்கணும் போல இருக்குடி" சுமதி செல்போனை எடுத்து அவனுடன் எடுத்த செல்பியைக் காட்டினாள். படத்தில் பையன் அழகாக ஸ்மாட்டாகத்தான் இருந்தான். இவளுக்கு ஏற்ற ஜோடிதான். பக்கத்தில் நின்ற இவளது முகத்தில் "எனக்கே எனக்காய்" என்பது போன்ற அப்படி ஒரு சிரிப்பு! "எப்படி இவனை மடக்கினாய் உன்னைப் போலவே அவனும் உன்னை விரும்பிறானா?" என்றாள் சினேகிதி.

"அவன் ஒவ்வொரு முறையும் அருகே மிக நெருக்கமாய் வரும்போதெல்லாம் மனசு திக்,திக்கென்று அடித்துக் கொள்ளும், எனக்கு உடம்பெல்லாம் கூசும். ஆனால் அவனோட பக்கமிருந்து எதிர்வினை எதுவுமே நடக்கலை, அவன் ரொம்பவும் மரியாதையோடு நடந்து கொண்டான்."

"நீ சொல்வதைப் பார்த்தால், அப்பாவியாய் இருப்பான் போல..?" என்றாள் சினேகிதி. "அப்படித்தான் நானும் நினைச்சேன், அவன் விலகிவிலகிப்போக, துரத்திப் பிடிக்கணும்போல எனக்குள் ஒருவித வெறிதான் ஏற்பட்டது." "அப்புறம் என்னாச்சு?"

இனியும் என்னாலே தாங்க முடியாது சாமி என்று ஒருநாள் சின்னதாய் ஒரு கேம் விளையாடிப் பார்த்தேன்" "என்னடி செய்தாய்?" என்றாள் அதிர்ந்துபோன தோழி. "ரெட் மில்லிலே ஓடும்போது, அவன் அருகே வருவதை அவதானித்தேன், தற்செயலாக கால் தவறி விழுவது போல அவனது பக்கம் சரிந்தபோது, அருகே வந்த அவன் என்னைத் தாங்கிக் கொண்டான்." "அது போதுமே உனக்கு" என்றாள் சினேகிதி. "இல்லை, காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளணும் தெரியுமா, நான் கொஞ்சம் மயக்கமானமாதிரியும் நடிச்சேன்."

"அடப்பாவி, ஏண்டி அப்படிச் செய்தாய்?" "அவன் பாவமடி, அதை உண்மை என்று நம்பிப் பயந்து போயிட்டான். ஓடிப்போய் தண்ணீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்து விட்டான். "காலையில சாப்பிடலை அதுதான் கொஞ்சம் பலவீனமாயிட்டேன்" என்று ஒரு பொய்யை எடுத்து விட்டேன். அதையும் நம்பி கன்ரீன்ல சாப்பாடும் வாங்கித்தந்தான்டி!" "உனக்கு எற்ற மாதிரி ஆடக்கூடிய நல்ல ஆளைத்தான்டி பிடிச்சிருக்கிறாய், அப்புறம் என்ன நடந்தது?"

"சூட்டோடு சூடாய் ஒருநாள் டேற்றிங்குக்குக் கேட்டேன் சம்மதித்தான்" என்றாள் சுமதி. "ஓ..! இந்த விடயத்தில அவ்வளவு வேகமா நீ..?" "அவன் தன்னைப் பற்றிச் சொன்னான் நானும் என்னைப் பற்றிச் சொன்னேன். அவனோட இருக்கும்போதெல்லாம் சொர்க்கத்திலே இருப்பது போல மகிழ்ச்சியாய் இருந்திச்சு, அப்புறம் இரண்டாவது டேட்ரிங், இருவரும் கையைப் பற்றிக் கொண்டு, எதிர்காலம் பற்றிப் பேசிக் கொண்டு பூங்காவில் நீண்ட தூரம் நடந்தோம், நடந்தோம் என்று சொல்வதைவிட காற்றிலே மிதந்தோம் என்றுதான் நினைக்கின்றேன்."

"ஆகா, கதை ரொம்ப சுவாரஸ்சயமாக இருக்கிறதே" என்றாள் சினேகிதி. "இனித்தான் சுவாரஸ்யமே இருக்கு, தனது காரில் கூட்டிவந்து என்னுடைய இருப்பிடத்தில் வண்டியை நிறுத்தினான். மெல்ல இருட்டியிருந்தது, இறங்குவதற்காகத் தயக்கத்தோடு அவனிடம் விடைபெற்றபோது, சட்டென்று என்னை அருகே இழுத்து முத்தம் ஒன்று தந்தான்டி, சொன்னால் நம்பமாட்டாய், அம்மாடி சொர்க்கத்திற்குப் போய்வந்தது போல, அந்தக்கணம் என்னையே நான் இழந்திட்டேன்" என்றாள் சுமதி.

"நல்ல முன்னேற்றம் தான், ஆனால் அதற்கேன் இப்ப சோகமாய் இருக்கிறாய், உங்களுக்குள் ஏதாவது ஊடலா?" என்றாள் சினேகிதி. "அப்படி இருந்தாலும் நான் இருக்கிற நிலையில எப்படியாவது அவனிட்ட சரண்டர் ஆகிவிடுவேனே, என்னாலே முடியல்லையே" என்றாள் சுமதி. "ஏன்டி இப்படி புலம்புறாய்?"

"எல்லாம் நல்லபடியாய்தான் போய்க் கொண்டிருந்தது, ஆனால் யார் கண்பட்டுதோ, திடீரென நாங்கள் பிரியவேண்டி வந்திடிச்சு" என்றாள் சுமதி. "பிரியவேண்டி வந்திச்சா, ஏன் என்னாச்சு?" "துபாயிலே நல்லதொரு வேலை கிடைச்சு அதனாலே அவன் திடீரெனப் போகவேண்டி வந்திடிச்சு. அவன் ஏற்கனவே விண்ணப்பித்திருந்த வேலையாம், நல்ல சம்பளம், காசேதான் கடவுள் என்று சொல்லிப் போயிட்டான். சீக்கிரம் வந்திடுவேன், கொஞ்சநாட்கள் தானே பொறுத்துக் கொள்ளமாட்டியா என்று கெஞ்சிக் கேட்டான்." "அதுதானா, பிரிவுத்துயரால் வந்த சோகமா இது?" தோழி பரிதாபப்படுவது போலக் கேலி செய்தாள்.

"பல்லைக் கடிச்சிட்டு இருக்கத்தான் முயற்சி பண்றேன், மனசுக்கு சமாதானம் சொன்னாலும் இந்த உடம்பு கேட்குதில்லையே, ஆறுமாதம் கழிச்சுத்தான் அவனுக்கு விடுமுறை கிடைக்குமாம்!" ஏக்கத்தோடு சொல்லிச் சிணுங்கினாள். "புரியுது, இந்தப் பருவத்தில் காதலனைப் பிரிஞ்சு இருப்பது ரொம்பக் கஷ்டம்தான், அதுவும் ரொம்ப நெருக்கமாய் இருவரும் பழகிட்டு. உன்னுடைய ஏக்கப் பெருமூச்சைப் பார்க்கவே தெரியுதே..!" என்றாள் சினேகிதி.

தோழிகள் இருவருக்கும் பேசுவதற்கு நிறையவே விடயங்கள் இருந்ததால், இரவு தூக்கம் வரும்வரை பேசிக்கொண்டே இருந்தார்கள். படுக்கையிலும் விட்ட கதையைத் தொடர்ந்தார்கள்.

"ஏன்னடி உடம்பு இப்படிக் கொதிக்குது, ஜூரமா?" என்றாள் அருகே படுத்திருந்த சினேகிதி. "உடம்பு சுடுகுதா? எனக்கா, ஏன்டி ஒருவேளை கொரோனா வைரஸ்ஸாக இருக்குமோ?" என்று பயந்தாள் சுமதி. "என்னடி பயமுறுத்திறாய், அவனைப் பார்க்காமலே செத்துப்போயிடுவேனோ என்று பயப்படுறியா?" என்றாள் சினேகிதி. "இல்லை நான் அதுக்குப் பயப்படவில்லை, அப்படி ஏதாவது என்றால் அவன் என்னை மறந்திடுவானாடி?"

"உனக்குக் காதல் பைத்தியம் முத்திப்போச்சு, இப்போ பேசாமல் தூங்கு. அவன் சீக்கிரம் வந்திடுவான்." என்று சமாதானப் படுத்தினாள் சினேகிதி. இருவரும் பேசிக் கொண்டே ஒரே போர்வைக்குள் படுத்தபடி தூங்கி விட்டார்கள். திடீரென விசும்பும் ஒலி கேட்டு சினேகிதி திடுக்கிட்டு விழித்துப் பார்த்தாள், அருகே சுமதிதான் தூக்கத்தில் விசும்பிக் கொண்டிருந்தாள். பாவம், அவளது நிலையை எண்ணித் தோழி பரிதாபப்பட்டாள். அமைதியாகத் தூங்கட்டும் என்று எதுவுமே பேசாமல் அவள் பக்கம் திரும்பி அவளை மெல்ல அணைத்து முதுகிலே வருடி விட்டாள் சினேகிதி.

தோழியின் மூச்சுக் காற்று இவளது காதுமடலில் படவே, தூக்கக் கலக்கத்தில் எதுவுமே புரியாத சுமதி என்ன நினைத்தாளோ தெரியவில்லை, காதலன் என்று நினைத்தோ என்னவோ, தோழியை இறுக அணைத்து அவளது கன்னத்தில்..! "என்னாச்சு இவளுக்கு, கனவு ஏதாவது கண்டிருப்பாளோ?" என்று அவளது அணைப்புக்குள் அகப்பட்ட தோழி எதுவும் புரியாமல் வியப்போடு விழித்தாள். தூக்ககலக்கத்தில் இவளை இறுக அணைத்தபடி அப்படியே இருந்த சுமதி, சற்று நேரத்தில் வேகமாக மூச்சிரைப்பதையும் அதன் பின் மெல்ல மெல்ல அடங்கிப் போனதையும் இவள் உணர்ந்தாள்.

விடிந்த பின்பும் இவள் பக்கம் சரிந்து ஒரு கையால் இவளை இறுக அணைத்தபடி, இவளுக்குள் ஒடுங்கிப் போய் விழிமூடிப் படுத்திருந்த சுமதி, வாய்க்கு வந்தபடி காதலனின் பெயரைச் சொல்லி அவனுடன் கெஞ்சுவதுபோல, ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தாள்.

காதலனுக்குக் கிடைத்திருக்க வேண்டிய அதிர்ஸ்டம், இதமான அவளது அணைப்பில், போர்வைக்குள் கிடைத்த மென்மையான அவளது உடற்சூட்டில் என்னவென்று சொல்ல முடியாத, இதுவரை ஒருபோதும் அனுபவிக்காத ஒரு புதுவிதமான சுகத்தைச் சற்றும் எதிர்பாராமலே, அவளிடம் களவாடிய அந்த தருணத்தை அனுபவித்தாள் இந்தத் தோழி. காலம் செய்த கோலத்தில், புதுமையான இந்த அனுபவத்தைப் பெற்ற இவளும் ஒருவிதத்தில் அதிர்ஸ்டக்காரிதான்..!

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
VASANTHAM TAMIL WELLNESS CENTRE

Project for Parents, Grandparents, Children and Grandchildren
பெற்றோர், தாத்தா, பாட்டி, குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கான திட்டம்

Project for the development of addicted children:
Computer games - Gambling
அடிமையான குழந்தைகளின் மேம்பாட்டுக்கான திட்டம்:
கணினி விளையாட்டு - சூதாட்டம்

Join our Focus Group Now!
Selected Group Focus!
Gift Cards!
Volunteer Hours!

We are selecting 10 for each groups. We also have online volunteer opportunity for children in our centre online.

1. grade 6 - 8
2. Grade 9 - 12
3. Grand Parents and parents live with these addicted children.

For further information: Jeyanthini: 416-847-4172
Email: info@vasantham.ca
Partially funded by CAMH - Gambling Addiction Program

(647) 374-4685
VASANTHAM.CA
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
E-mail : info@vasantham.ca
contact us : (416) 847-4172




DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan

ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor


*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 43)*

## கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மகன் ஆதித்த கரிகாலர், பளுவூர் ராணி நந்தினி கந்த மாறனிடம் கொடுத்து அனுப்பிய ஓலையைப் படித்து விட்டு கடம்பூர் செல்ல ஆயத்தமானான். அவனுடன் அவன் நண்பன் பார்த்திபேந்திரனும் இணைந்து கொண்டான். இவர்கள் கெடில நந்திக் கரையோரமாக பயணித்தனர். பன்னிரண்டாம் வயதில் போர்க்களம் புகுந்த வீராதி வீரர் வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பர கேசரி இரட்டை மண்டலத்தார் சொப்பனத்தில் கண்டு அஞ்சும் சிங்கம் சக்கரவர்த்தியின் திருமகனார் ஆதித்தகரிகாலர் சோழ மகாராஜா வருகிறார் பராக்! என்று இடி முழக்க குரலில் கேட்ட கோஷத்தை கேட்டதும் மக்கள் ஆவலுடன் வீதியின் இருபுறமும் வழிவிட்டு நின்றனர். வீராதி வீரனைப் பார்க்க ஆவலுடன் நின்றனர். வீராதி வீரனைப் பார்க்க பரிவட்டம் ஏற்றுவோர் என்று ராஜ ஊர்வலம் வீதியில் வந்தது. மூன்று குதிரைகளில் நடுவில் வரும் குதிரையில் ஆதித்தகரிகாலரும் இரண்டு பக்கமும் அவர் நண்பர்கள் கடம்பூர் இளவரசன் கந்தமாறனும், பார்த்திபேந்திரப் பல்லவனும் வந்தார்கள். சனங்கள் அவர்களைப் பார்த்து பரவசம் கொண்டனர. அத்துடன் பலவிதமாக பேசிக் கொண்டனர். ஆதித்தகரிகாலர் முகம் வாட்டமாக இருக்கிறது ஏனென்றால் அவர் தம்பி பொன்னியின் செல்வனைக் கடல் கொண்ட பின் எந்த செய்தியும் கிடைக்கவில்லை அவர் தந்தையும் உடல் நலம் குன்றியிருக்கிறார் என்று கவலை இரட்டை மண்டலத்திற்கு படையெடுக்க வேண்டும் என்று ஆதித்தர் ஆசை ஆனால் அது கைகூடவில்லை. இந்த பழுவேட்டரையர் தளவாட சாமக் கிரியைகள் கொடுக்க மறுக்கிறார் என்றும், இல்லை கரிகாலர் ஒரு பாண்டிய நாட்டுப் பெண் மீது காதல் கொண்டிருந்தார் அவளை பெரிய பழுவேட்டரையர் மணந்து கொண்டார். இன்று கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சிற்றரசர்கள் கூடுகிறார்களாம் ஆதித்தகரிகாலர் அங்கே போகிறார் பழுவேட்டரையருக்கும், கொடும்பானார் வேளாளருக்கும் சண்டை மூளும் போல் சொல்கிறார்கள் என்ன நடக்குமோ தெரியவில்லை என்று சனங்கள் கதைத்தார்கள். குதிரை மீது வந்த அசர குலத்தவர் கரையோரமாக நின்றனர். ஓரு ரதம் சற்றுத் தள்ளி அரச மரத்தடியில் நின்றது. அதில் ஆதித்தகரிகாலர் பாட்டனார் திருக்கோவலூர் மலையமான் இருந்தார். இவர் எண்பது வயது வீரக் கிழவர் ஆதித்தகரிகாலரின் தாத்தா! இவர் கரிகாலனை அழைத்தார் அவனும் குதிரையில் இருந்து இறங்கி சென்றான் இருவரும் அரச மரத்தடியில் அமர்ந்து பேசலாயினர்.

அப்பொழுது மலையமான் கூறினார் 'ஆதித்தா என் ஞாபங்கள் திரும்பி வருகின்றன அதை உனக்கு சொல்லுகிறேன் கேள் ஏனென்றால் நான் உன்னோடு தொடர்ந்து வரவில்லை திரும்பி தீருக் கோவலூர் போகிறேன் உன் தந்தை ஒரு பேரழகன் அதை விட சோழ சிங்காசனத்திற்கு உரியவன் என்ற மட்டில் அவனுக்குப் பெண் கொடுக்க இலங்கை முதல் விந்திய பர்வதம் வரை போட்டி போட்டார்கள். ஆனால் எனக்குத் தான் உன் தந்தை மருமகனாகும் பாய்க்கியம் கிடைத்தது அதைவிட நீ என் மாளிகையில் தான் பிறந்தாய் உன் பிறப்பு சோழ நாட்டையே மகிழ வைத்தது. நூறு வருடங்களாக நான் சேர்த்து வைத்த பொருள்கள் எல்லாம் உன் கொண்டாட்டத்தில் மூன்று நாளில் கரைந்து போனது அத்தனை சிறப்பாக பெருமிதமாக கொண்டாடினோம். சோழ குலத்தை விளங்க வைக்க வந்த வாரிசு என்ற பூரிப்பு எல்லோரையும் ஆட்கொண்டது உனக்கு பெயர் சூட்டுவதில் பெரிய வாக்கு வாதம் இறுதியாக குலத்து முன்னோரில் புகழ் பெற்ற கரிகால் வளவன் உன் பெரிய பாட்டனார் இராஜாதித்தர் இரண்டு பேரின் பெயரும் கலந்து உனக்கு 'ஆதித்தகரிகாலன்' என்று நாமம் சூட்டப்பட்டது. அப்பொழுது தாத்தா தக் கோலத்து போர் பற்றிச் சொல்லுங்கள்' என்றார் ஆதித்தகரிகாலர். தக் கோலத்துப் போரில் உன் பாட்டனார் தோல்வியுறவில்லை வஞ்சனையால் கொல்லப்பட்டார் கேள் உன் பாட்டன் வீராதி வீரன் அதிக கடமை ஆர்வம் ஆற்றல் யாவும் ஒன்றே கொண்டிருந்தார். தக்கோலத்தில் பத்து நாட்கள் போர் நடந்தது பத்து நாட்களும் இராஜாதித்தர் யானை மேல் இருந்து புலிக் கொடியை கம்பீரமாக பறக்க விட்டுக் கொண்டு வீரர்களை உற்சாகப் படுத்தி, தானும் போர் செய்தார் இதையெல்லாம் அவதானித்த கங்க நாட்டு மன்னன் பூதகன் எதிரிகள் படையில் இருந்தான். இவன் (கன்னரதேவன்) தன் யானையில் இருந்தபடி சமாதானக் கொடியை பறக்க விட்டான் இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்திக் கொண்டான் சரணம் சரணம் என்று கூறியபடி இராஜாதித்தரை நோக்கி வந்தான். உன் பாட்டனாரும் சரணடைய வருபவனை சமாதானம் கோருபவரின் கண்களில் கண்ணீர் பொழிபவனை நான் தாக்க கூடாது என்று மனம் இளகி அவன் யானையை தன் யானை அருகில் நெருங்க விட்டார். அப்பொழுது அந்தப் பாதகன் தன் அம்பை எடுத்தான் உன் பாட்டனார் மீது எய்தான். அதில் கொடிய விஷம் இருந்ததால் இராஜாதித்தன் யானை மீது இருந்தபடி இறந்து போனார் (அதனால்தான் இன்று அவரை யானை மீது துஞ்சிய தேவர் என்கிறோம்) பூதகன் தன் யானையை விரட்டி அடித்துக் கொண்டு ஓடிவிட்டான். குழந்தாய் நீயும் அவரைப் போல் வீராதி வீரர் ஆனால் வஞ்சத்திற்கு ஏமாந்து போகக் கூடாது என்று நினைவுபடுத்துகிறேன். உன் பாட்டனார் சோழ சாம்ராஜ்யத்தை இலங்கை முதல் கங்கா நதி வரையிலும் விஸ்தரிக்க ஆசை கொண்டார் அவர் ஆசை நிறைவுறவில்லை உன்னால் அந்த ஆசைகள் நிறைவுறும் என்று நானும், இந்த நாட்டு மக்களும் நம்பியிருக்கிறோம் அதை நீ மறந்து விடாதே! 'சோழர் ஆட்சியே பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. மேலும் உலகெங்கும் அது பரந்து வியந்து சென்றது அதற்கான ஆதாரங்களும் உண்டு என ஆய்வாளர் கண்டு தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். இராஜாதித்தரின் எண்ணங்கள் ஆசைகள் ராஜ ராஜ சோழனாலும் அவன் மகன் இராஜேந்திர சோழனாலும் நிறைவேற்றப்பட்டது ஆனால் அதை நாம் மீண்டும் எம் பகைவர்களிடம் பறிகொடுத்து விட்டோம். வரலாற்றை மறைத்து திரித்து செய்த சூழ்ச்சியால் நாம் தோல்வியுற்று நிற்கிறோம் எப்பொழுது எப்படி யாரால் எம் தமிழினம் தலை நிமிர்ந்து நிற்பது? இராஜாதித்தர் ஆசையும் எண்ணங்களும் இராஜ இராஜ சோழன் அவன் மகனூடாக நிறைவேறியதே இவர்களின் ஆசைகள் நிறைவேற எங்கள் பங்காக சோழ வரலாற்றை அறியாத பலர் அறிந்து கொள்ள விரும்புகிறோம்', 'வாள் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக கேள் போல் பகைவர் தொடர்பு', இராஜ்ஜியம் சம்பந்தமான தகராறு எனினும் சம்புவரையரின் மகள் மணிமேகலையை உனக்கு மணம் செய்விப்பதாகவும், உன்னை கடம்பூர் அழைக்கிறார்கள் இதில் என்ன சூழ்ச்சி இருக்கின்றதென்று நான் அறியவில்லை! நீயும் அறியாய் நான் திருக்கோவிலுக்குச் சென்று என்னுடைய பாதுகாப்பு படைகளை எல்லாம் திரட்டி வந்து வெள்ளாற்றங் கரையில் தங்கியிருப்பேன். சம்புவரையர் அரண்மனையில் ஏதேனும் சந்தேகம் தோன்றினால் உடனே சொல்லி அனுப்பு நான் உன்னை கடம்பூர் போகவேண்டாம் என்று சொல்லியும் நீ பளுவூர் ராணி நந்தினியின் ஓலை கண்டு அங்கு போகிறாய் அதன் அர்த்தம் என்ன? என்றார் மலையமான்.




*(தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments


உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com


Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 985



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

இதுவரைகாலமும் தான் வாழ்ந்த வாழ்க்கையும், தான் கற்றுக்கொண்டவையும் தம்மைப் புகழ உதவியதேயன்றி, உண்மை நிலையை உணர்த்தவல்லவையல்'ல என்பதை உணர்ந்தார். இவைகளுக்கு அப்பாலுள்ள இறையுணர்ச்சியை ஒரு விநாடிகூட மறக்கவியலாநிலை எய்தினார். இதனால் அமைதிநாடி மருதடிப்பிள்ளையார் ஆலயத்தின் அருகே ஓர் ஆச்சிரமம் அமைத்து அப்பெருமானோடு இரண்டறக்கலந்து அவரோடு உரையாடிக்கொண்டு "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்ற நிலையில் ஏகாந்த உலகிலே இன்புற்றார். இவ்வாறாக மருதடியானுடன் இரண்டறக்கலந்து வாழ்ந்த வித்துவான் கணேசையர் அவர்கள், 1958 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தி மூன்றாந்திகதி மருதடியானைத் தியானித்தவாறு இவ்வுலகை நீத்தர்.

மருதடியானின் புகழைப் பல புலவர்கள் பலவாறாகத் துதித்துப் போற்றிப் பாமாலைகள் பாடியுள்ளனர். இவர்களுள் மருதடியானுக்கு அருத்தமண்டபம் அமைத்த மெய்யடியார் கந்தரின் சகோதரர்களான புலவர் மயில்வாகனனாரும், ஆசிரியர் சரவணமுத்து அவர்களும் குறிப்பிடத்தக்வர்கள். இவர்களைப்போலவே மருதடியானின் புகழை இவ்வூரைச் சேர்ந்த முத்துக்குமார ஆச்சாரி சுவாமிகளும் பலவாறாக விதந்து பாமாலை செய்துள்ளார்.

வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார்மீது கொண்ட ஆராத பக்தியின் காரணமாக, அவரது புகழைப் பாடிப் போற்றிய அன்பர்கள் உள்ளத்தில் என்றென்றும் விநாயகர் வீற்றிருந்து, காலத்தால் அழியாத பெரும பொக்கிஷங்களை உலகுக்கு வழங்க அருளியுள்ளார். இவர்கள் சென்ற பாதையிலே தற்காலத்திலும் பலஅன்பர்கள் சென்று மருதடியான்மேல் தோத்திரங்களும், போற்றுதல்களும் செய்து பேரின்பம் அடைந்து வருகின்றனர்.

பாடிப்பரவும் பணியில் திளைத்தவர்கள் ஒருபுறமும், வேண்டுதல்களை ஏற்று குறைநீக்கி நிறைவளிக்கும் குஞ்சரமுகத்து மருதடியானை மறவாது, அவன் தாள்பணிந்து கோயிற்பணிகளைத் தொடர்ந்தும் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள் ஒருபுறமுமாக பக்தகோடிகள் காணப்படுகின்றனர். மருதடிப்பிள்ளையாரின் வீதியுலாக்காட்சியை அழகொளிரக்காணும்பொருட்டு, 1929 ஆம் ஆண்டு முதல் பல அடியார்கள் மருதடிப்பிள்ளையார் ஆலயத்திறகுப் பல வாகனங்களை உவந்தளித்துள்ளார்கள். முதல்முறையாக 1928 ஆம் ஆண்டு மருதடிப்பிள்ளையார் வீதிவலம் வருவதற்கேற்றவகையில், மூஷிகவாகனம் உபயம் செய்யப்பட்டது. பின்னர் குதிரை வாகனமும், சிறிய கேடயமும் திரு. முத்துத்தம்பி என்பவரால் செய்து கொடுக்கப்பட்டது. நீர்வேலியைச் சேர்ந்த திரு. செல்லப்பா அவர்களால் பெரிய சகடையும், திரு. வ. கதிர்காமத்தம்பி மற்றும் அவரது சகோதரிகளின் குடும்பத்தினரால் சிறிய சகடையும் உபயம் செய்யப்பட்டது. திரு. இராசரத்தினம் என்பவரால் சிறிய இடபமும், திரு. ந.நடராசா என்பவரால் ஆனைவாகனமும், திரு.க.விநாயகமூர்த்தி தம்பதிகளால் பெரிய மூஷிகவாகனமும் மருதடிவிநாயகனுக்கு உபயம் செய்யப்பட்டது.

1933 ஆம் ஆண்டு திரு. சண்முகம் தம்பதியினரால் தங்கவேல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திரு தம்பிமுத்து தம்பதிகளால் வேல் ஒன்று செய்து ஆலயத்திற்கு அளிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு திரு.மாணிக்கவாசகர் தம்பதிகளால் சிவகாமி அம்பாள் சமேத நடேசர் சந்நிதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதேகாலப்பகுதியில், திரு. தம்பிமுத்து தம்பதிகளால் புதிய உற்சவமூர்த்தியும் செய்தளிக்கப்பட்டது. மருதடிவிநாயகர் திருப்பணிச்சபையால் அர்த்தமண்டபமும், கோவிலும் புனரமைக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு மாசிமாதம் பதினோராந்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இரண்டாவது கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. திரு. சுப்ரமணியம் அவர்களால் நிர்மாணிக்கப்பெற்ற மணிக்கூட்டுக்கோபுரத்தை, 1985 ஆம் ஆண்டு, திரு வல்லிபுரம் சாந்தமூர்த்தி அவர்கள் புதுப்பித்துச் சிறப்பாக அமைத்துள்ளார்.

இவ்வாறான உபயங்கள் இன்றுவரை தொடர்வது பக்தர்கள் மருதடியான்மீதுகொண்ட பக்தியை எடுத்துக்காட்டுவதாகவே அமைகின்றது. அத்தோடு ஆலயத்திலும் காலத்திற்குக் காலம் திருப்பணிகள் பல செய்வது தொடர்ந்துள்ளது. ஆதிமூல மூலவர் தாபிரமூர்த்தியை, திரு. செல்லத்துரை தெய்வேந்திரம் அவர்கள் உபயம் செய்துள்ளார்கள். செல்வி ஜெயரத்தினதேவி சபாரத்தினம் ஆசிரியையால் பஞ்சமுகவிநாயகர் உபயமாக அளிக்கப்பட்டது. திரு.தம்பிமுத்து குடும்பத்தினரால் முருகன் பரிவாரஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. நவக்கிரக சந்நிதியினை திரு.ச. தர்மலிங்கம் குடும்பத்தினரும், மூர்த்திகளை திரு. பிரேமச்சந்திரன் வசந்தாதேவி தம்பதிகளும் உபயம் செய்துள்ளனர்.

திருமதி.சிவமாலை தம்பிராசா அவர்களால் வைரவர் பரிவார ஆலயம் அமைக்கப்பட்டது. திருவாளர் தம்பிராசா அவர்களால் கொடித்தம்பம் உபயமாகச் செய்து கொடுக்கப்பட்டது. வசந்தமண்டபத்தினை திரு சின்னப்பு அவர்கள் கட்டிக்கொடுத்துள்ளார். சண்டேஸ்வரர் சந்நிதியினை திரு. பொ. கனகரத்தினம் அவர்கள் உபயம் செய்துள்ளார்கள். இவ்வாறான பல பணிகளை அன்பர்கள் பலரும் செய்துள்ளனர். இந்நிலையில் 1989 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 22 ஆந்திகதி உத்தரநட்சத்திரத்தில், அக்காலத்து திருப்பணிச்சபை மூன்றாவது கும்பாபி'கத்தை சிறப்பாக நிறைவேற்றியது.

இக்காலப்பகுதியின் பின்னரும் காலத்திற்குக் காலம் பல்வேறு திருப்பணிகள் வருத்தலைவிளான் மருத்தடிப்பிள்ளையார் ஆலயத்திலே நடைபெற்று, கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளது. தமிழீப்பகுதிகளிலே தொடரும் யுத்தங் காரணமாக ஏனைய ஆலயங்களைப்போல இவ்வாலயத்தின் வரலாற்றிலும், பின்னடைவு தற்காலத்திலே ஏற்பட்டுள்ளது. ஆயினும், மருதடியான்மீது பக்திகொண்ட அன்பர்கள், நாட்டுநிலைமை காரணமாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், சூழ்நிலைகள் சரியாக அமையும் வேளைகளில் இவ்வாலயத்திற்கு வருகை தருவதோடு, ஆலயத் திருப்பணிகளில் நாட்டங்கொண்டும் செயற்பட்டு வருகின்றனர்.

*"தன்மம் சிறந்திங் குயிர்வர அயில்விடு தாதாய் வெண்*
*சங்கம் பரந்தங் கலையினில் அலைவுறும் செந்தூராய்*
*மன்னும் தடங்கன் புளியடி மருவிய மைந்தாவுன்*
*மன்றல் மலர்ந்தங் கருள்பொழி பதமலர் கண்டேன் என்*
*கன்மம் பொடிந்து கருகிய திதயமும் விண்டேயென்*
*கண்கள் மலர்ந்தங் கருவியில் ஒழுகிட முந்தாழிச்*
*சன்மம் மடிந்து தரைமிசை உருளவும் நின்றேனே*
*தங்கம் மலர்ந்த மணிமயில் கடவிடும் முன்னோனே..."*

*வளரும்...*

A1 AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

# கியூபா சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், முதலாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்
2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி,
புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்
7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| 3 star ★★★ | 3½ star | 4 star ★★★★ | 4½ star | 5 star ★★★★★ |
|---|---|---|---|---|
| REGULAR C$1,000 | REGULAR C$1,250.00 | REGULAR C$1,500.00 | REGULAR C$1,750.00 | REGULAR C$2000.00 |
| 25% OFF C$ 750.00 | 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.
a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
விமான சீட்டு | தங்குமிட வசதி | விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை
காலை உணவு | மதிய உணவு | இரவு உணவு | மது பானம் | குளிர்பானம் | சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்
சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guideமொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
www.a1actour.com
facebook.com/Allcountriestour
416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

மலேசிய மடல்

# "கோவிட்–19 தொற்று எண்ணிக்கை" மலேசிய அரசியலில் ஒரு துருப்புச் சீட்டா:

## தவிர்க்கும்படி எதிரணித் தலைவர்கள் கோரிக்கை:



நக்கீரன்

**கோ**லாலம்பூர், பிப்.10:

நாட்டின் தென்கோடி மாநிலமும் சிங்கப்பூரை ஒட்டியுள்ள பகுதியுமான ஜோகூர் மாநிலத்தில் தேர்தல் தேதி மார்ச் 12 என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அண்மைய சில நாட்களாக நாட்டில் கொரோனா பரவல் எண்ணிக்கை ஐந்து இலக்கத்தை எட்டியுள்ளது.

அதனால், இந்த மாநிலத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் அல்லது, தேர்தலை நடத்தித்தான் ஆக வேண்டும் என்றால் எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும்







தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று எதிரணியான நம்பிக்கைக் கூட்டணியின் தலைவர் மன்றம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மாறாகா, தேர்தலையும் அறிவித்துவிட்டு, ஒட்டுமொத்த நடமாட்ட கட்டுப்பாட்டையும் விதிக்கக்கூடாது என்றும் கொரோனா தொற்று எண்ணிக்கை அரசியலில் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படக் கூடாதென்றும் பிகேஆர் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம், அமானாக் கட்சித் தலைவர் முகமட் சாபு, ஜசெக-வின் லிம் குவான் எங், உப்கோ கட்சியின் Wilfred Madius Tangau ஆகியோர் கொண்ட குழு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மலேசிய அரசியலின் போக்கை, கடந்த இரு வருடங்களாக அவதானித்து வருபவர்களுக்கு ஓர் உண்மை புரியும். மலேசியத் தலைவர்களும் பதவியில் இருக்கும் உயர்மட்டத் தலைவர்களும் அரசியலில் நெருக்கடியை எதிர்கொள்ளும் பொழுதெல்லாம் கொரோனா நச்சிலைக் காரணம் காட்டி அதற்குப் பின்னால் ஒளிந்து கொள்கின்றனர்.

அதைப்போல, அவர்களுக்கான அவசியம் நேரும்போதெல்லாம் கொரோனா தொற்று எண்ணிக்கையும் அதிகரிப்பதைக் காணமுடியும்.

அந்த வகையில் ஜோகூர் மாநில சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அண்மைய நாட்களாக கொரோனாத் தொற்று ஐந்து இலக்கத்தைக் கடந்து அறிவிக்கப்படுகிறது.

கடந்த நவம்பர் 20-ஆம் நாள் நடைபெற்ற மலாக்கா மாநிலத் தேர்தலைப் போல ஜோகூர் மாநிலத் தேர்தலிலும் கடுமையான SOP நடைமுறைகளை அறிவித்து, எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் மேற்கொள்ள முடியாதபடி முடக்கிவிட்டு, மலாக்கா பாணியில் அம்னோவும் அதன் தலைமையிலான தேசிய முன்னணியும் குயுக்தியான முறையில் தேர்தல் அறுவடை செய்ய திட்டமிடப்படுகிறதா என்ற ஐயம் மலேசிய அரசியலில் பரவலாக எழுந்துள்ளது.

2021 ஜனவரி 12-இல் கொல்லைப்புற ஆட்சியின் முதல் அங்கத்தின் பிரதமர் டான்ஸ்ரீ முகைதீன் யாசின், அவசர காலச் சட்டத்தை அதிரடியாக நாட்டில் அறிவித்தபோது, கொரோனாவைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவித்தார்.

2021 ஆகஸ்ட் முதல் தேதிக்குப் பின் அவசரகாலச் சட்டம் நீட்டிக்கப்படாது என்ற உறுதியை முகைதீன் அளித்திருந்தாலும், நாடாளுமன்ற நடவடிக்கைகள் யாவும் முடக்கப்பட்டிருந்தன. அந்தக் காலக்கட்டத்தில் நூலிழை பெரும்பான்மையில்தான் அவருடைய ஆட்சி அதிகாரா நாற்காலியில் ஒட்டிக் கொண்டிருந்தது.

அதனால், எதிர்க் கட்சிகளின் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் போன்ற நெருக்கடிகளை எதிர்கொள்ளாமல் இருக்கும் பொருட்டு, நாடாளுமன்றத்தை முடக்கை வைப்பதை குறிக்கோளாகக் கொண்டுதான் அவர் அவசர கால சட்டத்தை கையில் எடுத்தார் என்பது அரசியல் பார்வையாளர்களின் கருத்தாக







இருந்தது.

அதேவேளை, அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்த காலக் கட்டத்தில் கொரோனா பரவல் ஒன்றும் அந்த அளவுக்கு கட்டுப்படுத்தப்படவில்லை. ஆசிய மண்டல நாடுகளில், மலேசியாவின் கொரோனா தொற்று விகிதம் உச்சத்தில் இருந்ததையும் நாடு கண்டு வந்தது.

இந்த நிலையில், கொரோனா தடுப்பு நடவடிக்கை குறித்து ஆலோசிப்பதற்காக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரை 2021 ஜூலை 26, திங்கட்கிழமை முகைதீன் கூட்டினார்.

அப்போது சட்ட அமைச்சர் தக்கியுடின் ஹசான், அவசர காலச் சட்டம் மீட்டுக் கொள்ளப்பட்டதாகவும் ஜூலை 21-ஆம் நாள் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதுகுறித்து முடிவெடுக்கப்பட்டதாகவும் அறிவித்தார்.

அவசர காலச் சட்டத்தை மாமன்னர்தான் பிரகடம் செய்தார் அதன்படி அவர்தான் இந்த அறிவிப்பை மீட்டுக்கொள்ள முடியும். நிலைமை இவ்வாறு இருக்க, யாருக்கும் தெரியாமல் இந்த முடிவை எப்படி இரகசியாக எடுக்க முடியும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொந்தளித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம், இது ஒன்றும் சந்தை அல்ல் விருப்பம்போல முடிவு எடுப்பதற்க் எதுவாக இருந்தாலும் நாடாளுமன்றத்தில் முறையாக அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்ததுடன் இதன் தொடர்பில் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் கொண்டு வந்தார்.

ஜூலை 29, வியாழக்கிழமை இந்தத் தீர்மானம் குறித்து காரசாரமான விவாதம் நடைபெற்றபொது, அதை எதிர்கொள்ள முடியாமல் 4 நான்கு தடவை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

நண்பகல் வேளையில் முதல் தடவையாக ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் பிற்பகலில் கூடும் என்று அறிவித்த நாடாளுமன்ற சபாநாயகர் டான்ஸ்ரீ Azhar Azizan Harun, பின்னர் நாடாளுமன்ற ஊழியர் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாகவும் இரு வாரங்களுக்கு நாடாளுமன்ற ஒத்திவைக்கப்படுவதாகவும் அன்று மாலையில் அறிவித்தார். அதேவேளை, பிரதமர் துறை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், அரசியல் சாசன விதிகளின்படியே அவசரகாலச் சட்டம் மீட்டுக் கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



அந்த விவகாரம் அத்துடன் முடிந்தது. முகைதீன் தலைமையிலான அரசு, அந்தமட்டில் தப்பித்துக் கொண்டது.

பின்னர், அம்னோ பின்னிய கன்னியில் சிக்கி பதவி விலகியபின், முகைதீன் தன் அபிமானத்திற்குரிய டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரியை அந்தப் பதவிக்குக் கொண்டு வந்தார். இந்த இருவரும் ஜாடிக்கேற்ற மூடியைப் போல நடந்து கொள்ளும் நிலையில்தான் கடந்த நவம்பரில் மலாக்கா மாநிலத் தேர்தல் திணிக்கப்பட்டது.

அப்போது, கொரோனாவைக் காரணம் காட்டி, தேர்தல் பிரச்சாரத்துக்கு தடைவிதிக்கப்பட்டது. கடுமையான SOP நடைமுறைகள் அறிவிக்கப்பட்ட அந்தத் தேர்தலில் அம்னோ நல்ல பலன் அடைந்தது.

இப்போது, இன்னும் ஒரு மாதத்தில் ஜோகூர் மாநிலத் தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில், கடந்த மலாக்கா தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்கியதைப் போல ஜோகூரிலும் நடத்தி முடிக்கவோ என்னவோ கடந்த 5 நாட்களாக கொரோனா தொற்று எண்ணிக்கை ஐந்து இலக்க எண்ணிக்கையில் காட்டப்படுகிறது.

மொத்தத்தில் அம்னோவும் கொல்லைப் புற ஆட்சியாளர்களும் தங்கள் மனதிற்குள் கொரோனாவிற்கு வாழ்த்து சொல்லக்கூடும்.!

**நக்கீரன் -** Nakkeeran
013-244 36 24

## என்வலையில் விண்மீன்கள் - 84

***** ***** ***** ***** ***** ***

கவிஞர் தியாரூ

துன்பம் வரும்போது
துணையாய் நிற்போரே
அன்புத் தெய்வங்கள் - நம்
அருமைச் செல்வங்கள்!
இன்னல் வரும்வேளை
விலகி நிற்போரை
விட்டுத் தள்ளுங்கள் - கிளை
வெட்டிச் செல்லுங்கள்!

உள்ளம் அழும்போது
உறவாய் நிற்போரே
உண்மைச் சொந்தங்கள் - நம்
உயிரின் பந்தங்கள்!
வெள்ளம் எழும்போது
படகாய் வருவோரே
பண்பின் சிகரங்கள் - மெய்
பக்தித் திலகங்கள்!

ஏங்கும் மனத்திற்கு
ஏற்றம் தருவோரே
மானிட வைரங்கள் - அவரை
மனதில் வையுங்கள்!
வீங்கும் சுயநலத்தில்
வீழ்ந்து கிடப்போரே
வெற்றுத் தகரங்கள் - வழி
விட்டு நகருங்கள்!



## ஜீவன் முக்தி (பகுதி ) 473

# நிஜமான சாதனை உயர்ந்த உணர்வு நிலையை அடைவதே

நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள் அந்தம்மாவின் மொத்த சொத்துமே ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் குறைவு.

என்ன பெரிய அந்தஸ்த்தில் வாழ்ந்தார்கள் என்று கேட்டால் அவர்களின் அந்தஸ்த்தில் குறைவுதான்.

ஆனால் அவர்கள் நிலைப்பாடு மிக உயர்ந்தது. அந்தஸ்திற்கும் (status), நிலைக்கும் (state) இருக்கிற மிகப் பெரிய வித்தியாசம் பற்றிப் புரிந்துகொள்ளுங்கள்.

அவர்களிடம் அந்தஸ்து என்று ஒன்றுமே கிடையாது. மொத்தச் சொத்துமே ஒரு பசுமாடு, ஒரு குடிசை. அவ்வளவுதான்.

என்றாவது ஒருநாள் அந்தப் பசுமாடும் இறந்துவிட்டால் வாழ்க்கையே முடிந்து போயிற்று. வேறு ஒன்றும் கிடையாது. துணைக்கும் யாரும் கிடையாது.

ஆனால் அவர்கள் வாழ்ந்த நிலை வாழ்ந்த ஆனந்த நிலை, ஆனந்த பூரிப்பு ஆனந்த வாழ்க்கை சொல்லொணாத பூரிப்பு அளவிட முடியாதது.

அவர்கள் அந்தஸ்த்தில் ஒன்றுமில்லாமல் இருந்தாலும், அவர்கள் வாழ்ந்த நிலை ஒப்பிடமுடியாதது.

நன்கு ஆழமாகப் புரிந்துகொள்ளுங்கள். அந்த அம்மா பெரிய அந்தஸ்தின் உச்சத்தில் வாழவில்லை என்றாலும், பெரிய நிலைப்பாட்டில் வாழ்ந்துவந்தார்கள்.

நிஜமான சாதனை என்னவெனில் உச்சமான நிலையில் வாழ்வதுதான்.

அதற்காக இப்போது நான் உங்களை எல்லாம் 'உங்களின் செல்வத்தை துறந்து விடுங்கள்' என்று சொல்லவில்லை. 'செல்வத்தை வைத்திருப்பது தவறு அந்த அம்மாவைப்போல் ஒரு குடிசையில் ஒரே ஒரு பசுமாடு வைத்துக்கொண்டு வாழ ஆரம்பித்து விடுங்கள்' என்றும் சொல்லவில்லை.

'ஆனால் அந்த அம்மா வாழ்ந்த அந்த உயர்ந்த நிலையில் நிச்சயம் வாழுங்கள்' என்று சொல்ல வருகிறேன்.

நீங்கள் அந்தஸ்த்தில் எப்படி வேண்டுமென்றாலும் இருக்கலாம். ஆனால் அந்த அம்மாவைப் போன்று உயர்ந்த உணர்வு நிலையில் வாழ்ந்தீர்கள் என்றால் வாழ்க்கையிலே நிஜமான சாதனையை அடைவீர்கள்.

உள்ளார்ந்த இரகசியத்தை உணர்வீர்கள். பல உள்ளார்ந்த இரகசியங்களை யதார்த்தமாக உணரும் ஆற்றலை பெறுவீர்கள்.

## அந்தரங்கம்

### *கேள்வி - பதில்*

ஒரு மனிதருக்கு அவரின் துக்கங்கள் வேதனைகள் உணர்வுகள் மிக மிக அந்தரங்கமானவை.

மனிதனின் இயலாமைகள் இன்னும் கொஞ்சம் அந்தரங்கமானவை மற்றவர்களோடு பகிர முடியாத அந்தரங்கப் பிரச்சினை எதுவானாலும் தியானப் பாதையால் ஒரு நல்ல தீர்வை தரமுடியும்.

அப்படித் தீர்வைத் தரும் பரமஹம்ஸரின் வெவ்வேறு முயற்சிகளே இப்பகுதி.

அந்தத் தவறு மன்னிக்கப்படுமா?

1) என் வயது 32. இளம் வயதில் செய்த ஒரு தவறு என்னை இன்றளவும் வாட்டிக் கொண்டிருக்கிறது. பாவியான என்னைக் கடவுள் மன்னிப்பாரா?

- ரோகிணி சென்னை.

கடவுள் மன்னிப்பது ஒருபுறம் இருக்கட்டும். உங்களை நீங்கள் மன்னித்துவிட்டீர்களா?

நீங்கள் உங்களை மன்னிக்காதவரை கடவுளே உங்களை மன்னித்தாலும். அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. செய்த தவறை விட அந்தத் தவறையே மீண்டும் மீண்டும் மனத்தில் நினைத்துக்கொண்டிருப்பதுதான் பெரிய தவறு.

ஒவ்வொரு முறையும் நீங்கள் அந்தத் தவற்றை மனத்தில் சநிடயல செய்யும்போது அதே தவறை மீண்டும் ஒருமுறை செய்வீர்கள். கடவுள் மன்னிப்பாரா? என சாக்குப் போக்குச் சொல்லி பழைய தவறை அசைபோட்டு சுகம் காணும் மனச்செயலுக்கு, இன்றே முற்றுப்புள்ளி வையுங்கள். முதலில் உங்களை மன்னியுங்கள். கடவுள் உங்களை ஏற்கெனவே மன்னித்துவிட்டார்.

## சாஸ்திர சஸ்திரம்

2) புதிது புதிதாய் பிரச்சனைகள் வருகிறது. உணர்வு நிலையை பாதிக்கிறது. சாஸ்திர சஸ்திரங்கள் அதற்கு வழிகாட்டுமா?

சாஸ்திர சஸ்திரங்களைச் சேகரித்தால் போதும்.

சாஸ்திரம் என்றால் ஞானம்.

சஸ்திரம் என்றால் ஆயுதம்.

சாஸ்திரங்களைச் சஸ்திரங்களாக மாற்றி வைத்துகொள்வதைத்தான் சாஸ்திர சஸ்திரம் என்று சொல்வோம்.


ஒன்றுமில்லை நீங்கள் ஒரு பெரிய இராணுவம் வைத்திருந்தீர்கள் என்றாலே பக்கத்து நாட்டுக்காரர் உங்களைச் சீண்டிப்பார்க்க மாட்டார். நீங்கள் அவரை அடிக்கக்கூட வேண்டியதில்லை. உங்கள் பலத்தைக் காண்பித்தால் போதும். அதேபோல் உங்களுக்குள்ளே ஒரு பெரிய சாஸ்திர சஸ்திர கிடங்கு இருக்கிறது என்று தெரிந்தால் என்ன ஆகும்?


நன்றாகத் தெரிந்துக்கொள்ளுங்கள்... துக்கம் என்கின்ற அரக்கன் உங்களைத் தொடாது.

ஒவ்வொரு சத்தியங்களையும் உள்ளே வாங்கும் பொழுது, ஒவ்வொரு துக்கமும், ஒவ்வொரு பிரச்சினைகளுடைய முடிச்சும் அவிழ்ந்துவிடும். உணர்வு நிலையை உயர்த்திவிடும். இது ஞானிகளுடைய ஞானக்கருத்துகளைக் கேட்கும்போது மட்டுமே நடைபெறும்.

சாதாரண மனிதர்களுடைய வார்த்தைகள் அவர்கள் எந்த உணர்வு நிலையிலிருந்து வெளிப்படுத்துகிறார்களோ அந்த உணர்வு நிலையைத்தான் நமக்குள்ளும் ஏற்படுத்தும்.

அந்த வார்த்தைகள் நம்முடைய உள்தளத்தை உயர்த்தாது மாறாக உணர்வை உடைத்துவிடும். வெறுப்பு ஏமாற்றம் கோபம் என்ற உணர்வுகளாக வெடிக்கும்.





இன்னும் ஆழ்ந்து உணர வேண்டிய ஒரு விஷயம் இது. ஏன் சாஸ்திர சஸ்திரங்களை நாம் சேகரிக்க வேண்டும் என்பதைப்பற்றிப் பார்ப்போம். அதிக



நேரம் உயர்ந்த உணர்வில் இருக்க ஆரம்பிக்கும்போது நீங்கள் என்ன செயலை செய்தாலும் என்ன தொழிலைச் செய்ய ஆரம்பித்தாலும் மேம்படுவீர்கள். இதற்கு மேல் என்னால் வாழ முடியாது என்னும் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றாலும்கூட இந்த சாஸ்திர சஸ்திரங்கள் உங்களுடைய நடைமுறை வாழ்வில் நேரடியாகத் தீர்வுகளைத் தரும்.

உதாரணத்திற்கு உங்கள் வாழ்க்கையைத் துக்கப்படுத்திய நிகழ்ச்சியால் தவித்துக் கொண்டிருக்கும்போது அந்தத் துக்கத்தைப் போக்கும் ஒரு சத்தியத்தைத் தெரிந்து கொண்டாலோ அல்லது ஏற்கெனவே தெரிந்து வைத்த சத்தியம் மேலே வந்தாலோ எவ்வளவு இனிமையாக இருக்கும்.

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சத்தியத்தைத் தெரிந்து கொள்ளும் போது என்ன நினைக்கிறீர்கள்...'அடடா ஒரு 25 வருடம் முன்பு இதைக்கேட்டு உள்வாங்கியிருந்தேன் என்றால் வாழ்க்கையில் நடந்த எவ்வளவு துக்கங்களைக் குறைத்திருப்பேன்'.

பல துக்ககரமான மோசமான நேரங்களில் இந்த சாஸ்திர சஸ்திரங்கள் ஊன்றுகோலாக இருக்கும். துக்கம் என்கின்ற அரக்கனை அழிக்கின்ற அஸ்திரமாக இருக்கும். 24 மணி நேரமும் உங்களுடனேயே இருக்கும். இந்தப் பிறவியில் மட்டுமல்ல இனி வருகின்ற எல்லாப் பிறவிக்கும் இப்போது உள்வாங்கும் இந்தக் சத்தியங்களே ஞானக் கேடயங்கள் சாஸ்திர சஸ்திரங்கள்.

இந்த சாஸ்திர சஸ்திரங்களுடைய சாரம் உங்களுடைய உணர்வு நிலையை உயர்த்துவதே! உங்களுடைய பலத்தை அதிகரிப்பதே! எனவே உங்களின் புதுப் பிரச்சனைகளுக்கும் பழைய பிரச்சனைகளுக்கும் சாஸ்திர சஸ்திரங்களே நேரடி தீர்வு.

## சக்தி குறைவிற்கு வழி என்ன?

3) எனக்குச் சக்தி குறை இருப்பதாய்க் கருதுகிறேன். உடல் அடிக்கடி சோர்வு அடைந்து விடுகிறது. நான் என்ன செய்ய?

- பாலகேசவ் கன்னியாகுமரி

கரண்ட் கட்டாகி படிக்கட்டில் இறங்கும் போது கடைசிப் படி தாண்டிய பின்கூட இன்னோர் படி இருப்பதாக எண்ணி காலை தரையில் வேகமாக வைத்து தடுமாறிய அனுபவம் ஞாபகத்திற்கு வருகிறதா? இந்தத் தடுமாற்றம் படிக்கட்டால் வந்ததல்ல. இது சாதாரண மனத்தடுமாற்றம்தான் நீங்கள் சுட்டிக் காட்டும் சக்திகுறைவு கூட நிஜமானதல்ல. நீங்கள் குறிப்பிட்டிருப்பதுகூட 'எனக்குச் சக்திகுறை இருப்பதாகக் கருதுகிறேன்' என்றே குறிப்பிட்டிருக்கிறீர்கள். உடல் சோர்வு உங்களை விட்டு ஓடிப்போகும் அளவிற்கு சுறுசுறுப்பை உங்களின் உள்ளே நுழைய அனுமதியுங்கள். மனத்தின் விருப்பப்படி நமக்கு வரும் மந்தத்தன்மையின்படி உடலை மந்தமாய்ச் சோம்பி உட்கார்ந்து இருக்கவிடாமல் ஏதாவது ஒரு வேலையை தொடர்ந்து செய்யுங்கள்.

அப்போதெல்லாம் விழிப்புணர்வை முழுமையாக எடுத்து வாருங்கள். 'எனக்குச் சக்தி குறை இருப்பதாகக் கருதுகிறேன் என்று பேச இனி நேரமில்லை' என்னுமளவுக்குச் சக்தி பொங்க ஆரம்பிப்பதைக் காண்பீர்கள்.

## பெண் மனம் ஆழமா?

4) பெண்களின் மனத்தைப் புரிந்து கொள்ளமுடியுமா?

- பாலகேசவ் கன்னியாகுமரி

மனம் என்றாலே புரிந்து கொள்ளமுடியாது. இதில் பெண்கள் ஆண்கள் என்று பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. அப்படிப்பிரித்துப் பார்த்தாலும் பயன் எதுவுமில்லை. ஆண்கள் மனத்தை மட்டும் புரிந்துகொள்ளமுடியுமா என்ன?

இன்னொரு முக்கியமான உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். அடுத்தவர்களசுடைய மனத்தைப் புரிந்துகொள்ள துடிப்பவர்கள் எல்லோருமே தங்களுடைய மனத்தை புரிந்து கொள்ளமுடியாமல் தவிப்பவர்கள் தான்.

இல்லாவிட்டால் தலைக்கு மேல் ஆயிரம் வேலையிருக்கும்போது, பெண்கள் மனத்தை புரிந்துகொள்ள முடியுமா, முடியாதா என்ற பட்டிமன்றம் நடத்துவார்களா? கவிதைகள் கதைப்பார்களா? தேவையற்ற விவாதங்களில் இருந்து விடுபடுங்கள். அதுவே போதுமானது.

## சங்கரரின் சீடர்கள் குடித்தார்களா?

5) சங்கரரைப் பார்த்த சீடர்களும் ஒருமுறை கள் குடித்தார்களாமே? இது குருவே சீடர்களுக்குச் செய்யும் துரோகம் இல்லையா?

- பாலக்குமார் தனுஷ்கோடி

உங்களுக்கு அந்த நிகழ்ச்சிப்பற்றிப் பாதிதான் தெரிந்திருக்கிறது என்பது உங்கள் கேள்வியிலேயே தெரிகிறது.

ஆதி சங்கரர் ஒரு முறை பாதயாத்திரை சென்று கொண்டிருந்தார். அவருக்குத் திடீரென்று தாகம் எடுத்தது. அவர் எல்லாம் கடந்த ஞானி. அவர் உடல் உணர்வே இல்லாத ஞானி.

அவருடைய உடலுக்குத்தான் தாகம் எடுத்தது. சுற்றிலும் பார்த்தார். அங்குக்கள் இறக்கும் ஒரு தோப்பு இருந்தது. அங்கு ஒருசிலர் அப்போது தங்கள் பானையில் கள்ளை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

சங்கரர் 'அப்பா! தாகமாக இருக்கிறது. ஏதாவது இருந்தால் கொடுங்கள்' என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'சாமி!*கள் மட்டும்தான் இருக்கிறது' என்று சொன்னார்கள்.

அதற்கு அவர் 'அதனால் என்னப்பா தாகத்திற்கு எதுவாக இருந்தாலும் கள்'ளையும் பரவாயில்லை' என்று சொல்லி தம் தாகம் தீர அவர்கள் கொடுத்த ஒரு பானை குடித்துவிட்டார்.

இவர் கள்ளைக் குடித்த உடனே நம்மில் பல பேருக்குத் தோன்றுவதைப் போலவே அவருடைய சீடர்களுக்கும் தோன்றியது.

ஆஹா! சங்கரரே கள் குடித்தார். 'நமக்கு என்ன? நாமும் குடிக்கலாம்' என்று எல்லோரும் குடிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் சங்கரர் ஒரு பானை கள் குடித்தும் தடுமாறாமல் மனம் மாறாமல் தெளிவாக நடந்து சென்றார்.

ஆனால் சீடர்கள் குடித்த பிறகு தடுமாற ஆரம்பித்தார்கள். முறை தவறி நடக்க ஆரம்பித்தார்கள்.

சங்கரர் அவர்களுக்கு அறிவுரை சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே நடந்தார். கொஞ்ச தூரம் நடந்ததும் மாலைபொழுது வந்தது.

மீண்டும் சங்கரருக்குத் தாகம் எடுத்தது.

அந்த இடத்தைச் சுற்றி நோக்கினார்.

அங்கு ஒரு கொல்லர் இரும்பு உலைக்களம் வைத்திருந்தார். அங்கு அவர் இரும்பை உருக்கிக் கொண்டு இருந்தார்.

சங்கரர் அவர் பக்கத்தில் சென்றார். 'அப்பா! தாகமாக இருக்கிறது,' என்று சொன்னார்.

அதற்கு அந்தக் கொல்லர் 'இரும்பை உருக்கிக் வைத்திருக்கும் இரும்பின் ரசம்தான் என்னிடம் இருக்கிறது....தண்ணீர் இல்லை' என்று சொன்னார்.

உடனே சங்கரர் இரும்பை உருக்கி வைத்திருந்த பாத்திரத்தை எடுத்து, காய்ச்சிய இரும்பைத் தண்ணீர்போல் குடிக்க ஆரம்பித்துவிட்டார்.

இதைப் பார்த்த சீடர்கள் திகைத்தார்கள். இப்போது அவர்களால் அதை செய்ய முடியாது. சங்கரர் குடித்தார் நாங்களும் குடித்தோம் என்ற அவர்களின் வாதம் உடைந்தது. தலைகவிழ்ந்து நிஜம் புரிந்து உண்மையை உணர்ந்து நின்றார்கள்.

ஞானி சொல்வசைச் செய்யுங்கள் செய்வதைச் செய்யாதீர்கள்.

# அன்பின் தொனி - 641

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**பரிசுத்தம் அடைவதற்கான வழி**
**விசுவாசம் என்றால் என்ன?**

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. - **எபிரேயர் 11: 1**

விசுவாசம் என்பது தேவனை முற்றும் முழுவதுமாக, அவரையும் அவர் வார்த்தைகளையும், அவர் செயற்பாடுகளையும் எந்தவித ஐயப்பாடும் இல்லாமல் நம்பி, அவரைச் சார்ந்திருப்பதாகும். விசுவாசம் என்ற வழியின் மூலமாக நாம் தேவ னோடுள்ள உறவுக்குள் நுழைகிறோம். மேலும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து செயல்படுவதின்மூலம் எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி, நமது குறுகிய அறிவைச் சார்ந்திருப்பதை விட்டுவிட்டு அவரது எல்லையற்ற அறிவின் பொக்கிஷத்திலுருந்து அறிவைப் பெற்று அவர் நடத்துதலோடு ஜீவிக்கிறோம்.

**தேவன் நமக்கு விசுவாசத்தை அளிக்கிறார்**

தேவன் அருளும் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். இந்த விசுவாசத்தை தேவன் ஓர் ஈவாக நமக்குத்தருகிறார்.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. - **ரோமர் 1: 17**

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, - **எபேசியர் 2: 8**

ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். - **ரோமர் 10: 17**

அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். - **யாக்கோபு 2: 17**

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிறஜெயம். - **1 யோவான் 5: 4**

**விசுவாசத்தினால் இரடசிப்பு**

ஒருவன் தனது பாவங்களுக்காக மனம்வருந்தி, மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி பாவங்களைப்போக்க இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு, அவர் தேவ குமாரன் என்பதை தன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று தன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவான். ஆகையால் விசு வாசம் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் மிகவும் முக்கிமாகவும், அவசியமாகவும் விழங்குகிறது.

இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது, இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித் தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்க னென்றும் வித்தியாசமே இல்லை, எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம் பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப் படுவான். - **ரோமர் 10 : 8-13**

**கிருபை**

கிருபை என்பது தேவன் தம்முடைய தயவிலும், மனதுருக்கத்திலும் நிறைந்தவராய், தமது இரக்கத்தின் ஐசுவரியத்தின் நிமித்தம் தகுதியற்ற நிலையில் இருக்கும் எமக்கு அளிக்கும் சிலாக்கியம். நாம் பாவிகளாக நியாயத்தீர்ப்புக்குப் பாத்தி ரராக இருந்தபோதிலும், தேவன் அவரது பேரன்போடு நம்மை நோக்கிப் பார்த்து, நம்மை மன்னித்தார் என்பதாகும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக. - **2 தெசலோனிக்கேயர் 2: 16-17**

அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்த ப்பட்டது, - **2 தீமோத்தேயு 1: 9-10**

அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம். - **யோவான் 1: 16**

தேவ கிருபை நம்மை ஆண்டவருடைய குடும்பத்தில் அங்கத்தவராய் ஏற்றுக்கொள்வதோடு, நாம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழத் தேவையான வல்லமையையும் நமக்கு அளிக்கிறது.

**கிருபையினால் இரட்சிப்பு**

பாவிகளாகிய நாம் நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு இயேசு அண்டை அவருடைய மன்னிப்பைப்பெற விசுவாசத்தோடு வரும்போது, தேவன் தமது மாபெரும் கிருபையினால், மன்னிப்புக்கு தகுதியற்ற எம்மை மன்னிக்கிறார். அதனால் நாம் இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்பைப் பெற்று நித்திய ஜீவனின் நிச்சயத்தோடு வாழ ஏதுவாய் ஈருக்கிறது.

இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள், - **ரோமர் 3: 24**

தொடரும்...


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



*மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

*அத்தியாயம் - 10+*

ஒரு மகாகவியின் உடலென்ற பொருளை தீதின்று ஒரு நூறு ஆண்டுகளாகிவிட்டன. காலம் என்ற காலக்கடலில் கலந்து கழிந்தன. மேலும் ஒரு காலக்கவிஞன் எவ்வாறு "மகாகவி" ஆனான் என ஆய்வு செய்த கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் கீழ்க்கண்டவாறு பெருமிதம் கொள்கிறார்.

"வருஷ நதிகள், அவனது சமகால தோழர்களும், தொண்டர்களும், தலைவர்களும், ஐம்பூதங்களோடு ஐக்கியம் ஆகிப் போயின. ஆயினும் அவன் கவிதையாகிய உயிர்ப் பொருளை அழிப்பதற்கு ஐம்பூதங்களால் ஆகாது. காரணம், பாரதி கவிதைகள் காலத்தின் நித்தியங்கள் கற்பனையை சற்றே தொட்டுக் கொண்ட சத்தியங்கள். அவை உடல் சார்ந்து வாழவில்லை. உண்மை சார்ந்து வாழ்கின்றன. ஒரு நற்கவிதை என்பது பழையது புதியது என்ற காலப் பரிமாணம் கடந்தது காற்று பழையதாயினும் உள்ளிழுக்கும் போதெல்லாம் உயிராற்றல் உருமாறுவது போல் சூரியன் பழையதாயினும் அதன் கிரன விரல்கள் நின்று கிச்சு கிச்சு மூட்டும் போதெல்லாம், கவன மொட்டுக்கள் கட்டவிழ் மாறுபோல, எழுதி நூறு ஆண்டுகள் கடந்த பின்னும் ஆவேசத்தோடு துடி துடிக்கின்றன! பாரதி பாடல்கள் வள்ளுவன் போன்ற உலகப் பொதுமையோ இளங்கோ போன்ற காப்பிய பெருமையையோ, கம்பன் போன்ற நாடகச் செழுமையோ பாரதிக்கு வாய்க்கவில்லையெனினும், பாரதியை அவர்தம் வரிசையில் வைத்து அழகு பார்க்க காலம் தயங்க வில்லையே! ஏன்?

மொழியால் தன் தேவையை ஈடு செய்து கொள்பவன் கவிஞன்!
மொழியால் காலத்தின் தேவையை ஈடு செய்பவன் மகாகவி!
பாரதி மகாகவி!
இப்பிரபஞ்சம் உள்ளவரை தமிழ் வாழும்!
தமிழ் வாழும் வரை பாரதியும் வாழ்வார்!

பாரதி என்ற "மகாகவி" இப்பூவுலகில் ஒருவர் மட்டுமே என்பதையும் இந்நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்படி யாராவது ஒரு கவிஞர் நானும் "மகாகவி" தான் என்று புனைப் பெயர் சூட்டிக் கொண்டால் அவர் அவரது சொந்த பெயராலே மட்டும் அறியப்படட்டும் அறிமுகமாகட்டும்!

கடந்த வார இதழில் சங்கீத மேதை ஜி ராமநாதன் இசையமைத்த இறுதிப் படம் எது? அதில் இடம் பெற்ற பாடல் எது? என உங்களுக்கு அறியத் தருவதாக எழுதியிருந்தேன். ஆம்! அமரர். ஜி. ராமநாதன் அய்யா இசையமைத்து வெளியான, "இயக்குனர் திலகம்" கே எஸ் கோபாலகிருஷ்ணன் அவர்கள் கதை - வசனம் - எழுதி இயக்கி 1962-ல் வெளியான "தெய்வத்தின் தெய்வம்" படம் தான் அந்தப் படமாகும்! இப்படத்தின் மூலம் அறிமுகமாகிய நடிகை குமாரி மணிமாலா. நன்றாக நடனம் பயின்றவர். ஏற்கனவே வேறு ஒரு மணிமாலா (திருமதி வெண்ணிற ஆடை மூர்த்தி) திரையுலகில் அறிமுகமாகி வலம் வந்ததால், குமாரி மணிமாலா பின்னாளில் தனது பெயரை கீதாஞ்சலி என மாற்றிக்கொண்டார்.

"தெய்வத்தின் தெய்வம்" படம் மூலம் அறிமுகமானாலும், அப்படத்தில் அவர் பாரதி பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடிய நடனமும், பின்னணி இசையும் என்றும் ரசிக்கக் கூடிய கலை காட்சியாகும்! "பாரதி" பாடல் தொகுப்பில் "கண்ணன் என் காதலன்" எனும் தலைப்பின் கீழ் 5 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

"கண்ணன் என் காதலன்" 4 இலிருந்து 32 வரிகள் கொண்ட பாடல் வரிகளிலிருந்து 12 வரிகள் கொண்ட பாடலாக ஐயர் அவர்கள் மெட்டமைத்து இசையமைத்திருந்தார். பரத நாட்டியம் ஆடுவதாக அமைந்திருக்கும் அறிமுக நடிகை குமாரி (மணிமாலா) கீதாஞ்சலி பிரமாதமாக ஆடி இருந்தார்
இதோ மெட்டமைத்து பாடப்பெற்ற பாடல் வரிகள்...

"கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்
எண்ணமுரைத்துவிடில் தங்கமே தங்கம் - பின்னர்
ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்.

ஆற்றங்கரைதனில் முன்னர் ஒரு நாள் - எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசியதெல்லாம்
தூற்றி நகர் முரசு சாற்றுவனென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம் (கண்ணன்)

நேரமுழுவதிலும் பாவி தன்னையே - உள்ளம்
நினைத்து மறுகுதடி தங்கமே தங்கம்
தீர ஒரு சொலின்று கேட்டு வந்திட்டால் - பின்பு
தெய்வமிருக்குதடி தங்கமே தங்கம் (கண்ணன்)

அடுத்து இயக்குனர் ராஜீவ் மேனன் படமாகிய "கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்" படத்தில் பாரதி ஐயாவின் மிக அழகிய பாடல்களில் சிருங்காரம் - அற்புதம் நிறைந்ததான ஒரு பாடல் இடம்பெற்றிருந்தது.

பாரதி ஐயாவின் "கண்ணம்மா என் காதலி" எனும் தலைப்பில் இடம்பெற்ற பாடல் அது. படத்தில் இப்பாடலுக்கு நமது இசைப்புயல் தம்பி ஏ ஆர் ரகுமான் அற்புதமாக இசை அமைத்திருந்தார். ரம்மியமான காதல் ஜோடிகளான அழகி ஐஸ்வர்யாராய், அப்பாஸ் இணைந்திருப்பார்கள்.

பாடல் வரிகளுக்கேற்ப அழகி ஐஸ்வர்யா ராய் முக வடிவையும் - காதல் பொங்கும் விழி அசைவுகளையும் கண்டு கண்டு ரசித்தேன். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் திரு ஹரிஹரன் குரலோசை தென்றலும், நிலவும் கலந்து காற்றில் தவழ்ந்து வந்தது போலிருந்தது. எதையும் ரசித்து உள்வாங்கி விழிமூடி ஏகாந்தமாக சஞ்சரிப்பதற்கு ரசனை தான் முக்கியம்.

இதோ நீங்களும் பாரதியை காதலுடன் வாசியுங்கள்..

"...சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா
சூரிய சந்திரரோ!
வட்டக் கரிய விழி - கண்ணம்மா
வானக்கருமை கொல்லோ!
பட்டுக் கருநீலப் - புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில் தெரியும்
நட்சத்திரங்களடி...!

சோலை மலரொளியோ - நீ உனது
சுந்தரப் புன்னகை தான்!
நீலக் கடலலையே - உனது
நெஞ்சின் அலைகளடீ!
கோலக் குயிலோசை - உனது
குரலினிமையடீ!
வாலைக்குமரியடி - கண்ணம்மா
மருவக்காதல் கொண்டேன்
சாத்திரம் பேசுகிறாய் - கண்ணம்மா
சாத்திர மேதுக்கடீ!
ஆத்திரம் கொண்டவர்க்கே - கண்ணம்மா
சாத்திரமுண்டோ டீ?
மூத்தவர் சம்மதியில் - வதுவை
முறைகள் பின்பு செய்வோம்,
காத்திருப்பேனடி! - இது பார்
கன்னத்து முத்தமொன்று!
(சுட்டும் விழிச்சுடர்)



ஒளிப்பதிவாளரும் இயக்குனருமாகிய ராஜீவ் மேனன் ஒளிஓவியம் - கலைவடிவம் அற்புதம்.

அடுத்த இதழில்...
"முத்தமிழ் அறிஞர்" கலைஞர் மு கருணாநிதி அவர்கள் பாரதி ஐயாவை விட அவரது தாசனான பாவேந்தர் பாரதிதாசன் புகழ் பாடுவார். ஆனால் கலைஞர் படத்திலும் பாரதி பாடல் இடம்பெற்றிருந்தது. அறிவீர்களா?
காத்திருங்கள்

**- வீணை மைந்தன்**

# "நடிகர் திலகம்" அவர்களின் உடன்பிறவா சகோதரி "பாரதரத்னா" லதா மங்கேஷ்கரின் காந்தக் குரல் காற்றில் கலந்தது




பெப்ரவரி 6 ஆம் நாள் இந்திய அரசின் சகல ராஜ மரியாதைகளுடன் 21 பீரங்கி குண்டுகள் முழங்க தனது 92வது வயதில் இசைக் குயிலின் தங்கக் குரல் காற்றலையில் சங்கமமாகியது.

உலகின் ஏதாவது ஒரு வானொலியில் எப்போதும் ஒரு குயிலின் ஓசை ஒலித்துக் கொண்டேயிருக்கும். இப்பெருமை எந்தப் பாடகிக்கும் கிட்டாத பெருமை. அந்த இந்தியக் குயிலின் பெயர் லதா மங்கே'கர். 13 வயது மாணவியாகவிருந்த போது ஒலிக்கத் தொடங்கிய அவரது அமுதும் தேனும் கலந்த குரலோசை விண்ணுலகில் ஒலிப்பதற்காக பூவிலகிலிருந்து ஓய்வு பெற்று சென்றுவிட்டது.

உலகின் சாதனை படைத்த மெல்லிசைப் பாடகிகளுள் லதா மங்கேஷ்கர் முதன்மையானவர். பெருமை படைத்த மகாராஷ்டிர குடும்பத்தில் பிறந்து கடும் உழைப்பாலும் திறமையாலும், இசை புலமையாலும் முன்னேறி ஒப்பாரும் மிக்காருமின்றி புகழ் கொடி நாட்டிய இசைக்குயில் ஆவார்!

இந்தியா என்றால் நேருஜி - காந்திஜி - இந்திராஜி - ராஜ்கபூர் - சுந்தர் பிச்சை - அப்துல்கலாம் என்ற வரிசையில் அம்மையாரும் "லதாஜி" என தனி இடத்தை இசையால் வசமாக்கியவர்!

இவ்வளவு பெருமை வாய்ந்த லதா அம்மையார், சிவாஜி அவர்களுக்கு உடன்பிறவா சகோதரி என்பது பலருக்கு தெரியாத விடயம். லதாஜி மாத்திரமல்ல அவருட்பட பிறந்த 5 சகோதரிகளும் சிவாஜி ஐயாவின் சகோதரிகள் தான். சிவாஜி ஐயா உயிருடன் வாழ்ந்த காலத்தில் (பம்பாய்) மும்பைக்கு எப்போது சென்றாலும் லதா மங்கேஷ்கர் சகோதரிகள் வீட்டு விருந்தாளியாக தவறாமல் செல்வதுண்டு.

அதேபோன்று சகோதரிகள் இருவரும் சென்னை வரும்போது அண்ணா என்று வாஞ்சையோடு "அன்னை இல்லம்" வருவார்கள்..

சிவாஜி அய்யாவுடைய போக் ரோடு (செவாலியே சிவாஜி கணேசன் சாலை) இல்லத்தில் லதா சகோதரிகளுக்கென்று தனி விருந்தினர் விடுதி உண்டு. அவர்களுக்கான பிரத்தியேக டைனிங் டேபிள், மற்றும் சமாச்சாரங்களை சிவாஜி ஐயாவின் இல்லத்தரசி கமலா அம்மா சொல்லச் சொல்ல நேரில் பார்த்தவன் நான்.



"இங்கே தான் லதா உட்காருவா" என அவருக்குரிய நாற்காலியை சுட்டிக் காட்டினார்..

நினைவுகள் பின்னோக்கிச் செல்கின்றன.

சகோதரி உஷா மங்கேஷ்கர் வரைந்த சிவாஜி ஐயாவின் உருவப்படம் அங்கு மாட்டப்பட்டிருந்தது.

நமது "கலைகுரிசில்" டாக்டர் சிவாஜி கணேசன் ஐயாவிற்கு செல்வி. லதா மங்கேஷ்கர் அம்மா அவர்கள் தனது தந்தையின் நினைவாக வழங்கிய "தீனானத்" மங்கேஷ்கர் விருதினை 1993 ஆம் ஆண்டு வழங்கியிருந்தார்.

மராட்டிய இசை நாடகத்தின் பொற்காலத்தை பற்றி பேசும், ஒவ்வொரு மராட்டிய குடும்பத்திலும் உச்சரிக்கப்படுகின்ற பெயரான "தீனானத்" குழுவின் பெயரால் சிவாஜி ஐயாவுக்கு முதன்முதல் இவ்விருது வழங்கப்பட்டது. இப்போது அண்ணா சிவாஜியுடன் தங்கை லதாவும் சங்கமித்து விட்டார்.

**- வீணை மைந்தன்**

# இவ்வார ராசிபலன்

## 11-02-2022 வெள்ளி தொடக்கம் 17-02-2022 வியாழன் வரையும்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** துணிவோடு செயல்படும் வாரம். நல்ல செய்தி நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். அரசியல் ஆசை நிறைவேறும். மாற்றங்களை சந்திப்பீர்கள். தடைகள் அகலும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். பங்குச்சந்தையில் லாபம் தரும். பூமியால் லாபம் உண்டு. வயிறு உபாதைகள் வந்து போகும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. உயர்பதவி தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெற்றோர்களால் பெருமை சேர்க்கும். முயற்சிகள் பலிதமாகும். அரசு வழி காரியங்களில் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். சேமிப்பு அதிகரிக்கும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 5,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Y




**ரிஷபம்:** ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும் வாரம். பணியாட்களிடம் கவனம் தேவை. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். விவசாயம் லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பங்கள் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். நீண்ட தூரம் பயணம் லாபம் தரும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வாய்ப்பு வரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்பச் சுமை கூடும். ஆண்களின் அதிகாரம் உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,1,7
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,D




**மிதுனம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். கொண்டாட்டங்கள் கூடும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உத்தியோக உயர்வு கிட்டும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களால் வெகுமதி கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். நல்ல செய்திகள் நாடி வரும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. புரியாத சந்தோஷம் கூடும். வாய்பேச்சில் நிதானம் தேவை. வெளியூர் பயணம் வெற்றி தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெருமைமிக்க வாரமாகும். ஆண்களின் அதிகாரம் உயரும். அவமானங்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். மனைவி உறவில் ஒற்றுமை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அமையும். பழைய பாக்கிகள் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**கடகம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும் கிடைக்கும் வாரம். சகோதரியினால் நன்மை உண்டு. கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான சூழ்நிலை அமையும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றித்தரும். புதிய கடன் வாங்க நேரிடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வரவுகள் அதிகமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அணிகலன்கள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். தாய், தந்தை உதவி உண்டு. பயணம் வெற்றி தரும். விருந்தினர் வருகையுண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. கணவன், மனைவி உறவு மேம்படும். உடல்நலம் மேம்படும். தீர்த்த யாத்திரை உண்டு. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுகளால் வீண் வம்பு அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 5,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K




**சிம்மம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். குடும்ப விஷத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். திக்கற்ற நிலை மாறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உறவினர் பகை ஏற்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு அதிகரிக்கும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். நலமே விளையும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,H




**கன்னி:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் வாரம். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். விளையாட்டில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். உறவினரால் உதவிகள் கிட்டும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். மனநிம்மதி கூடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவு குறையும். வீடு தேடி வெற்றி வரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 3,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**துலாம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். செயல்களில் துணிவு கூடும். நினைத்த விஷயம் நிறைவேறும். பயண முயற்சி பலன் தரும். ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் கவனம் தேவை. பொருளாதாரம் மேம்படும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். ஏற்றம் அதிகரிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். மாலை நேரப் பிரார்த்தனை மனஅமைதி தரும். தனவரவு பெருகும். மாங்கல்ய நமஸ்காரம் கூடிவரும். பணவரவு திருப்தி தரும். பாகப்பிரிவினை ஏற்படுத்தும். அலைபேசி தகவல் அலைச்சல் அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். தேவைகள் பூர்த்தியாகும். விவேகமான பேச்சுகளால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். தொழில்போட்டி மறையும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் லாபம் தரும். இனிய தகவல் வந்து சேரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,O




**விருச்சிகம்:** ஏற்றுமதி தொழில் லாபம் தரும் வாரம். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வேலைப்பளு கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். காரியங்கள் கைகூடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. புதுமையை விரும்புவீர்கள். வீட்டுத்தொல்லைகள் விலகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். வியாபாரம் வெற்றி தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். குழப்பங்கள் நீங்கும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பித்தளைத் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,I




**தனுசு:** மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும் வாரம். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புக்கள் விலகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். முன்கோபத்தை தவிர்க்கவும். இடமாற்றம் நன்மை தரும். பங்குச்சந்தை லாபம் தரும். மனஅமைதியும், மகிழச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெயர் புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புகள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். பணப்புழக்கம் சரளமாகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். கடன் பிரச்சனை தீரும். பொன், பொருள் சேரும். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும். சோதனைகள் நீங்கும். கனவு தொல்லை உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. கடவுள் பிரார்த்தனை கைகொடுக்கும். விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,3,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X





**மகரம்:** சகோதரியினால் லாபம் தரும் வாரம். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்திகள் கூடி வரும். விவசாயம் லாபம் தரும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய பொருள் சேரும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சட்டம் சாதகமாகும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். அரசியல் லாபம் தரும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடிவரும். நூதன முயற்சி தடைப்படும். உத்தியோகம் உன்னதம் தரும். கல்வித் தடை ஏற்படும். மாற்று தொழில் உருவாகும். வேற்று இன நட்பு கிட்டும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். மனை யோகம் உண்டு. வறுமைகள் விலகும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. மனைவி பிரார்த்தனை மாற்றம் தரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். மனக்கலக்கம் ஏற்படும். கடன்பிரச்சனை குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சோட்டானிக்கரை பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,I




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். பணிவு அவசியம். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. கனவு பலிதமாகும். குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். எண்ணங்கள் ஏற்றம் தரும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். பொறுமையைக் கையாள வேண்டும். முதுகில் வலி வந்து சேரும். மனோபயம் ஏற்படும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. வியாபாரம் செழிக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புகளால் உதவி உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வாய்ப்புக்கள் வந்து போகும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். காரிய வெற்றி உண்டு. பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கமிஷன் தொழில் லாபம் தரும். பதவி உயர்வு கிட்டும். எள் தானம் ஏற்றம் தரும். மனிதநேயம் மிகுதியாகும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. காலை நேரத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தாய் மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 5,1,8,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மீனம்:** வாயில் தேடி வாய்ப்பு வரும் வாரம். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்ப சுமை கூடும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். திடீர் பயணம் உற்சாகம் தரும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். விரக்திகள் மறையும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கல நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இனம் புரியா சந்தோ'ம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவி கிடைக்கும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். வருமானம் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். கோரிக்கைகள் நிறைவேறும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 5,7,9,2
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING


இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்
கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'
நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.
கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.
சிறிய படைப்புக்களை
416 732 1608
என்னும் WHATSAPP
இலக்கத்திற்கும்
அனுப்பலாம்.
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
இலங்கைச் சிறப்பிதழில்
பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.
தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2
மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE
Serving the Tamil Community of Greater Toronto
உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.
கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.
உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.
CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759
இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
Pre-Arranging – A Wise Choise
FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death
EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker — Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்

LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTORSEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
Call SEYON CHANDRAKUMAR
RE/MAX ROYAL PROPERTIES
BUYING SELLING INVESTING

உதயம் 1349 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday February 11, 2022

# கனடாவில் தாய் மற்றும் இரு பிள்ளைகளை முக்கொலை புரிந்தவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படவுள்ளது




கனடாவின் ஏஜெக்ஸ் நகரில் ஒரு தாய் மற்றும் அவரது இரு பிள்ளைகளையும் கொலை செய்த குற்றச்சாட்டில் விசாரணையை நீண்ட காலமாக எதிர்கொண்ட ஒரு நபருக்கு தீர்ப்பு வழங்கப்படும் நாள் மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் கிழக்கு பகுதியில் நடந்த இந்த கொலை வழக்கில் கைதாகியுள்ள 33 வயது கோர்னி பென் என்பவர் மீதான மூன்று கொலை வழக்குகளும் நிரூபிக்கப்படவில்லை என்றாலும் அரச தரப்பு வழக்கறிஞர்கள் தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வாதிட்டனர்.

*(தொடர்ச்சி உள்ளே 11ம் பக்கத்தில்)*

## Mayor of Dollard Des Ormeaux – Montreal had proclaimed January as Tamil Heritage Month, within the Municipality.

## மொன்றியால் Dollard Des Ormeaux நகர சபையானது தை மாதத்தை 'தமிழர் மரபுரிமை மாதமாக' அங்கீகரித்துள்ளது



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பல மாநகர சபைகளும் மாகாண அரசும். அதற்கு மேலாக கனடாவின் மத்திய அரசும் தை மாதத்தை எமது 'தமிழர் மரபுரிமை மாதமாக' அங்கீகரித்துள்ள இந்த வேளையில் இந்த வருடத்தில் மொன்றியால் வாழ் பல தமிழ் அன்பர்களின் வேண்டுகோளையும் அவர்களின் அன்பையும் ஏற்று அங்குள்ள **Dollard Des Ormeaux** நகர சபையானது தை மாதத்தை 'தமிழர் மரபுரிமை மாதமாக' அங்கீகரித்துள்ள நற்செய்தியை இங்கு பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

*(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

## "எந்தவொரு அரசியல் தீர்வையும் இலங்கையின் சிங்கள பேரினவாதப்பூதம் அழித்துவிடும்"

### – பிரதமர் வி.உருத்திரகுமாரன்

சிங்கள இனவாதக் கட்டமைப்பாக இறுகிப் போயுள்ள இலங்கையின் அரச கட்டமைப்புக்குள் எந்தவொரு அரசியல்தீர்வுக்கும் சிங்கள இனவாதம் இடம் தரப்போதில்லை என்பதே வரலாற்று உண்மை எனத் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அசராங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், சுனாமி இயற்கை பேரிழிவில் இருந்து மக்களை மீட்பதற்கான மனிதநேய கட்டமைப்பயே கிழித்துப் போட்டவர்களிடத்தில் அரசியல் தீர்வினை எப்படி எதிர்பார்க்க முடியும் என கேள்வியெழுப்புள்ளார்.

13வது திருத்தம் சட்டம் தொடர்பில் சமீபத்தில் இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பபட்ட கடிதம் தொடர்பாக கருத்த தெரிவிக்கையில், திரு உருத்திரகுமாரன் தெரிவித்ததாவது"

புத்தாண்டு செய்தியில் நான் கூறியபடி எமக்கான போராட்ட அரங்கினை நாங்களே தீர்மானிக்க வேண்டும். எமக்கான போராட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை நாமே வடிவமைக்க வேண்டும். *(தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*

## Ontario Government's Seniors Community Grant allocated to the Scarborough Frontline Community Centre

## ஸ்காபுறோவில் Frontline Community Centre அமைப்பிற்கு ஒன்றாரியோ அரசின் நிதி உதவி



கனடா- ஸ்காபுறோவில் நீண்ட காலமாக இயங்கிவரும் **Frontline Community Centre.** சேவை வழங்கும் அமைப்பிற்கு ஒன்றாரியோ அரசின் நிதி உதவித் தொகையை ஒன்றாரியோ மாகாணத்தின் முதியோர் நலன் பேணும் விவகாரங்களுக்கான அமைச்சர் கௌரவ ரேமண்ட் சோ அவர்கள் அண்மையில் நேரடியாக வழங்கினார்.
இதற்கா அறிவிப்பை தமிழ் ஊடகங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அவர் கடந்த வெள்ளிக்கிழமையன்று அறிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 7ம் பக்கத்தில்)*

## கனடா – ஸ்காபுறோ நகரில் 'சப்த சாகரம்' நண்பர்கள் குழு நடத்திய 'பொங்கல் விழா'



கனடாவின் மத்திய மாகாண உள்ளாட்சி அமைப்புக்களான மாநகர சபைகள் என கனடாவின் 3 வகையான அரசாங்ககள் அங்கீகரித்துள்ளன.
இந்த வரிசையில் அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பெற்ற இந்த பொங்கல் விழாவும். 'தமிழர் மரபுரிமை நாளும்' தமிழர் அமைப்புக்களால் கொண்டாடப்படுவதற்கு 'கொரோனா' என்னும் கொடிய நோய் தடையாக அமைந்துவிட்டது.

ஆனாலும் நாம் இங்கு படங்களில் காணும் கனடா -ஸ்காபுறோ 'சப்த சாகரம்' நண்பர்கள் குழு நடத்திய 'பொங்கல் விழா' கனடாவில் மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற ஒரு விழாவாக கணிக்கப்பெறுகின்றது.

*(தொடர்ச்சி உள்ளே 7ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker

JOGO
DIGITAL THERAPEUTICS + DIGITAL CLINIC
MAKING MUSCLE AND BRAIN WORK TOGETHER
2900 Markham Rd, Majestic City Mall, Unit A9, Scarborough, Ontario, M1X 1E6 Canada
Phone: +1 (416) 723-2000
Toll Free : +1 (877) 569-8282
Fax: +1 (647) 946-6480
Web: www.jogohealth.com
Email: torontoclinic@jogohealth.com